சமாதான வீரர்

...ப்ளிஷிங் ஹவுஸ்
...கர் : : சென்னை-17.

சமாதான வீரர்

(தமிழ்த் துணைப் பாடநூல்)

[ஒன்பதாம் வகுப்பு]

வித்துவான். ம. வி. இராகவன்,
தலைமைத் தமிழாசிரியர்,
ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் உயர்நிலைப் பள்ளி,
தியாகராய நகர், சென்னை-17.

பிச்சை பப்ளிஷிங் ஹவுஸ்
14, உஸ்மான் ரோடு :: சென்னை-17

முதற் பதிப்பு: டிசம்பர், 1968
பதிப்புரிமை

[10.9 கிலோ கிராம் வெள்ளைத்தாளில்
அச்சிடப்பட்டது]

விலை ரூ. 1-00

பாரதம் பிரஸ்,
சென்னை-17.

முன்னுரை

சமாதான வீரரும்,|அமெரிக்கா நாட்டின் நீகிரோத் தலைவருமாகிய புனிதர் மார்டின் லூதர் கிங்கின் வாழ்க்கை வரலாறு கூறும் இந்நூல் உயர்நிலை வகுப்புக் களில் பயிலும் மாணவர்கட்குத் துணைப் பாடமாக அமையும் வகையில் ஆக்கப் பெற்று வெளியிடப் படுகின்றது.

உலக சமாதானத்திற்காக உழைத்த உத்தமப் பெருமக்கள் பலர். அவர்களுள் அண்மையில் நம்மிடையே வாழ்ந்த் காந்தியடிகள் தனிச் சிறப்பு வாய்ந் தவர். அந்த இலட்சியத்தை அடைய அவர் கண்டு கடைப்பிடித்த் வழி அன்புவழி. அதே இலட்சியத்தை நோக்கி அவ்வழியையே பின்பற்றி அரும்பணியாற்றி, உலகப் பெரும் பரிசாகிய 'நோபல் பரிசு' பெற்ற நோன்மையாளர் லூதர் கிங். உயர்ந்த இலட்சியத்திற் காக உயிர்த்தியாகம் செய்து உலக மக்களின் உள்ளத்தில் நிலையான இடம் பெற்ற பெரியாராகிய அவர் வாழ்க்கையும் தொண்டும் வருங்கால உலகக் குடிமக்களாகிய மாணவர்கள் அறிந்து கொள்ள வேண்டுவனவாகும். மாணவர்கள் வாழ்க்கைக்கு ஆக்கம் தரும் அரிய உண்மைகளும் செய்திகளும் அவர் வாழ்க்கையில் மலிந்துள்ளன.

அவருடைய சீரிய வாழ்க்கையைச் சிறப்புற விளக்கும் இச்செந்தமிழ் நூலைக் கல்வித் துறையினரும், ஆசிரிய அன்பர்களும் விரும்பியேற்று மாணவர்க்கு விருந்தாக வழங்கி, அவர்கள் அரும் பயன் நுகர உதவுவர் என உறுதியாக நம்புகின்றோம்.

ஆசிரியர்

உள்ளுறை

			பக்கம்
1.	தோற்றுவாய்	...	1
2.	உழைப்பும் உயர்வும்	...	6
3.	சேரியும் கோயிலும்	...	13
4.	பள்ளிக்கூட நாட்கள்	...	18
5.	எண்ணித் துணிக கருமம்	...	23
6.	கனவு ஆரம்பம்	...	29
7.	தெரிந்தெடுத்தல்	...	34
8.	தயாராதல்	...	39
9	கனவு விளக்கம்	...	44
10.	பொறி பிடித்துக் கொள்கிறது	...	46
11.	சுதந்திரத்திற்காக நடத்தல்	...	52
12.	நாங்கள் வெற்றி பெறுவோம்	...	60
13.	கனுக் கண்டேன்	...	66
14.	பரிசு பெற்றுகிவிட்டது	...	70
15.	நெருக்கடி நிலைமை	...	73
16.	உயிர்த்தியாகம்	...	80
17.	சொல்லும் செயலும்	...	90

மார்ட்டின் லூதர் கிங்



1. தோற்றுவாய்

'அமைதி! அமைதி!!' என்று அரற்றுகின்றது வேதம். 'சமாதானம்! சமாதானம்!!' என்னும் குரல் உலக சரித்திரத்தின் ஒவ்வோர் ஏட்டிலும் இடைவிடாது கேட்டுக்கொண்டு வந்திருக்கிறது. ஒவ்வொரு தனிமனிதனும் அல்லும் பகலும் 'அமைதி வேண்டும்' என்று அலறிக் கொண்டிருக்கிறுன். ஆனுல் அந்த அமைதி — சமாதானம் இன்று வரையில் அடையப் படாத ஒன்ருகவே இருந்து வருகிறது.

அமைதியின்மை என்பது ஓர் இடத்தில் ஒரு வடிவில் காணப்படுவதாய் இல்லை. அஃது 'அங்கு இங்கு எனுதபடி எங்கும்' நிறைந்து காணப்படுகிறது. அமைதியின்மை இடம் பெருத இடமே இப்பரந்த உலகில் எங்கும் இல்லையெனலாம். அஃது ஒவ்வோர் இடத்தில் ஒவ்வொரு விதமாக நிலவலாம். ஆனுல் அதன் அடிப்படைக் காரணம் ஒன்றே.

இவ்வமைதியின்மையைக் களைந்து, அமைதியை நிலைபெறச் செய்யும் முயற்சியும் தொடர்ந்து நடந்து வந்துள்ளது. சிலர் அமைதிக்கு இடையூருக உள்ள அசுரச் சக்திகளை — அரக்கத் தன்மைகளை அழிப்பதன் மூலமாக, அமைதியை ஆக்கலாம் என்று கருதி அவ்வகையில் முயன்றனர். சிலர், போரே சமாதானத்திற்கு வழி என்று கொண்டனர். மற்றும் சிலர் இவ்வழிவு முறைகளை விடுத்து ஆக்கத் துறையில் சிந்தித்து, செல்வத்தைச் செழிக்கச் செய்வதனுல்

அமைதியை அடையலாம் என்றும், அறிவை வளர்ப்ப தொன்றே அமைதிக்கு அடிகோலும் என்றும், கண்டு அம்முறைகளில் முயல்வாராயினர்.

சரித்திர காலத் தொடக்கத்தில் தோன்றிய கௌதம புத்தர், ஆக்க முறையில் அமைதிக்காக அரும்பாடு பட்டார். அரசர் மரபில் தோன்றிய அவர் அரண்மனை வாழ்வையும் அரச போகத்தையும் துறந்து, மனைவி மக்களையும் மறந்து, அமைதிக்கு வழிதேடிக் காடு காடாக அலைந்தார்; ஒவ்வொருவரும் ஆசையை விட்டொழித்தால் உலகில் அமைதியைக் காணலாம் என்று கண்டார்; தாம் கண்ட உண்மையைத் தரணிக்கெல்லாம் எடுத்து ஓதினர்.

ஆண்டவன் அருளால் அகிலம் உய்ய அவதரித்த ஏசுபெருமான் 'அன்பே அமைதிக்கு வழி' என்று உபதேசித்தார். "உன்னைப் போலவே பிறரையும் எண்ணி அன்பு செய்; பகைவனிடமும் நேயம் கொண்டு பழகு; உன் ஒரு கன்னத்தில் அடித்தவனுக்கு மறு கன்னத்தைக் காட்டு" என்று போதித்தார்.

இவர்கள் தனிமனிதனின் உள்ளத்தை அமைதியடையச் செய்வதன் மூலமாகச் சமூகத்தில், நாட்டில், உலகில் அமைதியைத் தோற்றுவிக்க முயன்றனர்கள். இவர்களுடைய முயற்சி, நன் மக்களின் சிந்தனையைத் தூண்டி நம்பிக்கையைத் தோற்றுவித்தது.

பிற்காலத்தில் தோன்றிய பெருமக்கள் பலர், உலகியல் முறையில் அமைதிக்கு வழிகாணும் முயற்சியில் ஈடுபட்டனர். அரசியல், சமூக, பொருளாதார நிலைகளில் உள்ள வேறுபாடுகளும், ஏற்றத் தாழ்வுகளுமே உலகில் அமைதியின்மைக்கு உற்ற காரணங்களாகும் என்று கருதி, அவற்றைக் களைந்து அமைதிக்கு ஆக்கம் தர முற்பட்டனர்.

அவர்களில் சிலர், படைவலிமை கொண்டு, அதனை நடைமுறைக்குக் கொண்டுவரக் கருதினர்; சிலர் அதிகாரத்தின் மூலம் சட்டத்தைக் கொண்டு அதனைச் சாதிக்கலாம் என நம்பினர்; வேறு சிலர், மக்கள் உணர்ச்சியைத் தூண்டிப் புரட்சியைத் தோற்றுவிப்பதன் மூலமாக அதனை விரைவில் எளிதாக அடைந்துவிடத் துணிந்தனர். இவற்றின் விளைவாகப் போரும், பூசலும், அடக்கு முறைகளும், வன்செயல்களும் தலைவிரித்தாடின.

இந்நிலையில் நம் உத்தமரான காந்தியடிகள் தோன்றினார். அடிகள் உலகின் அவலநிலை கண்டு கவலை கொண்டார். உலகெங்கும் மக்களினத்தின் ஒரு பகுதியினர் 'தாழ்வுற்று வறுமை விஞ்சி விடுதலை தவறிக் கெட்டுத்' துன்புறுவது கண்டு அவர் அன்புள்ளம் உருகியது. அவர் அக்கொடுமையைக் களைந்து உலகில் அமைதிக்கு அடிகோல உறுதி கொண்டார்.

காந்தி அடிகள், அவருக்கு முன் அமைதிக்காக உழைத்த ஆன்றோர்களின் வழி முறைகளை ஆராய்ந்தார்; முன்னோர் கையாண்ட இருவேறு முறைகளிலும் உண்மை இருப்பதைக் கண்டார்; பின் முறையிலுள்ள வன்முறையை நீக்கி, முன் முறையோடு இணைத்துச் சில திருத்தங்களோடு கையாளத் துணிந்தார். அது தனி மனிதரைப் பண்படுத்தவும், அவர்களைக் கொண்டு அமைதிக்கு இடையூறாக உள்ள வேறுபாடுகளையும் ஏற்றத் தாழ்வுகளையும் எதிர்க்கவும், களையவும் ஏற்ற சாதனமாகும் என்று உறுதியாக எண்ணினார்; அதற்கு ஏற்பச் சத்தியம், தியாகம், அஹிம்சை என்னும் மூன்றையும் அங்கங்களாகக் கொண்ட 'சத்தியாக்கிரக' முறையை வகுத்துக் கொண்டார்.

அடிகள் தென்ஆப்பிரிக்காவில் இருந்தபொழுது தாம் கண்ட புதுமுறையை அங்குச் சோதனை செய்து பார்க்க முற்பட்டார்; அதற்கு ஏற்பத் தம்மைப் பண்படுத்திக் கொண்டு சோதனையில் இறங்கினார். சோதனையில் அம்முறை வெற்றி கண்டது. கொடுமையை எதிர்க்கவும், அமைதியை வளர்க்கவும் அதுவே சிறந்த சாதனம் என்பது தெளிவாயிற்று.

பின்னர் அடிகள், தம் தாய்நாடாகிய பாரதத்தில் அவ்வற்புத ஆயுதத்தை முழு அளவில் பயன்படுத்த முனைந்தார்; முதற்கண் சத்தியத்தைக் கடைப்பிடிக்கவும், தியாகம் செய்யவும், அஹிம்சை நெறியில் தவறாது நடக்கவும் மக்களுக்குப் பயிற்சி அளித்தார்; அப்பயிற்சியில் பண்பட்ட மக்களைக் கொண்டு சமூகக் கொடுமைகளைத் தகர்க்கவும், அரசியல் அடிமைத் தளையை அறுக்கவும், சத்தியாக்கிரகப் பெரும் போரைத் தொடங்கினார்; போரின் இடையில் நேர்ந்த சோதனைகளைக் கடந்து இறுதியில் வெற்றிக்கொடி ஏந்தினார். அவ்வெற்றியைக் கண்டு உலகமே வியந்தது; சரித்திரம் காணாத புதுமை என்று அதனைப் போற்றியது.

உலகப் பெருமக்களில் பலர், அப்புதுமுறையைப் பற்றி அறிய முற்பட்டனர். பலர் அதனை ஆராயத் தலைப்பட்டனர். அவர்கள் அதன் அருமை கண்டு பெருமையாகப் பேசிப் பாராட்டினர். ஆனால் அதனைத் தாமும் கையாண்டு அமைதி காணத் துணிந்தவர் மிகச் சிலரே. அவருள் அடிகளின் சத்தியாக்கிரக முறையை அப்படியே மேற்கொண்டு, கொடுமையை எதிர்த்துப் போர் முரசு கொட்டிய சமாதான வீரர் மார்ட்டின் லூதர் கிங் ஒருவரே ஆவர்.

மார்ட்டின் லூதர் கிங் அமெரிக்காவில் கிறித்தவ மத குருவாக வாழ்க்கையைத் தொடங்கியவர்.

அமெரிக்கா நாடு செல்வச் செழிப்பிலும், அறிவு வளத்திலும், படை வலிமையிலும் உலகிலேயே முதலிடம் பெற்றிருந்தும், அங்கு மக்கள் வாழ்க்கையில், அமைதி இல்லாதிருப்பது அவருக்கு மிக்க வேதனை அளித்தது. நிற வேற்றுமையும், அது காரணமாக நாட்டுக் குடிமக்களின் ஒரு பகுதியினரான நீகிரோக்கள் உரிமையின்றி அடிமைப் படுத்தப்பட்டிருப்பதுமே அங்கு அமைதியைக் குலைத்து வந்தன. அமெரிக்காவில் மட்டு மன்றி உலகின் வேறு பல இடங்களிலும் நிறவேற்றுமைப் பேய் தலைவிரித்தாடியது. அதனால் உலக சமாதானம் உருக்குலைந்து வந்தது.

மார்ட்டின் லூதர் கிங், அமெரிக்காவில் அக்கொடு மையை எதிர்த்துக் களைந்து அமைதியை நிலைபெறச் செய்தால், அஃது உலகில் அக்கொடுமை மறையவும், சமாதானம் தோன்றவும் வழிசெய்யும் என்று கருதினார். காந்தியடிகள் கண்டு, கையாண்டு, வெற்றிகொண்ட சாத்துவிக சத்தியாக்கிரக முறையே அதற்கு ஏற்ற சாதனம் என அவர் உறுதியாக நம்பினார்; அதனையே தாமும் மேற்கொண்டு, அடிகளின் அடிச்சுவட்டையே பின்பற்றிப் போராட்டத்தைத் தொடங்கி நடத்தினார். இடையில் பல இன்னல்களும் இடுக்கண்களும் அடுக்கடுக் காக அவரை அடர்த்தன. அவர், அவை அனைத்தையும் பொறுமையாக ஏற்றுக் கொண்டு, மெய்வருத்தம் பாராமலும், பசி நோக்காமலும், கண் துஞ்சாமலும், எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளாமலும் கருமமே கண்ணாகச் செயலாற்றினார். உலகம், அமைதிக்கு உழைத்த அருளாளர் வரிசையில் அவருக்கும் இடம் அளித்தது. அதற்குரிய நோபல் பரிசும் அவரை நாடி வந்தது.

செயற்கரிய செய்து சிறப்பெய்திய அப்பெரியாரின் வாழ்க்கை வரலாற்றை இனிக் காண்போம்.

2. உழைப்பும் உயர்வும்

"அம்மா, நானும் ஒரு நாள் இவர் மாதிரி உயர் தரமான வார்த்தைகளையெல்லாம் பேசப்போகிறேன்" என்று மார்ட்டின் லூதர் கிங், தம் தாயின் காதோடு கூறினார்.

அப்போது அவர்கள் இருவரும் ஒரு மாதா கோயிலில் அமர்ந்து, ஒரு சமயபோதகரின் உபதேசப் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தனர்.

அன்னை அல்பர்ட்டா கிங், பதினேரு வயதான தன் மகனை அன்போடும், பெருமையோடும் நோக்கினாள்.

"நீ நிச்சயமாய்ச் செய்வாய் குழந்தாய்" என்று பதிலுக்குச் சொன்ன அவள், 'முன்னே, இவன் அப்பாவுக்கு, உயர்ந்த வார்த்தை மிகவும் கஷ்டப்பட்டு வந்தது; ஆனால், இவனுக்குச் சுலபமாக வந்துவிடும்' என்று தனக்குள் நினைத்துக்கொண்டாள்.

மார்ட்டின் பெரியவனாகி, ஒரு வேலைக்குப் போவதாயிருந்தால், அவன் அநேகமாகத் தன் தந்தையின் இடத்தில், எபனெசர் பாப்டிஸ்ட் கோயிலின் மதகுருவாகப் போவான் என்பது அவளுக்குத் தெரியும். ஆனால், அவன் அப்பா மார்ட்டினுக்கு ஒரு வேலையும் தயாராய்க் காத்துக்கொண்டிருக்கவில்லை. உலகத்தில் தமக்கு ஓர் இடம் ஏற்படுத்திக்கொள்ள அவர் போராடினார்; கடுமையாகவும், முரட்டுத்தனமான உறுதியுடனும் உழைத்தார்.

பாடல் குழுவினர் கணீரென்ற குரல்களில் பாடுவதைப் பாதி மட்டுமே கேட்டவண்ணம், அன்னை கிங் சிந்தனையில் ஆழ்ந்தாள்.

எபனெசர் பாப்டிஸ்ட் கோயிலின் மதகுருவாக முப்பத்தேழு வருடகாலம் அவளது தந்தை ஆடம் டேனியல் வில்லியம்ஸ் பணியாற்றினர். அதை அவரே கட்டிமுடித்தார் என்று கூறவேண்டும். தமது மாமஞரான அவர் இறந்த பிறகு, மார்ட்டின், மதகுரு பதவியை ஏற்ருர்; ஆனுல், அதற்கு முன்னர் அவர் மிகவும் சிரமப்பட்டுப் படிப்படியாக முன்னேறவேண்டி யிருந்தது. ஒரு நிலக் குத்தகைதாரரின் புதல்வர் அவர். ஜார்ஜியாவில் உள்ள ஸ்டாக் பிரிட்ஜில், ஒரு பண்ணை வீட்டில், பத்தொன்பதாம் நூற்ருண்டு முடிவுறும்போது, அதாவது 1899-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19-ஆந் தேதியன்று அவர் பிறந்தார்.

அவர் பள்ளிக்கூடத்தை எட்டிப் பார்ப்பதற்கு முன்னரேயே, தம்முடைய பத்துச் சகோதரர்கள் சகோதரிகளுடனும் சேர்ந்து, வயல்களில் வேலை செய்து வந்தார். சிறிதளவு விளைச்சலே அளித்த தங்களது பருத்தி, மக்காச்சோள வயல்களில் பயிரிடவும், அறுவடை செய்யவும் அவர் உதவி வந்தார். அவருக்குப் பதினைந்து வயதாகும் வரை, அவர் எந்த ஒரு வருடத்திலும், தொடர்ந்து மூன்று மாதங்களுக்கும் அதிகமாகப் பள்ளிக்கூடம் சென்றதே இல்லை.

பள்ளிக்கூடத்திற்குச் சென்ற நாட்களிலும் அவர் வீட்டு வேலைகளில் சிலவற்றைச் செய்தாக வேண்டி யிருந்தது. அவர், விடியற் காலையிலேயே எழுந்திருந்து, குடும்பத்தின் இரண்டு கோவேறு கழுதைகளையும் தேய்த்துச் சுத்தப்படுத்துவார்.

அதனுல், "ஏய்! உன்னிடம் கோவேறு கழுதை நாற்றம் அடிக்கிறது" என்று அவர் பள்ளித் தோழர்கள் அவரை எள்ளி நகையாடித் தொந்தரவு செய்வார்கள்.

''என்னிடம் கோவேறு கழுதை நாற்றமடிக்கலாம். ஆனுல், உங்களைப்போல கோவேறு கழுதை மூளை உடையவனல்லன் நான்'' என்று அவர் ஒருமுறை வெடுக்கென்று பதிலளித்தார்.

அவருக்கு எப்போதும், மிகவும் பிடித்த பாடம் கணக்கு ஆகும். அதுதான் அவருக்கு அதிக அளவில் புரிந்தது. தவிர, அவருடைய மற்றப் பாடங்களைவிட அதுதான், அவரது தினசரி வாழ்க்கையோடு அதிகமாகத் தொடர்பு கொண்டும் இருந்தது

தம்முடைய பாடப்புத்தகங்களில் இல்லாத பயிற்சிக் கணக்குகளைப் பலமுறை போட்டுப் பார்ப்பது அவர் வழக்கம். பின்வருவது போன்ற கணக்குகளைத் தமக்குத் தாமே போட்டுக்கொண்டு அவற்றிற்கு விடை கண்டு பிடிக்க முயல்வார்:—

''எங்களுள், அம்மாவைத் தவிர அநேகமாக மற்ற எல்லாரும் வயல்களில் வேலை செய்கிறோம்; ஞாயிற்றுக் கிழமைதவிர, மற்ற எல்லா நாட்களிலும் பகல் முழுதும் வேலை செய்கிறோம். அதாவது, வழக்கமாகப் பன்னிரண்டு பேர் உழைக்கிறோம். வேலை செய்யும் அந்த நேரங்களை எல்லாம், எங்கள் எண்ணுன பன்னிரண்டால் பெருக்கினுல் ஏராளமான மணிக்கணக்கு ஆகும்!''

இப்படிக் கணக்கிட்டுக் கொண்டு மேலும் தொடர்ந்து யோசனை செய்வார்.

''ஆனுல், எசமானர் (பண்ணைக்குச் சொந்தக்காரரான வெள்ளையர்) இதில் பாதி நேரங்கூட வேலை செய்வதில்லை. இருந்தாலும் நாங்கள் பன்னிரண்டு பேர் சம்பாதிப்பதிலும் பாதியை எடுத்துக்கொண்டு விடுகிறுர். இது கணக்கு மாதிரியே இல்லையே!''

இவ்விதம் அவர் தமக்குத்தாமே முனகிக் கொள்வார்.

மார்ட்டினின் கணித ஞானம் ஒரு குறிப்பிட்ட வருடத்தில், கிங் குடும்பத்தினருக்கு நல்லவிதத்தில் பயன்பட்டது அவரது தந்தையான ஜேம்ஸ் ஆல்பர்ட் கிங்கின் மகசூலை, எசமானர் மதிப்பிட்டுக் கொண்டிருந்தார். அப்போது ஆல்பர்ட் கிங், பேசாமல் நின்றுகொண்டிருந்தார். அவருக்கு எழுதவோ, படிக்கவோ அவ்வளவாகத் தெரியாது. ஆகையால், எசமானர், கணக்குகள் தெரிந்தவர் என்பதால், அவரிடம் அதிக மதிப்பு வைத்திருந்தார். எசமானர் கணக்குப் பார்த்துவிட்டு ஆல்பர்ட் கிங்கின் பக்கம் திரும்பினர். "நல்லது! இரண்டு பேரும் ஒருவருக் கொருவர் ஒன்றும் கொடுக்க வேண்டியதில்லை. கணக்குச் சரியாகப் போய்விட்டது" என்று இளித்துக்கொண்டே கூறினர் அவர்.

'சரியாகப் போய்விட்டது' என்று எசமானர் கூறிய தற்கு அர்த்தம் என்ன தெரியுமா? கிங்கின் பருத்திக்கும், அவர் முந்தின மாரிக்காலத்தில் எசமானர் கடையில் உணவும், மற்றச் சாமான்களும் வாங்கியதற்கும் சரியாகப் போய்விட்டது என்பதுதான். அதற்கு இன்னொரு அர்த்தமும் உண்டு. கிங்கும், அவரது குடும் பத்தினரும், பருத்தி விளைவிப்பதற்காகப் பல மாதங்கள் உழைத்ததற்கென்று பணமாக எதுவும் அவருக்குக் கிடைக்காது. ஆகவே, அடுத்த அறுவடை வரையில் ஒரு வருட காலத்தையும், பணமேதுமின்றியே கழிக்க வேண்டியதுதான்; அதன் விளைவாக, அடுத்த வருடம் கணக்குத் தீர்க்கும்போதும், தாம் மறுபடியும் எசமானரின் கடைக்குக் கடன்பட்டிருப்போம் என்பது கிங்குக்குச் சந்தேகமில்லாமல் தெரிந்தது. தாங்கள்

எல்லாருமே எவ்வளவுதான் கடுமையாக உழைத்தாலுங் கூட, முன்னேற முடியாது என்றே அவருக்குத் தோன்றியது.

ஆனால், அந்த வருடம் விஷயம் வேறுவிதமாக இருக்கவேண்டியதாயிற்று. சிறுவரான மார்ட்டின், எசமானர் கணக்குப் போடுவதைக் கழுகுபோல் கவனித்துக்கொண்டிருந்தார். அவருக்கு ஒரு வெள்ளையரை நேருக்கு நேர் பார்த்துப் பேசத் தைரியமில்லை. ஆனால் அவர் தம் தந்தையினிடம், ''அப்பா! எசமானர் ஏழரை மூட்டை விதையைக் கூட்டிக்கொள்ள மறந்துபோய் விட்டார். அது கிட்டத்தட்ட ஓராயிரம் டாலர் வரும்!'' என்று கூறினார்.

அரை ஆயிரம் டாலர்களே இங் குடும்பத்தினருக்குப் பெரிய செல்வம் போலத் தோன்றிற்று. மார்ட்டின் தமக்குத் தாமே புன்னகை புரிந்துகொண்டார். அத்தனைப் பணமிருந்தால் குடும்பம் முழுதும் நேர்த்தியான உடைகள் உடுத்திக்கொண்டு மாதா கோயிலுக்குப் போகலாமே என்றெண்ணி, அதைப் பற்றிக் கற்பனை செய்து பார்த்தார். அது தம் அன்னைக்கு எத்துணைப் பெருமையாயும் மகிழ்ச்சியாயுமிருக்கும் என்று எண்ணினார்.

ஆனால், எசமானர் அதனைக்கேட்டு மகிழ்ச்சி கொள்ளவில்லை. அவர் விதையைப் பற்றி மறந்து விட்டிருக்கவில்லை. அதை வேண்டுமென்றே கணக்கிலெடுத்துக் கொள்ளாமல் விட்டு விட்டார்.

''ஏய்! நான் விஷமக்காரர்களுக்கு இடங்கொடுக்க மாட்டேன். நீ யார் என்பதை மறந்து விடாதே. நீ உன்னைப் பெரிதாக நினைத்துக்கொண்டு நடந்தாயோ உன்னை என் நிலத்தை விட்டுத் துரத்தியடித்து விடுவேன். ஆமாம், நினைவில் வைத்துக்கொள்; என்ன

நான் சொல்கிறது கேட்கிறதா?'' என்று மார்ட்டினைப் பயமுறுத்தினார் அவர்.

அவர் கூறியது மார்ட்டின் காதில் விழுந்தது. ஆனால், அவர் அதைக் கேட்டுத் திருப்தி அடையவில்லை. அவர், மேலும் தம் சொந்த முறையில் கணக்குப் போட்டுக்கொண்டிருந்தார். ''நாங்கள் எல்லாருமாக அத்தனை மணி நேரம் வேலை செய்கிறோம்; ஆனாலும், ஒழுகும் பழங் குடிசையில் வசிக்கிறோம். எசமானரோ குறைவாக வேலை செய்கிறார்; அப்படியிருந்தும் நேர்த்தியான பெரிய வீட்டில் வசிக்கிறார். எங்களுக்கு மட்டும், ஏன் கடைசியில் ஒன்றும் இல்லாமலேயே போய் விடுகிறது?'' என்று அவர் ஆச்சரியப்பட்டார்.

மார்ட்டினுக்குப் பதினைந்து வயதானபோது அவர் பண்ணையை விட்டுவிட்டு, வேலை தேடி இருபத்தைந்து மைல்களுக்கு அப்பால் உள்ள அட்லாண்டாவிற்குச் சென்றார். விமோசனத்திற்கே இடமில்லாத வாழ்க்கையைச் சகித்துக்கொண்டிருக்க முடியவில்லை அவரால். ஒருவாரம் முழுதும் முதுகெலும்பு ஒடியும் படியாக வேலை செய்வது; பிறகு நிறையக் குடித்து விட்டுச் சிலமணி நேரம் தன்னை மறந்திருப்பது—அது நல்ல வாழ்க்கை என்று அவர் நினைக்கவில்லை. அது அவர் தந்தையாரின் வழி. ஆனால், அது மார்ட்டின் வழி அன்று.

அதிகமான படிப்பு இருந்தால், வாழ்க்கையை மேம் படுத்திக்கொள்ள உதவும் என்பது அவருக்கு ஐயமறத் தெரிந்தது. அந்தப் படிப்பைப் பெறுவதற்காகத்தான் அவர் புறப்பட்டுச் சென்றார். அப்போது வயிறு வளர்ப் பதற்காக அவர் பகலில் வேலை செய்தாக வேண்டி யிருந்தது; அந்தக் காலத்தில் நீகிரோக்களுக்குக்

கிடைக்கக் கூடிய வேலைகள் அனைத்தும் கடின மானவையே.

அவர் ஓர் இரயில் நிலையத்தில் சாமான்கள் ஏற்றப் பட்ட கைவண்டிகளை இழுத்தார்; எஞ்சினுக்குக் கரி போடத் தெரிந்து கொண்டார். அவர் இன்னும் வளரும் பருவத்திலேயே இருந்தார். அவர் தமது முழுப்பலத்தை உபயோகித்தும், தமது சக்தியை மீறியுங்கூட ஒவ்வொரு நாளும் உழைத்து வந்தார். அப்படிப் பாடுபட்டும் கூடப் போதிய சத்துணவு அவருக்குக் கிடைக்கவில்லை.

இரவில் அவர் குளித்துச் சுத்தஞ் செய்து கொண்டு, தமக்கிருந்த ஒரே ஒரு சுத்தமான கருநிற உடையை உடுத்திக்கொண்டு பள்ளிக்கூடத்திற்குச் சென்றார். சில சமயங்களில் அவரால் வகுப்பில் விழித்துக்கொண்டிருக்க முடியாது. பலமுறை, அவர் தன்னம்பிக்கையிழந்து படிப்பை விட்டுவிடவும் எண்ணியதுண்டு. ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை.

உயர்தரப் பள்ளிக்கூடப் படிப்பு முடிவடைதற்காக அவர் பதினொரு வருடகாலம் உழைக்க வேண்டி யிருந்தது. பட்டம் பெற்றபோது அவருக்கு வயது இருபத்தாறு ஆகிவிட்டது.

ஐந்து வருடங்களுக்குப் பின்னர், மோர்ஹௌஸ் கல்லூரியின் பட்டதாரியானார். ஆனால், அதற்கு முன்னரே அவர் ஒரு மதகுருவாகவும், ஒரு கணவ ராகவும், ஒரு தந்தையாகவும் ஆகிவிட்டிருந்தார். அவர் பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருக்கும் போதே அல்பர்ட்டா வில்லியம்ஸ் என்னும் மங்கையை மணந்து கொண்டிருந்தார். அவர்களது முதல் குழந்தை வில்லி கிரிஸ்டின் (கிரிஸ் என்று அழைப்பது வழக்கம்) பாட்டனர் வில்லியம்ஸின் வீட்டில் பிறந்தது. ஜார்ஜியாவைச்

சேர்ந்த அட்லாண்டாவில் ஆபர்ன் அவென்யுவிலுள்ள அவரது வீட்டில், பன்னிரண்டு பெரிய அறைகள் உள்ளன.

கிங், தாம் பிறந்த சீர்கேடுற்ற பண்ணையிலிருந்து நெடு வழி வந்து, முன்னேற்ற மடைந்திருந்தார்.

3. சேரியும் கோயிலும்

மார்ட்டின் லூதர் கிங் (இளையவர்) தான் குடும்பத்தின் நடுப்பிள்ளை. சகோதரி கிரிஸ் பிறந்ததற்கு ஒரு வருடம் பின்னரும், சகோதரன் 'ஏ . டி' பிறப்பதற்கு ஒரு வருடம் முன்னருமாக 1929ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15ஆந்தேதி அவர் பிறந்தார்:— 'ஏ . டி' என்பது ஆல்பிரெட்டேனியல் என்ற பெயரின் முதல் எழுத்துக்களாகும்.

கிங்கின் எல்லாக் குழந்தைகளுமே தங்கள் பாட்டனார் வில்லியம்ஸின் வீட்டில் பிறந்தவர்கள். அந்தக் காலத்தில் ஒரு நீகிரோ தாம் இஷ்டப்பட்ட இடத்தில் வசிக்கலாம் என்று எண்ணுவதற்கில்லை. அமெரிக்க ஐக்கிய நாட்டிலுள்ள எல்லாப் பெரிய நகரங்களிலும், சிறிய பட்டணங்களிலும் நீகிரோக்கள், 'கறுப்பர்கள் பகுதி' என்பதில்தான் வசிக்கலாம். ஐரோப்பிய நகரங்களில், யூதர்கள் சுவர்களால் சூழப்பட்ட 'கெட்டோ' என்ற பகுதிக்குள் அடைந்திருக்கச் செய்யப்படுவார்கள். கிட்டத்தட்ட அவை போன்ற தனிப்பட்ட இடங்களில் தான் நீகிரோக்கள் வசித்து வந்தார்கள்.

கிங் குடும்பத்தினர் ஆபர்ன் அவென்யு என்ற இடத்தில் வசித்து வந்தனர். அந்த இடமும் அதை அடுத்திருந்த சில தெருக்களும் சேர்ந்ததுதான் அட்லாண்டா

'கெட்டோ' பகுதி. அதில் வசித்துவந்த பெரும்பான்மை யினருக்கு ஓர் அம்சம்தான் பொதுவானதாயிருந்தது; அவர்கள் எல்லாரும் நீகிரோக்களாயிருந்ததுதான் அது.

அவர்களுள் சிலர், கல்வி அறிவில்லாதவர்களாய் வயல்களில் வேலை செய்தவர்கள். அவர்கள் அட்லாண்டாவுக்கு வந்தபோது, அவர்களுக்கு வாயில்காப்பது, குப்பை எடுத்துச் செல்வதுபோன்ற கீழ்த்தரமான வேலைகளே கிடைத்தன. சிலருக்கு நிலையான வேலை கிடைக்கவில்லை. ஒரு தொழிலும் கற்றுக்கொண்டிராதவர்கள். கட்டடங்கள் கட்டப்பட்டபோதோ, பள்ளங்கள் தோண்டப்பட்டபோதோ அன்றாடக் கூலிக்கு வேலை செய்தனர். செய்வதற்கு வேலை ஒன்றும் இல்லாதபோது அவர்களுடைய குடும்பங்கள் பட்டினி கிடந்தன.

பெண்களுள் சிலர், ஆண்களைவிட அதிர்ஷ்டசாலிகளாயிருந்தனர். அட்லாண்டாவிலிருந்த பல செல்வர்களான வெள்ளையர் வீடுகளில் அவர்களுக்குச் சமையல் வேலையோ, அல்லது பணிப்பெண் வேலையோ எப்போதும் காத்துக்கொண்டிருந்தது. நீகிரோப் பெண் வெறும் கூலிவேலை செய்த தன் கணவனைவிட அனேகமாக அதிகமாகவே சம்பாதித்து வந்தாள். இப்படியிருந்த குடும்பங்களில் அமைதியின்மையும், அதிருப்தியும் நிலவின. ஆண்கள், தங்கள் குடும்பத்திற்கு வேண்டியதைத் தாங்களே சம்பாதித்துப்போட விரும்பினார்கள்; அந்தப் பொறுப்பைத் தங்கள் பெண்களுக்கு விட்டுவிட விரும்பவில்லை.

ஆயினும், சேரியிலும்கூடச் சிலர் நல்ல நிலைமையில் இருந்தார்கள். அவர்களில் ஒருசிலர், கல்லூரிப் பட்டம் பெற்றவர்கள். அப்படிப்பட்டவர்களில் பெரும்பாலோர் உத்தியோகங்களில் அமர்ந்திருந்தார்கள். அவர்கள் நீகிரோக்களுள் முதன்முதலாக ஆசிரியர்களாகவும்,

வழக்கறிஞர்களாகவும், மருத்துவர்களாகவும், பல் வைத்தியர்களாகவும் அமர்ந்தவர்கள். மார்ட்டினது தந்தையைப் போன்றவர்களும் கொடிய கஷ்டநஷ்டங்களுக்கு ஈடுகொடுத்து முன்னுக்கு வந்தவர்கள். இவர்கள் வசித்த இடங்களில் இருந்தவர்கள், இவர்களைப் பற்றிப் பெருமையடைந்தார்கள்.

ஆபர்ன் அவென்யுவில் நீகிரோக்களுக்குச் சொந்தமான வியாபார நிறுவனங்கள் கூடச் சில இருந்தன. ஒரு பாங்கு, இரண்டு இன்ஷ்யூரென்ஸ் கம்பெனிகள், ஒரு மருந்துக்கடை ஆகியவையே அவை. இந்த மருந்துக் கடைக்கு நகரத்தில் ஐந்து கிளைகள் இருந்தன. உண்மையில், ஆபர்ன் அவென்யுவில் கிட்டத்தட்ட கோடீசுவரரான ஒரு நீகிரோகூட இருந்தார்.

அட்லாண்டா 'கெட்டோ'வின் உயிர்நாடியான பகுதி, கோயில்கள் இருந்த இடமேயாகும். ஆபர்ன் அவென்யுவின் ஆறு சதுக்கங்களுக்குள்ளேயே மூன்று கோயில்கள் இருந்தன. எபெனெசர் பாப்டிஸ்ட் ஆலயம் மார்ட்டினது குடும்பக் கோயிலாகும். அவரது பாட்டனர், அதில் முப்பத்தேழு ஆண்டுக் காலம் மத குருவாகப் பணியாற்றி வந்தார். அவர் தமது அறுபத்தெட்டாம் வயதில்,தாம் ஞாயிறன்று நிகழ்த்தவேண்டிய சமயச் சொற்பொழிவைத் தயார்செய்து கொண்டிருந்த போது இறந்து போனர். அப்போது, மார்ட்டினுக்கு இரண்டு வயது. அவரது தந்தை அக்கோயிலின் மதகுரு பதவியை ஏற்கனவே, அது கிங் குடும்ப வசமே இருந்து வந்தது.

மார்ட்டின் வளர்ந்து வருகையில் கோயில்தான் அவரது இரண்டாவது வீடாக இருந்தது. அதன் மூலமாகவே அவர் தம் வீட்டைச்சுற்றி வசித்தவர்களின் மனப்போக்கை உணர்ந்தார். தமது தந்தை, அவர்

களுக்கு ஒரு புதுவிதமான வாழ்க்கை முறையைப் போதிப்பதைக் கேட்டு வந்தார். எல்லாரும் தலை நிமிர்ந்து நடக்கவேண்டுமென்றும், யார் திட்டுவதையும் கேட்டுக் கொண்டிருக்கக் கூடாதென்றும், ஆனால் எப் போதும் தெய்வ நெறியிலேயே பணிவோடு நடந்து செல்ல வேண்டுமென்றும், அந்த ஆர்வம் மிக்க வாலிப மதகுரு தமது மக்களைக் கேட்டுக்கொண்டார். அவர்கள் தடுமாறித் தவித்தபோது தம் தாயும், பாட்டியும் அவர்களுக்கு உணவுப் பொட்டலங்கள் கட்டியதையும் மார்ட்டின் கவனித்தார்.

விவிலிய நூலையும், ஏசுநாதரின் போதனைகளையும் உயிர்ப்பொருள் உடையனவாகக் கருதியே அவர் வளர்ந்து வந்தார். 'ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தைக் காட்டு' என்பது கிறிஸ்துநாதரின் போதனைகளில் ஒன்று. 'பகைவரை நேசியுங்கள்' என்பது இன்னொன்று. 'மற்றவர்கள் உங்களிடம் எப்படி நடக்க வேண்டுமென விரும்புகிறீர்களோ, அப்படியே அவர் களிடம் நீங்களும் நடந்துகொள்ளுங்கள்' என்பது மற் றொன்று. இந்தப் போதனைகளைத் தம் அண்டை அயலார் அனுசரித்தால் அவர்களுக்கு என்ன பலன் கிடைக்கும் என்பதை அவர் தமது இளமையிலேயே அறிந்தார்.

மார்ட்டினுக்கு நான்கு வயதானபோதே அவர் ஞாயிற்றுக்கிழமை காலை வேளைகளில் எபெனசர் கோயிலில் தமது தெளிவான, இளம் குரலில் கீதங்களைத் தனித்துப் பாடத் தொடங்கி விட்டார். சீக்கிரத்தி லேயே மற்ற நீகிரோப் பிரார்த்தனைக் கூட்டத்தினரும் அவர் பாடுவதைக் கேட்க விரும்பினர். ஆகவே, பாடு வதற்காக அவரது அன்னை அவரைப் பக்கத்திலுள்ள சிறிய நகரங்களுக்கு அடிக்கடி அழைத்துச் செல்ல லானாள்.

அந்தச் சிறிய பையன், தனது கணீரென்ற குரலில் பாடுவதைக் கேட்கும்போது, கெட்டவர்களின் மனமும் கரைந்துவிடும். அடக்கமாக இருப்பதென்னும் பெரிய நகரப் பழக்கத்தை அறிந்திராத சிற்றூர் வாசிகள், மார்ட்டினது பிரார்த்தனைக் கீதம் முடிவுற்றதும், அதிக உற்சாகத்துடன் 'ஆமென்', 'ஆண்டவனைப் போற்றுவோம்' என்று கோஷமிடுவார்கள்.

மார்ட்டின் பாடி முடித்ததும், பல சிறிய கோயில்களில் மகிழ்ச்சி பொங்கிப் பெருகும். மக்கள் கைதட்டி ஆரவாரம் செய்வார்கள். சில சமயங்களில் அந்தச் சத்தத்தைக்கேட்டு மார்ட்டின் பயந்து விடுவார். ஏனெனில், எபெனெசர் கோயிலில் பிரார்த்தனை அவ்வாறின்றி அமைதியுடனேயே நடைபெறும்.

சிற்றூர்க் கோயில்களில் கூடிய மக்கள், மார்ட்டினிடம் மதிப்பை மற்றொரு முறையிலும் காட்டிக் கொண்டார்கள். அவர் பாடும்போது, பல சமயங்களில் காணிக்கை, அல்லது வசூல் அதிகமாய் இருக்கும். மார்ட்டின் சிறுவனாயிருந்தாலுங்கூட அப்படி வசூலாவது நல்லது என்பதை அறிந்திருந்தார். அந்தப் பணத்தில் ஒரு பகுதி, ஒரு புதிய கோயிலுக்கு மேற்கூரை போட உபயோகப்படலாம்; அல்லது பள்ளிக்கூடத்திற்குப் போக ஆரம்பிக்கும் குழந்தைகளுக்குப் புதிய உடைகள் வாங்கிக்கொடுக்கப் பயன்படலாம் என்பது அவருக்குத் தெரியும். மார்ட்டின் பாடியிராவிட்டால் அந்தக் குழந்தைகள் கந்தைகளை உடுத்தித்தான் போயிருக்கக் கூடும்.

4. பள்ளிக்கூட நாட்கள்

மார்ட்டினது தமக்கை கிரிசுக்கு ஆறு வயதான போது பள்ளிக்கூடத்தில் சேர்ந்தாள். ஐந்து வயதே ஆன மார்ட்டின், தாம் பள்ளிக்கூடம் போகக்கூடிய அளவு வளர்ந்து விட்டதாகவும், தம்மையும் பள்ளிக் கூடத்தில் சேர்க்குமாறும் பிடிவாதமாகக் கூறினுர். கடைசியில், அவர் காட்டிய ஆர்வம் அவரைப் பள்ளிக் கூடத்திற்கு அழைத்துச் செல்லத் தாயைச் சம்ம திக்கச் செய்து விட்டது.

மார்ட்டினது அன்னே, ஒரு பள்ளிக்கூட ஆசிரியை. அவள் தன் பிள்ளே அறிவுக் கூர்மை மிக்க குழந்தை என்பதை அறிந்து, அவரை முதல் வகுப்பில் சேர்த்து விடத் தீர்மானித்தாள். மார்ட்டின் ஆறு வயதான குழந்தையென்று நினேத்துக் கொள்வார்களென்று நம்பினுள் அவள்.

ஆனுல், மார்ட்டின் பள்ளிக்கூடத்தில் அதிக காலம் இருக்கவில்லே. அதில் சேர்ந்த சிறிது காலத்திற் கெல்லாம், தமது உண்மையான வயதைத் தவறிப் போய் வெளியிட்டு விட்டார். வகுப்பிலிருந்த மற்றக் குழந்தைகளிடம் அண்மையில் நடந்த தமது பிறந்த நாள் கொண்டாட்டத்தைப் பற்றிக் கூறலானுர்.

''என் பிறந்த நாள் கொண்டாட்டப்பணியாரத்தில் ஐந்து வர்த்திகள் இருந்தனவே'' என்று அவர் பெருமை யாகச் சொல்லிக் கொண்டிருந்தது அவரது ஆசிரியை காதில் பட்டு விட்டது. அவ்வளவுதான்; அந்த வருடம் அவர் பள்ளிக்கூடப் படிப்பு அத்துடன் முடிந்து விட்டது. ஆயினும், பிறகு பள்ளிக்கூடத்திற் சேர்ந்த சிறிது காலத் திற்குள்ளேயே தமது தமக்கையின் வகுப்பிற்கு உயர்த் தப்பட்டு விட்டார், அவர்!

மார்ட்டின், பள்ளிக்கூடத்தில் சேர்ந்த சிறிது காலத்திற்கெல்லாம், தம் வீட்டின் சுற்றுப்புறப் பகுதியிலும், நகரத்தின் பல இடங்களிலும் இருந்த அறிக்கைப் பலகைகளை எழுத்துக் கூட்டிப் படிக்கத் தொடங்கினார். அவர், முதலில் படிக்கத் தெரிந்து கொண்டவற்றுள் ஒன்று, 'வெள்ளையருக்கு மாத்திரம்' என்ற அறிக்கையாகும். அவர் பஸ்களிலோ, டிராம் வண்டிகளிலோ மிக அரிதாகவே செல்வார். ஏனென்றால் சாதாரணமாக அவரது தாயோ, அல்லது தந்தையோ, அவரைத் தங்கள் வீட்டு மோட்டார் வண்டியிலேயே அழைத்துச் செல்வது வழக்கம். அவ்வாறின்றிப் பஸ்களிலோ, டிராம் வண்டிகளிலோ சென்றபோது அவர் பல அறிக்கைகளைப் படிக்க நேர்ந்தது. 'கறுப்பர்கள் வெளியேறப் பின்புறக் கதவு வழி' என்பன போன்றவையே அவை.

அவற்றிலிருந்து தென் பிராந்தியத்தின் உட்பகுதியில் வசித்த ஒரு நீகிரோவின் வாழ்க்கை எத்தகையது என்பதைப் பற்றிச் சிறுகச் சிறுக அவர் உணர்ந்து வந்தார்.

இந்தச் சமயத்தில்தான் மார்ட்டின் தமது தந்தையான கிங்கைப் பற்றிய சில தனிப்பட்ட விஷயங்களைக் கவனிக்கத் தொடங்கினார்.

ஒரு நாள், தமது தந்தையோடு கடைத்தெருப் பகுதிப் பக்கம் வண்டியில் சென்று கொண்டிருந்தபோது ஒரு போலீஸ்காரர் அவர்களை நிறுத்தினார். அவர் மார்ட்டினது தந்தையிடம், "உன் லைஸென்ஸைப் பார்க்கணும், பையா" என்று இழுத்தாற்போல் கூறினார். பெரும்பான்மையான தெற்கத்தியார், நீகிரோ ஆண்கள் எல்லாரையும், "பையா" என்ற சிறுமைப்படுத்தும் வார்த்தையை உபயோகித்தே பேசுவது வழக்கம்.

வணங்கத்தக்க முதியவர்கள் விஷயத்திலும் அப்படித் தான் சொல்வர். ஆகவேதான் அவ்வாறு அழைத்தார் அந்தப் போலீஸ்காரரும். கிங், தமது லைசென்ஸை வெளியிலெடுத்தார். ஆனால் அதைப் போலீஸ்கார ரிடம் கொடுக்கு முன்னர், மார்ட்டினைச் சுட்டிக்காட்டி, "இவன் ஒரு பையன். நான் ஒரு மனிதன்" என்றார்.

மற்றொரு சமயம், மார்ட்டினுக்குக் காலணி வாங்கு வதற்காக அவரது தந்தை அவரைக் கடை வீதிக்கு அழைத்துச் சென்றார். ஒரு கடைக்குச் சென்ற போது, அங்கிருந்த வெள்ளையரான குமாஸ்தா பரபரப்புடன் வந்தார். "கடைக்குப் பின்பக்கம், அதோ இருக்கும் ஆசனங்களில் உட்கார்ந்து கொண்டால் உங்களுக்கு வேண்டியதைக் கொடுக்கிறேன்" என்று மரியாதை யோடு கூடிய கண்டிப்புடன் கூறினார் அவர்.

"ஏன் இந்த ஆசனங்களெல்லாம் சரியாகத்தானே இருக்கின்றன!" என்று கிங் வேடிக்கையாகப் பதிலளித் தார். குமாஸ்தா சிறிது குழப்பமுற்றவராயினும், முன்னி லும் கண்டிப்புக் காட்டினார். "ஆனால், நாங்கள் கறுப்பர் களுடன் கடையின் பின் பக்கத்தில்தான் வியாபாரம் செய்வது வழக்கம்." என்று அவர் விவரித்துக் கூற முயன்றார். கிங் அவரிடம், "நீங்கள் கறுப்பர்களுடன் கடையின் முன் பக்கத்தில் வியாபாரம் செய்யா விட்டால் இந்தக் கறுப்பர்களோடு வியாபாரம் எதுவுமே செய்ய வேண்டியதில்லை' என்று கூறிவிட்டு, மார்ட் டினைக் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு வெளி யேறினார்.

ஆனால், ஒவ்வொரு வாரமும், தினந்தோறும் இது போன்ற சம்பவம் நிகழ்ந்து வரவில்லை. சிலசமயம் மாதக் கணக்கில் ஒன்றுகூட நிகழாமல் இருந்ததுண்டு. மார்ட்டின், தமது பக்கத்து வீட்டு முற்றத்திலிருந்த

ஒக் மரத்தின் மீதேறிக் கொண்டோ, அல்லது அதன் நிழலில் உட்கார்ந்து படித்துக் கொண்டோ பெரும் பொழுதைப் போக்குவார். சில சமயங்களில் தமது தம்பியுடன் காற்ருடி பறக்க விடுவார்; அல்லது தமது வீட்டின் முன் பக்கத்து நடைபாதையில் தம் தமக்கை கிரிசுடன் சறுக்கு விளையாட்டு விளையாடுவார்.

அடுத்தாற் போலிருந்த வெற்றிடத்தில் அடிக்கடி பந்து விளையாடுவார்கள். ஒரு நாள் அவர்கள் 'பேஸ் பால்' பந்தாட்டம் ஆடியபோது, மார்ட்டினும் அவர் தம்பி ஆல்பிரெட் டேனியலும் எதிரெதிர்க் கட்சிகளில் இருந்தனர். மார்ட்டின் தமது கட்சியில், பந்து பிடிப்ப வராக இருந்தார்.

ஆல்பிரெட் டேனியல் பந்தை அடிக்க வேண்டிய முறை வந்தபோது அவர் அதை அடிக்கத் தவறி விட்டார்; ஆனுல் மட்டை அவர் கையினின்றும் பறந்து சென்று கீழே குத்திக்கொண்டு, உட்கார்ந்திருந்த மார்ட்டினைத் தாக்கிற்று. மறுகணம், சதக்கென்று சப்தம் கேட்டது; அடுத்து மார்ட்டின் தடாரென வீழ்ந்தார். வெளிறிய முகத்துடன் தரையில் அசைவற்றுப் படுத்திருந்தார் அவர்.

"உடம்பு சரியாய் விட்டதா?" என்று ஆல்பிரெட் டேனியல் தம் சகோதரரை நெடுநேரம் கேட்டுக் கொண்டே இருந்தார். பிறகு எழுந்து உட்கார்ந்த மார்ட்டின், "நான் சரியாகத்தான் இருக்கிறேன். ஆனுல் நீ தான் சரியில்லை. நீ அடித்தது மூன்ருவது முறை. ஆகவே, கட்டத்தை விட்டு வெளியேற வேண்டும்" என்ருர்.

மார்ட்டினது அனுபவங்களுக்குள், மிக அதிக மனக் கஷ்டம் தந்தது அவரது ஆருவது வயதில் நிகழ்ந்தது. ஆபரின் அவென்யுவில் கடை வைத்திருந்த ஒரு

வெள்ளைக்கார மாது, தன் இரண்டு பிள்ளைகளும் மார்ட்டினேடு விளையாடக் கூடாதென்று தடுத்து விட்டாள். ஏனென்ருல், அவர் ஒரு கறுப்பராம். அந்த மூன்று சிறுவர்களும் மிகவும் நெருங்கிய நண்பர்களா யிருந்தனர். மார்ட்டின் இதை மறக்கவே இல்லை.

ஐந்து வருடங்களுக்குப் பிறகும், இந்தச் சம்பவத் தினுல் ஏற்பட்டிருந்த மனப்புண் அவருக்கு ஆறவே இல்லை. ஒரு நாள் அவர் தமது தாயுடன் சாமான் வாங்கச் சென்றிருந்தபோது இன்னெரு வருந்தத்தக்க அனுபவம் ஏற்பட்டது. மார்ட்டினுக்குக் கடைகளில் சாமான்கள் வாங்கப் போவதில் பிரியமுண்டு. அங்கே எல்லாம் பரபரப்பாக நடை பெறுவதைப் பார்ப்பது அவருக்குப் பிடிக்கும்; முக்கியமாக, கடைகளில் வைக்கப் பட்டிருக்கும் பொம்மைகளையும், நேர்த்தியான துணி களையும் பார்த்துக் கொண்டிருக்க விரும்புவார்.

சாமான்கள் வாங்கி வந்தவர்கள் கூட்டத்திலிருந்து திடீரென ஒரு வெள்ளைக்கார மாது வெளியே வந்தாள். அவள், மார்ட்டினுக்கு நேர் எதிரே நின்று கொண்டாள்; அவர் எப்போதுமே செவியுற நடுங்கும் அந்த வெறுப்பு நிறைந்த வார்த்தையைச் சொன்னுள். "என் காலில் மிதித்த நிக்கர் பையன் நீ தானே?" என்று அவள் உரக்கக் கூச்சலிட்டாள். (நிக்கர் என்பது நீகிரோக்களைப் பற்றி இழிவாக உபயோகிக்கப் படும் வார்த்தை) மார்ட்டின் அவளுக்குப் பதில் சொல்லுவதற்கு முன்னு லேயே, அவள், தன் கைகளை நீட்டி அவர் கன்னத்தில் ஓங்கி அறைந்தாள். பிறகு, அவள் மறுபடியும் கூட்டத் திற்குள் மறைந்து விட்டாள்.

மார்ட்டின் இனத்தைச் சேர்ந்த மக்களுக்கு அது புதிது அன்று. அவர்கள் அவ்வாறே வெள்ளையரின் அகாரணமான வெறுப்பைப் பற்றி அறிந்துள்ளார்கள்.

அவர்களைப் போலவே சிறுவரான மார்ட்டினும் அவ்வெள்ளைக்கார மாதின் முரட்டுத் தனமான செய்கையால் அதனை அறிந்து கொண்டார்.

“அந்த வெள்ளைக்கார மாது, நியாயமான காரண மின்றி என்னைப்பற்றித் தப்பபிப்பிராயம் கொண்டு விட்டாள்” என்று மார்ட்டின் தம் தாயினிடம் கூறினார்.

5. எண்ணித் துணிக கருமம்

மார்ட்டின் அவரது வயதுக்கேற்ற வளர்ச்சி இல்லாதவராய் இருந்தார். அதனால் முரட்டுப் பையன் களின் தொந்தரவுக்கு உள்ளானார். திரும்பச் சண்டை போடுவதனால் பயனில்லை என்பதை அவர் விரைவி லேயே தெரிந்து கொண்டார். ஆனாலும், அவர் கோழை அல்லர். தம்முடன் யாராவது சண்டை போட வந்தால் அவர் தப்பி ஓடிப்போக மறுத்து விடுவார். ஆகவே அவர் தம்முடைய வாக்குச் சாதுர்யத்தை உபயோகித்தே தம்முடைய உரிமைகளுக்காகப் போராடக் கற்றுக் கொண்டார்.

அவரைவிட ஒரு வயது இளையவரான ஆல்பிரெட் டேனியல் தம் பெரிய அண்ணனைக் காட்டிலும் சிறிது உயரமாகவும், அதிக வலிமையுள்ளவராகவும் இருந்தார். இது மார்ட்டினது மனத்தைப் புண்படுத்தியது.

மறுநாள் ஆல்பிரெட் டேனியல் கிரிசைத் தொந்தரவு செய்து கொண்டிருந்தார். பேசாமல் வரும் படி அவள் கெஞ்சினாள்; மார்ட்டினும் கேட்டுக் கொண் டார். ஆனால் ஆல்பிரெட் டேனியல் தொடர்ந்து தொந்தரவு செய்து வந்தார்.

கடைசியில், கிரிஸ் கண்ணீர்விட்டு அழுதாள். மார்ட்டின் சிறிதும் யோசனை செய்யாமலேயே, டெலிபோன் பேசும் குழாயை எடுத்து டேனியல் தலையில் அடித்தார். மறுகணம், டேனியல் மயக்கமாய் விழுந்தார். சிறிது நேரம்வரை அவருக்கு மூர்ச்சை தெளியவில்லை. அப்போது எல்லாரும் கவலைப்பட்டுக் கொண்டிருந்தனர். டேனியல் தலையில், கோழி முட்டை அளவுக்குப் புடைத்திருந்தது. ஆனால் அதைப் பற்றி அவன் பெருமைப்பட்டுக் கொண்டான். ஆனால் தமது தம்பியை அப்படி அடித்ததற்காக அதற்குப் பிறகு பல தினங்கள் வரை, தம்மைத் தாமே வெறுத்துக் கொண்டார் மார்ட்டின்.

இவ்விதம் சிந்தித்துப் பாராமலே காரியங்களைச் செய்யும் கட்டாயம் அவருக்கு அடிக்கடி ஏற்பட்டது. அவை, அவரைப் பல சமயங்களில் சங்கடத்தில் சிக்க வைத்துவிடும். அதனால், குற்றவாளி என்ற உணர்வு அவரை உறுத்துவதும் வழக்கம்.

மார்ட்டினும், டேனியலும், ஒரு சைக்கிள் வண்டியைச் சேர்ந்து உபயோகித்து வந்தனர். மார்ட்டின் அதை மிக அதிக நேரம் உபயோகிப்பதன் மூலம் தமது சகோதரனுக்குக் கோபமுண்டாகச் செய்தார். சில சமயங்களில் அவர் அதை எடுத்துக்கொண்டுபோய், பிற்பகல் முழுவதும் கண்ணிலேயே படமாட்டார். அவர் இப்படிச் செய்தது டேனியலுக்கு நியாயமாகப் படவில்லை.

வீதிக்குப் பக்கத்திலிருந்த பாதையிலன்றி வேறு எந்த இடத்திலும் சைக்கிளை விட்டுக் கொண்டு போகக் கூடாதென்றும், தங்கள் வீட்டின் சுற்று வட்டத்தில்தான் இருக்க வேண்டுமென்றும் பையன்களைப் பெற்றோர்

எச்சரித்திருந்தனர். ஆனல் மார்ட்டினுக்கோ மற்றச் சுற்று வட்டாரப் பகுதிகளைப் பார்ப்பதில் ஆர்வம்.

வசந்த காலத்தில் ஒருநாள், மார்ட்டின் தம் நண்பன் ஒருவனைச் சைக்கிளின் முன்பக்கத்தில் ஏற்றிக் கொண்டு போனர். தங்களால் பார்க்க முடிந்ததை யெல்லாம் பார்த்துவிட்டு வருவதற்காக அவர்கள் கடை வீதிகளின் பக்கம் சென்றனர். அங்கே கூட்டமாயிருந்த பகுதிக்குள் சென்றபோது, மார்ட்டின் பாதசாரிகளின் மேல் இடிக்காமல் செல்வதற்கு மிகவும் சிரமப்பட்டார். அவர் தமது சைக்கிளை நடைபாதையை விட்டுக் கீழிறக்கி, தெரு ஓரமாக ஓட்டிச் சென்ருர். சிறிது தூரம் செல்லுவதற்குள் ஒரு டிரக் வண்டி, அவர்மீது இடித்துக்கொண்டு போயிற்று. அவரும் அவரது நண்பனும் சைக்கிளிலிருந்து தூக்கி எறியப்பட்டார்கள். பிறகு அவருக்கு நினைவு வந்தபோது தமது பக்கத்து வீட்டுக்காரர் குனிந்து தம்மைப் பார்த்துக் கொண் டிருப்பதைக் கண்டார்.

விபத்து நேர்ந்த சமயம் அந்த மனிதர் தம் வண்டி யில் போய்க்கொண்டிருந்தார். அவர் அந்தப் பையன் களையும், நொறுங்கிப்போன சைக்கிளையும் வீட்டிற்குக் கொண்டுவந்து சேர்த்தார்.

இரண்டு சிறுவர்களும் மிக்க அதிர்ச்சியடைந்திருந் தனர். உடலெல்லாம் சிராய்ப்புகள் வேறு. ஆயினும் அவை அனைத்தையும்விட மார்ட்டினுக்கு அதிகத் துன்பம் தந்தது, தங்கள் வண்டியின் நிலை கண்டு டேனியலுக்கு மூண்ட சினம் தான். ‘நான் காரியங்களைச் செய்ய முற்படுவதற்குமுன், அவற்றைப்பற்றி இன்னும் நன்ருகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்’ என்று அவர் தமக்குத்தாமே சொல்லிக் கொண்டார்.

யாராவது மனம் வருந்தும்படி தாம் ஏதாவது செய்து விட்டால், மார்ட்டின் மனம் கலங்கிப் போவார். முக்கியமாக, தம் குடும்பத்தைச் சேர்ந் தவர்கள் விஷயத்தில் இப்படி மனம் வருந்துவார். அவருக்குத் தமது தாயினிடமும், பாட்டியினிடமும் தனிப்பட்ட அன்பு உண்டு. தாயை எப்போதும் 'அன்பு அம்மா' என்றும், பாட்டியாரான ஜென்னி வில்லியம்ஸை 'அம்மா' என்றும் கூப்பிடுவது அவர் வழக்கம்.

அடிக்கடி, சனிக்கிழமை இரவுகளில் எல்லாம் மார்ட் டினது தாய் நெடுநேரம் விழித்திருந்து, ஞாயிற்றுக் கிழமைப் பகலுணவைச் சமைத்துக் கொண்டிருப்பாள். மறுநாள் தானும், குடும்பத்தினருடன் கோயிலுக்குப் போவதற்காகவே அப்படிச் செய்வாள். மார்ட்டின், தாமும் விழித்திருந்து அவளுக்கு உதவி செய்ய ஆசைப் படுவார். அவர் அடுப்பை மூட்டுவார், அல்லது குப்பை யைக் கொண்டுபோய்க் கொட்டுவார்; அல்லது உருளைக் கிழங்குகளைத் தோல் உரித்துக் கொடுப்பார்; சில சமயங் களில் தமது தாய் வேலை செய்து கொண்டிருக்கும் போது, அவளுக்குத் துணையாயிருப்பதற்காக, உட் கார்ந்து பேசிக்கொண்டே இருப்பார்.

அவரது பாட்டி இன்முகமும், உற்சாகமான குணமு முள்ளவர். மார்ட்டினுக்கு, இன்பமாகவும், அன்புடனும் பேசுபவர்களோடு இருக்கப் பிடிக்கும். சொன்னதைக் கேட்காததற்காகத் தாயோ அல்லது தந்தையோ, தம்மை அடித்துவிட்டால், அந்த 'அம்மா' சொல்லும் ஆறுதலான வார்த்தைகளால் அவரது வலி மறைந்து போகும். மார்ட்டின் தான் ஜென்னி வில்லியம்ஸின் செல்லப் பேரன்; அவர் அப்படிச் செல்லப் பேரனு

யிருந்ததை அவள் மறைக்க முயன்றதேயில்லை. அவர்களிருவரும் மிகவும் நெருங்கிப் பழகுவார்கள்.

மார்ட்டினுக்குப் பன்னிரண்டு வயதான போது, ஒரு ஞாயிற்றுக் கிழமை, வழக்கம்போல் குடும்பத்தினர் எல்லாரும் சேர்ந்து கோயிலுக்குச் சென்றனர். பிரார்த்தனை முடிந்தபிறகு ஜென்னி வில்லியம்ஸ் வேறொரு கோயிலுக்குச் செல்வதற்காக அவர்களை விட்டுப் பிரிந்தாள். அந்தக் கோயில் மகளிர் நிகழ்ச்சியில் அவள் ஒரு கௌரவப் பிரசங்கியாகப் பேச விருந்தாள்.

குடும்பத்தைச் சேர்ந்த மற்றவர்கள் வீடு திரும்பினர். ஆனால் மார்ட்டின் அவர்களோடு போகவில்லை. அவர், ஓர் அணிவகுப்பைப் பார்க்க விரும்பித் திருட்டுத்தனமாகச் சென்றுவிட்டார். அது, ஆண்டவன் தினமான ஞாயிறன்று நடைபெறக் கூடாதெனக் கண்டிப்பாகத் தடுக்கப்பட்ட ஒரு செயலாகும்.

மார்ட்டின் அணிவகுப்பைப் பார்த்துக் கொண்டு நின்றிருந்தபோது, ஒரு நண்பன் கூட்டத்தினரைத் தள்ளிக்கொண்டு தம்மை நோக்கி வந்து கொண்டிருந்ததைக் கண்டார். அந்தப் பையன் அவர்களது குடும்பத்தினால் அனுப்பப்பட்டவனே. அவன் மூச்சுத்திணறிய வண்ணம் மார்ட்டினிடம் வந்து, அவரது பாட்டி இறந்து விட்டதாகத் தெரிவித்தான்.

பேசச் சென்றிருந்தபோது கோயிலில் ஜென்னி வில்லியம்ஸுக்கு மாரடைப்பு ஏற்பட்டது. உடனே அவளை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றார்கள். ஆனால் அங்கே போகும் முன்னரே அவள் இறந்து விட்டாள். ஞாயிறன்று செய்யக் கூடாது என்று தடை செய்யப்பட்டிருந்த அணிவகுப்பைக் காணத் தாம் சென்றதனால்தான் ஆண்டவன் தமக்குத் தண்டனை

விதித்து விட்டதாக மார்ட்டினுக்குத் தோன்றிற்று. தமது பாட்டியின் மரணத்திற்குத் தாமே பொறுப்பாளி என்று அவர் எண்ணலானுர்.

அவர் வீடு திரும்பியபோது, குடும்பத்தைச் சேர்ந் தவர்கள் எல்லாரும் துக்கம் கொண்டாடுவதற்காக வந்து கூடிவிட்டிருந்தனர். ஆறுதல் சொல்வதற்காக வந்திருந்த அக்கம் பக்கத்தினரும், கோயிலைச் சேர்ந்த வர்களும் வீடு முழுவதும் நிரம்பியிருந்தனர்.

மார்ட்டினது கண்கள், ஒருவரிடமிருந்து இன்னெரு வருக்குப் பாய்ந்தன. சிவந்துபோயிருந்த மற்றவர்களின் கண்கள் அவரைத் திரும்ப உற்று நோக்கின. அவை தம்மீது குற்றஞ்சாட்டுவது போன்று அவருக்குத் தோன்றிற்று. அவர் தமது தாயைப் பார்க்க முயன்ருர். அவள் முகத்திலாவது மன்னித்துவிடும் குறிகளைக் காணலாமென்று எண்ணினுர். கடைசியில் அவர் கண்கள், அவளுடைய கண்களைச் சந்தித்தன. அவள் ஒரு வார்த்தையும் சொல்லாமல், தன் கைக்குட்டையில் தன் முகத்தைப் புதைத்துக்கொண்டு அழுதாள்.

மார்ட்டினுக்கு என்ன செய்வதென்று தெரிய வில்லை. 'நான் மட்டும் அணிவகுப்புக்குப் போகாதிருந் திருந்தால் இப்படி நேர்ந்திராதன்ருே?' என்று நினைத்த வராய், அவர் தட்டுத் தடுமாறிக்கொண்டு மாடிப்படி களில் ஏறினுர்; தம்மீது குற்றஞ்சாட்டிய கண்களின் பார்வையினின்றும் தாம் தப்ப விரும்பினுர் என்பது மட்டுமே அவருக்குத் தெரியும். இரண்டாவது தளத்தின் பின்பக்க ஜன்னலைத் திறந்தார்; அப்போது அவருக்கு ஒரு யோசனையுமில்லை. கீழே இருந்த பசுமையான, அமைதி நிறைந்த தோட்டத்தை ஒருகணம் பார்த்தார்; அடுத்த கணம் கீழே குதித்துவிட்டார்.

சில நிமிஷங்களுக்குப் பின்னர் மார்ட்டின் தாமாகவே எழுந்திருந்தார்; தமக்கேற்பட்டிருந்தவை சிறிய காயங்களே என்று தெரிந்துகொண்டார்; "ஆண்டவனைப் போற்றுவோம்," என்று அவர் மெதுவாகச் சொல்லிக்கொண்டார். இந்தச் சொற்றொடர் அவருக்குத் தமது பழைய கால அனுபவம் எதையோ ஞாபகப்படுத்தியது; அது என்னவென்பதும் நினைவுக்கு வந்துவிட்டது. அது தாம் சிறுவனாயிருந்தபோது பாடிய அந்தச் சிறிய கோயில்களையே அவருக்கு நினைவூட்டியது. அவற்றில், கூட்டத்தினர் 'ஆண்டவனைப் போற்றுவோம்' என்றும், 'ஆமென்!' என்றும் உரக்கக் கூவியதும், தாம் அந்தக் கூச்சலைக் கேட்டுப் பயப்பட்டதும் அவர் நினைவுக்கு வந்தன. அவர்கள் தங்களைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியாதிருந்ததைக் கண்டு அவர் அப்போது பயமுற்றார்; இப்போதோ, தாமே தம்மைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியாதிருந்ததைக் கண்டார்.

மார்ட்டின் தம் காயங்களைத் தடவிக்கொடுத்துக் கொண்டும், ஆழ்ந்து யோசனை செய்துகொண்டும் நெடுநேரம் புல்லின்மீது அமர்ந்திருந்தார்.

தம் பாட்டியின் சவம் அடக்கம் செய்யப்பட்ட அந்தத் துக்ககரமான வேளையில் மார்ட்டின் தமது துயரத்தைக் கட்டுப்படுத்திக்கொண்டு அமைதியாக இருந்தார். அதனால், அவர் திடீரென்று வயது முதிர்ந்தவராகி விட்டாரென்று மக்கள் பேசிக்கொண்டார்கள்.

6. கனவு ஆரம்பம்

கிங், தமது இளமை வாழ்க்கையில் சிரமப்பட்டவர். ஆகவே, அவர் தம் பையன்களின் இளமை வாழ்க்கை அவ்வளவு சிரமமில்லாததாகச் செய்தார். ஆயினும்,

அவர்கள் சொகுசாக வாழ்க்கை நடத்துவதை விரும்பியதே இல்லே. ''பணம் செலவழிக்க விரும்பினுல், அவர்கள் உழைத்துச் சம்பாதிக்கவேண்டும்,'' என்று எப்போதுமே வற்புறுத்திக் கூறுவார். ''அதுமட்டுமல்ல, அவர்கள் ஒரு நல்ல வேலேயாகச் செய்யவேண்டும், இல்லாவிட்டால் அதற்கான சமாதானம் கூறவேண்டும்'' என்ருர்.

மார்ட்டின், பெரிய பத்திரிகைக் கட்டுகளேத் தூக்கக் கூடிய பலமுள்ளவரானுர். அவர் விற்பதற்கென்று ஒரு தனிப்பகுதியும் கிடைத்தது. எனவே, அட்லாண்டாவின் மாலேச் செய்திப் பத்திரிகையான, 'தி அட்லாண்டா ஜர்னல்' என்பதை விற்கத் தொடங்கினுர். அவருக்குப் பதின்மூன்று வயதானபோது, பக்கத்திலிருந்த பத்திரிகை விற்கும் கிளே நிலேயத்தின் உதவி மானேஜர் பதவிக்கு உயர்த்தப்பட்டார். அவர் பொறுப்புள்ளவராக நடந்துகொண்டதே அதற்குக் காரணம்.

புத்தகங்களே, அவற்றிலும் சிறந்தவற்றை வாங்கத் தம் சம்பாத்தியத்தைச் செலவிடுவதிலேயே மார்ட்டினுக்கு அதிக ஆசை. தமக்குப் பள்ளிக்கூடத்தில் கொடுக்கப்பட்ட சரித்திரப் புத்தகங்களில் நீகிரோக்களேப் பற்றிய வரலாறு மிகச் சிறிய அளவிலேயே இருந்ததை அவர் நெடுங்காலம் முன்னரே தெரிந்துகொண்டிருந்தார். ஆகவே, தம்முடைய சொந்த மக்களேப் பற்றி அதிக விவரங்களே அறிய வேண்டுமென்று அவர் தீர்மானித்தார்.

மார்ட்டின் ஆருவது வகுப்புப் படித்து முடித்ததும், அவரது பெற்ருேர் அவரைத் தனியார் நடத்திய 'ஆராய்ச்சி'ப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பினுர். அது அட்லாண்டாச் சர்வகலாசாலேயால் பரீட்சார்த்தமாக நடத்தப்பட்டு வந்தது. வகுப்புக்களில் குறைந்த அளவு

மாணவர்களே இருந்தனர். நிபுணர்களான ஆசிரியர்கள் ஒவ்வொரு மாணவர் விஷயத்திலும் தனிப்பட்ட கவனஞ்செலுத்தி வந்தனர். சமமான வசதிகள் அளிக்கப்பட்டால், நீகிரோச் சிறுவர்களும், வெள்ளைக்காரச் சிறுவர்களைப் போன்றே எளிதில் கற்றுக்கொள்வார்கள் என்பதை நிரூபிக்க ஆர்வமுடையவர்களாக அந்த ஆசிரியர்கள் இருந்தனர்.

மார்ட்டின் அதில் சேர்ந்து இரண்டு வருஷத்திற்குப்பிறகு துரதிர்ஷ்டவசமாக, அந்த அருமையான பள்ளிக்கூடம், மூடப்பட்டுவிட்டது. ஆனால், தாம் பள்ளிக்கூடத்தில் மாணவராயிருந்தபோது கனவுகூடக் கண்டிராத பல அரிய செய்திகளைப் பற்றி அவர் அங்கே தெரிந்துகொண்டு விட்டார்.

நீகிரோக்களின் சுதந்திரத்திற்காகப் போரிட்டவர்களின் பெயர்கள் அமெரிக்க சரித்திரப் புத்தகங்களில் அநேகமாகக் குறிப்பிடப்பட வில்லை. தம் இனத்தைச் சேர்ந்த அந்தப் பெரிய வீரர்களைப் பற்றி எல்லாம் அவர் அங்கே தெரிந்துகொண்டார்.

ஹாரியட் டப்மன் என்பவர் மெலிந்த உடலுள்ள நீகிரோ அடிமை. அவர், தத்தம் எசமானர்களை விட்டு ஓடிவந்துவிட்ட அடிமைகள், வட பிராந்தியத்திற்குத் தப்பிச் செல்வதற்கான வழிவகைகளை வகுத்துக்கொடுத்தவர். அவரைப்பற்றி மார்ட்டின் படித்தார். தோட்டங்களின் சொந்தக்காரர்கள், அடிமைகளைக் கொடுமையாக நடத்தி வந்தனர். அந்த அடிமைகளின் கிளர்ச்சிகளுக்கும், கலகங்களுக்கும் தலைமை வகித்து நடத்திய நாட் டர்னரையும், டென்மார்க் வெசேயையும் பற்றி அவர் படித்தறிந்தார். பிரடெரிக் டக்ளஸ் அடிமையாகப் பிறந்து, இராஜதந்திரியானவர். அடிமைத்தனத்தை ஒழிப்பதற்காக அவர் தமது வாழ்நாள்

முழுதும் போரிட்டதைப் பற்றிப் படித்தபோது மார்ட்டினின் மனம் கலங்கியது.

1863-ஆம் ஆண்டில் ஆப்ரஹாம் லிங்கன் விடுதலைப் பிரகடனம் விடுத்ததற்குப் பிறகு, நீகிரோக்களுக்கு உதவும்படியான சட்டம் எதுவுமே இயற்றப்படாததைப் பற்றி அவர் அடிக்கடி சிந்திப்பார். பள்ளிக்கூடங்களில் நீகிரோச் சிறுவர்களும், வெள்ளைச் சிறுவர்களும், தனித் தனியே பிரித்து வைக்கப்படுவது சட்டவிரோதம் என்று சுப்ரீம் கோர்ட் ஒரு தீர்ப்புக் கூறித்தான் இருந்தது. ஆயினும் தெற்குப் பிராந்தியங்களில் பெரும்பான்மையான பள்ளிக்கூடங்களில் இன்னும் இந்த பிரித்து வைக்கும் வழக்கம் பின்பற்றப்பட்டு வந்தது அவருக்குத் தெரியும்.

தாம் பெரியவரான பிறகு, அந்த வீரர்களைப் போன்றிருப்பதில் பெருமையுண்டு என்பதை அவர் அறிந்திருந்தார். நாட் டர்னரைப் போன்றோ, அல்லது டென்மார்க் வெசேயைப்போன்றோ தம் சகோதர நீகிரோக்களுக்குத் தாம் தலைமை வகித்துச் செல்வது போல நள்ளிரவில் கற்பனை செய்து பார்ப்பார்; அல்லது, தாம் ஒரு மேடைமீது நின்றுகொண்டு, நீகிரோக்களுக்கு நல்வாழ்வு ஏற்படுத்துவதைப் பற்றி அனல் கக்கும் பிரசங்கங்கள் புரிவதுபோல் கனவு காண்பார்.

ஒரு காலத்தில் தாம் 'உயர்தரமான வார்த்தைகளை'ப் பேசத்தெரிந்து கொள்ளப் போவதாக மார்ட்டின் தம் தாயினிடம் கூறியிருந்தா ரன்றோ? அதற்கான காலமும் அவருக்கு வந்துவிட்டது. அவர் அவற்றைத் தெரிந்துகொண்டார்—அந்த உயரிய வார்த்தைகளை மிக நன்றாக உபயோகிக்கவும் கற்றுக் கொண்டார்.

உயர்தரப் பள்ளியில் கீழ்வகுப்பில் படித்துக்கொண்டிருந்தபோதே உயர்ந்த வார்த்தைகளை உபயோகித்து மிக நன்முகப் பேசிவந்தார் மார்ட்டின். எனவே ஜார்ஜியாவிலுள்ள வல்டோஸ்டாவில் நடைபெற்ற பேச்சுப் போட்டிக்கு மற்றும் பல மாணவர்களுடன் தமது பள்ளிக்கூடத்தின் சார்பாக அவர் அனுப்பப் பட்டார். அவர்களது பிரசங்க ஆசிரியையான சாராகிரேஸ் பிராட்வியும் அவர்களுடன் சென்ருள்.

மார்ட்டின், பந்தயத்தில் வெற்றி பெறவில்லை. ஆனல், தமது பள்ளிக்கூடத்திற்கு இரண்டாவது பரிசைப்பெற்றுத் தந்தார்.

ஊர் திரும்பும்போது, அந்தக் குழு, அட்லாண்டாவுக்குப் போகும் பஸ்ஸில் ஏறியது. காலியாயிருந்த இடங்களில் எல்லாம் மாணவர்கள் உட்கார்ந்து கொண்டார்கள். பஸ், சாலையில் சிறிது தூரம் சென்றதும், மேலும் சில பிரயாணிகள் ஏறிக்கொண்டார்கள். அவர்களுள் பெரும்பாலோர் வெள்ளையர்.

அந்த வெள்ளைக்காரப் பிரயாணிகள் உட்கார இடமில்லாததைக் கண்ட பஸ் டிரைவர் திரும்பிஞர். அவர்கள் உட்காருவதற்காக நீகிரோக்கள்—வயோதிகர், வாலிபர் எல்லாருமே—எழுந்து நின்று கொள்ள வேண்டுமென்ருர். சில நீகிரோக்கள் எழுந்திருக்கத் தொடங்கினர். ஆனல் மார்ட்டினும், மற்ற மாணவர்களும் டிரைவரை இலட்சியம் செய்யாமல் தங்கள் ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டே இருந்தனர்.

இது டிரைவருக்குக் கோபத்தை உண்டாக்கியது. அவர், அவர்களைப் பார்த்து இழிவாகப் பேசத் தொடங்கிஞர். பிறகு போலீசைக் கூப்பிடப் போவதாகப் பயமுறுத்திஞர். அப்படியும் மாணவர்கள்

எழவில்லை. கடைசியில் ஆசிரியையே அவர்களை எழுந்திருந்து நிற்கச் சொன்னாள். முதலில் யாருமே அசையவில்லை. ஆனால் பிறகு ஒருவர் பின் ஒருவராக எழுந்து நின்றனர். அட்லாண்டாவுக்குச் செல்லும் தொண்ணூறு மைல் தூரமும் பெரும்பாலும் அவர்கள் நின்றுகொண்டேதான் இருக்க நேர்ந்தது.

அவர்களைப் பற்றிய பொறுப்பு தன்னுடையதென்றும், ஆகையால் தகராறு எதுவும் ஏற்படாமல் பார்த்துக்கொள்வது தன் கடமை என்றும், பிராட்வி மாணவர்களுக்குச் சமாதானம் கூறினாள். அவர்கள் அவள் கூறியதைக் கேட்டார்கள். ஆனால் ஆசிரியை சொன்ன அந்தச் சமாதானம் அவர்களுக்குத் திருப்தியளிக்கவில்லை.

ஆயினும், அவள் வேறு என்னதான் செய்திருக்கக் கூடும் என்று மார்ட்டின் எண்ணினார்.

7. தேர்ந்தெடுத்தல்

மார்ட்டின், தமது பதினைந்தாவது வயதில் கல்லூரியில் சேரத் தயாராயிருந்தார். அவர் பரிசோதனைப் பள்ளிக்கூடத்தில் நிறையப் படித்திருந்தாராதலால், ஒன்பதாவது, பதினேராவது வகுப்புகளை ஒரேயடியாகத் தாண்டிவிட முடிந்தது.

1944ஆம் ஆண்டில், மார்ட்டின் அட்லண்டாவிலுள்ள மோர்ஹௌஸ் கல்லூரியில் முதல் வருட மாணவராகச் சேர்ந்தார். அப்போது அந்தப் பெரிய நீகிரோ நிறுவனம் தோன்றி அறுபத்தைந்து ஆண்டுகள் ஆகியிருந்தன. அது வில்லியம் ஜெபர்ஸன் என்ற நீகிரோப் பாதிரியினால் நிறுவப்பட்டது. பாப்டிஸ்டுகளில் நீகிரோக்கள், வெள்ளையர் ஆகிய இருசாரா

ராலும் அஃது ஆதரிக்கப்பட்டு வந்தது. அதன் மாண வர்கள் எல்லாருமே நீகிரோக்கள்.

பெரிய மனிதர்களை உருவாக்கிய பள்ளிக்கூடம் என்ற முறையில் மோர்ஹௌஸ் மதிக்கப்பட்டு வந்தது. அதன் பட்டதாரிகளுள் பலர் நீகிரோக் கல்லூரிகளின் தலைவர்களாயினர். பலர், மருத்துவர்களாகவும், வழக்கறிஞர்களாகவும், ஆசிரியர்களாகவும் இருந்தார் கள். மோர்ஹௌசிலிருந்து கணக்கற்ற பேர் மதகுரு தேர்வில் தேறினார்கள். அவர்களுள் மார்ட்டினது தந்தையும் ஒருவர்.

மார்ட்டின், தம் தந்தையைப் பின்பற்றி, ஒரு மத போதகராவார் என்று எல்லாரும் நிச்சயமாக எண்ணி யிருந்தனர். கிங்கும் அப்படித்தான் நடக்கப்போகிற தென நினைத்தார். ஆனால் மார்ட்டின் அப்படி நிச்சய மாக இருக்கவில்லை. மற்றனைத்தையும் விடத் தம் மக்களுக்கு மிகச் சிறந்த முறையில் உதவி செய்யக் கூடிய ஒரு தொழிலைத் தெரிந்தெடுப்பதையே அவர் விரும்பினார்.

மார்ட்டின் ஒரு முடிவுக்கு வராததை ஊகித் துணர்ந்த அவர் அன்னை, ஒரு வைத்தியராக இருக்கலா மென்று அவருக்கு யோசனை கூறினாள். தம் அன்னையின் யோசனை சரியானதாக இருக்கக் கூடுமென்று மார்ட்டி னும் நினைத்தார். அவள் விரும்பியது போலவே தாம் ஒரு வைத்தியராகத்தான் இருக்கவேண்டும் என்று எண்ணினார். வைத்தியர் என்ற முறையில் தாம் தமது மக்களிடை வியாதி விகிதத்தைக் குறைக்க உதவி செய்யலாமென்று நினைத்தார்.

ஏன், ஒரு வழக்கறிஞராக இருந்தால் என்ன, என்றும் எண்ணிப் பார்த்தார். வழக்கறிஞர் என்ற

முறையில் தாம் தமது பேச்சு வன்மையைப் பயன் படுத்தித் தம் மக்களை நீதி மன்றங்களில் வெற்றி பெறச் செய்யலாமே என்று எண்ணினர்.

எப்போதுமே இப்படித்தான் நடந்தது. ஏதாவது ஒரு தொழிலில் புகுவதைப் பற்றி அவர் ஒரு முடிவுக்கு வரமுயலும் போதெல்லாம், அவருக்குத் தம்முடைய மக்களைப் பற்றிய நினைவு வரும். அவர்களுக்குத் தாம் மிக அதிகமாக உதவிபுரியக் கூடியதான ஒரு தொழிலைத் தெரிந்தெடுக்கும் வரை எதையும் ஒப்புக்கொண்டு விடக்கூடாது என்று நினைத்தார்.

மார்ட்டின் தமது வருங்காலத் தொழிலைப் பற்றி ஒரு முடிவுக்கு வரவில்லை யாயினும், அவர் சமுதாய வாழ்க்கை நூலையும், ஆங்கிலத்தையும், தமது முக்கியப் பாடங்களாக எடுத்துக் கொண்டார். சமுதாய வாழ்க்கையறிவு மக்களின் போக்கைப்பற்றி அறிந்து கொள்ள உதவும்; ஆங்கிலம், அவரை இன்னும் நன்றுகப் பேசச் செய்யும்—எனவே இந்தப் பாடங்களை எடுத்துக் கொள்வது, ஏதோ நல்லவிதமான ஆரம்பமே என்று அவருக்கு நிச்சயமாயிருந்தது.

முடிவில் ஒரு வியாசந்தான் மார்ட்டினை ஒரு தீர்மானத்திற்கு வரச் செய்தது—ஹென்றி டேவிட் தோரோவின் 'சட்ட மறுப்பு' என்ற கட்டுரையே அது.

எண்பது வருடங்களுக்கு முன்னர், மஸாசூஸெட்ஸைச் சேர்ந்த கான்கார்ட் என்ற ஊரில், நியாயமற்ற சட்டங்களுடன் ஒத்துழைக்கத் தோரோ மறுத்தார். தாம் நியாயமென்று கருதிய ஒன்றிற்காக, அவர் சிறைக்குக் கூடச் சென்றுர். தேர்தலில் வாக்கு அளிக்கும் உரிமைக்காக ஆள் வரி கொடுக்கவேண்டு மென்ற சட்டம், நியாயமற்றது என்று தோரோ

கருதினுர். எனவே, அவர் ஆறுவருடகாலம் ஆள் வரி கொடுக்காமலிருந்து வந்தார்; ஆனுல் எப்படியும் வாக்கு அளிக்கும் உரிமை தமக்கு உண்டு என்று வற்புறுத்தினுர். பிறகு அவர் கைது செய்யப்பட்டுச் சிறையிலடைக்கப் பட்டார்.

தோரோவின் கட்டுரையை மார்ட்டின் திரும்பத் திரும்பப் படித்தார். அதில் கண்ட சட்ட மறுப்பு உத்தியை, நீகிரோக்கள் தங்கள் உரிமைகளைப் பெற உபயோகிக்கலாம் என்று அவருக்குச் சிறிது சிறிதாகத் தோன்றத் தொடங்கியது. நீகிரோக்களைக் கேவலமாக நடத்த இடங்கொடுக்கும் சட்டங்களுக்குக் கீழ்படிந்து நடக்க மறுத்தாலென்ன?

கடைசியில், நீகிரோக்கள் சுதந்திரப் பாதையில் செல்வதற்கு உதவியாயிருக்கக்கூடிய ஏதோ ஒன்று மார்ட்டினுக்குப் புலப்பட்டு விட்டது.

சட்ட மறுப்பைப் பற்றிய எண்ணங்கள், மார்ட்டினது மனத்தில் வேரூன்றின. அப்போது அவர் தாம் வெற்றியடைய வேண்டுமானுல், தம்முடைய கருத்துக்களைப் பல நீகிரோக்கள் ஏற்றுக்கொள்ளச் செய்ய முயல வேண்டும் என்பதை உணரத் தொடங்கினுர். தாம் ஒரு தெய்வ பக்தராக, ஒரு மதபோதகராக மக்களுக்கு உழைக்க முன் வருவது அதற்குச் சிறந்த வழியாகாதா என்று நினைத்தார்—அதாவது மக்களைச் சுதந்திரப் பாதையில் அழைத்துச் செல்லும் ஒரு புதுவகை மத போதகராவதற்கு விழைந்தார்.

அதைப் பற்றி நினைத்துப் பார்க்கப் பார்க்க, மதபோதகராக இருப்பதே சரியான தென்பதை மார்ட்டின் உணர்ந்தார். ஆனுல், அவர் தமது தீர்மானத்தை யாருக்கும் தெரிவிக்கவில்லை. தமக்கு

வழிகாட்டும்படி ஆண்டவனைப் பிரார்த்தனை செய்து கொண்டார். தமக்கு ஒரு துறை உண்டென்று சந்தேகத்திற்கிடமின்றி நிச்சயம் செய்து கொள்ள விரும்பினார்.

இப்போது, கல்லூரியில் மார்ட்டினது முதல் வருடப் படிப்பு முடியவிருந்தது. அடுத்த வருடப் படிப்புக்கான செலவை அவர் இன்னும் சம்பாதிக்க வேண்டியிருந்தது. அந்த வருடக் கோடை காலத்தின்போது அவர் தம்பி டேனியலுடனும் மற்றும் சில நண்பர்களுடனும் கானெக்டிகட்டியிலுள்ள சிம்ஸ்பரி என்ற இடத்திற்கு, புகையிலை வயல்களில் வேலை செய்வதற்காகச் சென்றார்.

ஒரு மாணவன் தான் சம்பாதிக்கும் பண விஷயத்தில் கருத்துடையவனாயிருந்தால், முந்நூறு அல்லது நானூறு டாலர்களுடன் வீடு திரும்பலாம். அந்தப் பணம் சம்பளம் கொடுக்க உதவியாயிருக்கும் என்பதை மார்ட்டின் அறிந்திருந்தார். அது தவிர, கானெக்டி கட்டில் வேலை செய்தது, வட பிராந்தியத்திலுள்ள சுதந்திரத்தை அனுபவிக்கும் வாய்ப்பையும் அவருக்கு அளித்தது. வாரக் கடைசி நாட்களில் அவரும், டேனிய லும் தங்கள் நண்பர்களோடு நகரத்திற்குச் சென்றனர். நகரத்தின் எந்தப் படக்காட்சிக் கொட்டகைக்குப் போகவும், தாங்கள் பணம் செலவழித்துச் சாப்பிடக் கூடிய சக்தியுள்ள எந்த உணவு விடுதிக்குப் போகவும் அவர்களுக்கு உரிமை இருந்தது.

வேலை என்னவோ கடினமானதுதான். கொளுத்தும் வெயிலில், தாங்க முடியாத வெப்பத்தில், எல்லையற்ற தாகக் காணப்பட்ட பண்ணை நிலப்பரப்பில், நாள்கணக் காகப் புகையிலையைப் பறிக்க வேண்டும்.

மார்ட்டின், அட்லாண்டாவிற்குத் திரும்பியபோது அவர் ஒரு தீர்மானத்திற்கு வந்துவிட்டிருந்தார். தாம் மத போதனை செய்வதற்குத் தமக்கு அழைப்பு வந்துவிட்டதாக அவர் தெரிவித்தார். மோர்ஹௌசில்,மேல் வகுப்பில் சேர்ந்த சிறிது காலத்திற்கெல்லாம், பதினெட்டு வயதான மார்ட்டின் ஒரு மத போதகராக ஏற்றுக் கொள்ளப்பட்டார். அடுத்து, எபெனெசர் பாப்டிஸ்ட் மாதா கோயிலின் உதவி மத போதகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அன்று எல்லாருக்கும் வெற்றிக் களிப்புண்டான நாளாகும். முக்கியமாக மார்ட்டின் தந்தைக்கு.

8. தயாராதல்

எந்த இலட்சியத்தை நோக்கிச் செல்லத் தமக்கு விருப்பம் என்பது அப்போது மார்ட்டினுக்குத் தெளிவாகி விட்டது.

மதத்தில் அவருக்கு ஏற்பட்டிருந்த சிரத்தை, புதுப் பொருள் பெறலாயிற்று. தோரோவின் எழுத்துக்களைப் படித்ததனால் அவரது தத்துவ சாஸ்திர ஆர்வம் கிளறி விடப்பட்டிருந்தது. அந்த ஆர்வம் அவரை மற்ற எழுத்தாளர்களையும், தத்துவ ஞானிகளையும் பற்றித் தெரிந்து கொள்ளத் தூண்டியது. அநீதியை எதிர்த்துப் போராடுவதற்காகத் தமக்குத் தேவைப்பட்ட அதிகப்படியான அறிவை அவர்களது நூல்களிலிருந்து பெறமுடியும் என்று அவர் நினைத்தார்.

1948ஆம் வருடம் ஜூன் மாதத்தில் மோர்ஹௌஸ் கல்லூரியிலிருந்து பட்டதாரியாக வெளியேறினார் மார்ட்டின்.

ஆனல், தாம் விரும்பியபடி அமையக்கூடிய மத போதகராவதற்குப் போதுமான கல்வியறிவைத் தாம் இன்னும் பெறவில்லை என்றே அவர் கருதினர். எனவே அவர் தமக்களிக்கப்பட்ட உபகாரச் சம்பளத்தைப் பயன் படுத்திக் கொண்டு பென்ஸில்வேனியாவைச் சேர்ந்த செஸ்டரிலுள்ள கிரோசர் மத போதனைக் கல்லூரியில் சேரத் தீர்மானித்தார்.

அங்கு அனைத்தும் தம்மையே பொறுத்திருக்கும் என்பதை அவர் அறியாமலில்லை. எப்படியும், மோர் ஹவுஸ்போல இஃது இராது. அங்குப்போலக் கல்லூரியில் பகுதி நேரத்தையும், மீதிப் பொழுதை வீட்டிலும் கழிக்க முடியாது என்பதை அவர் உணர்ந்தார். கிரோசருக்குச் செல்வதென்ருல் தம் வீட்டிலிருந்து அறுநூறு மைல் தூரத்தில் வட பிராந்தியத்தில் வசிக்க வேண்டும்; அங்கு வெள்ளையரான மாணவர்களோடு போட்டியிட்டுப் படித்தாக வேண்டும் என்பது அவருக்கு நன்கு தெரிந் திருந்தது. அது அவரிடம் பொறுப்புணர்ச்சியையும், பக்குவப்பட்ட ஆண்மகனுக்குரிய மன நிலையையும் ஊட்டத் தொடங்கியது. சுமார் நூறு வெள்ளையரான மாணவர்களுக்கிடையேயிருந்த ஆறு நீகிரோக்களுள் அவர் ஒருவராக இருந்தார். ஒருவிதத்தில் தாம் எப் போதும் ஒரு காட்சிப் பொருளைப்போலக் கருதப்பட்டு வரக்கூடுமென்பது அவருக்குத் தெரியும். ஆகவே, தம் மக்களின் மதிப்பைக் குறைக்கக் கூடிய எதையும் தாம் செய்யவே கூடாது என்று தீர்மானித்தார்.

சிநேகம் செய்து கொள்வதென்பது மார்ட்டினுக்கு எப்போதுமே எளிதான காரியம்; கிரோசர் அதற்கேற்ற இடம். ஆனல், வட கரோலினவிலிருந்து வந்த ஒரு மாணவர் மட்டும், நீகிரோக்களைச் சக மாணவர்களாக ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை. நீகிரோக்களைப்பற்றிக்

குறிப்பிடும்போது, அவர் 'டார்க்கி', அதாவது கறுப்பன் என்ற சொல்லை அடிக்கடி உபயோகிப்பது வழக்கம். அது நீகிரோக்கள் விரும்பாத இன்னொரு இழிசொல்.

வட கரோலினுவிலிருந்து வந்த அந்த மாணவர், நீகிரோக்களைக் குறித்துக் கொண்டிருந்த மனோபாவத்தைப் பற்றி முதலில் மார்ட்டின் முழுதும் அறிந்திருக்கவில்லை. ஒரு சம்பவத்தில் அவருடன் சிக்கிக்கொண்டபோதுதான் அது தெரிய வந்தது. குறும்புத்தனமான விளையாட்டின் விளைவே அது. ஒரு மாணவன் தனது அறையைவிட்டு வெளியே சென்றிருக்கக் கண்டால், உடனே சக மாணவர் கூட்டமொன்று அவனது அறைக்குள் சென்று சாமான்களை எடுத்து அலங்கோலமாகப் போடும். மேசை, நாற்காலிகளை எல்லாம் தலைகீழாகத் திருப்பி வைக்கும். சாமான்கள், புத்தகங்களை எல்லாம் கண்டபடி எறியும். மறுபடியும் அறையை ஒழுங்குபடுத்தி வைக்கப் பல மணி நேரம் பிடிக்கும்.

வட கரோலின மாணவரும் இந்த வேடிக்கை விளையாட்டில் பல முறை கலந்து கொண்டிருந்தார். ஒருநாள் அவர் வெளியிலிருந்து வந்தபோது அவரது அறைக்கும் அதேவித மரியாதை கிடைத்திருப்பதைக் கண்டார். உடனே அவர், மார்ட்டினிடம் சென்று, பகைமை காரணமாக அவர்தான் அப்படிச் செய்திருந்ததாகக் குற்றஞ்சாட்டினர். பிறகு ஒரு துப்பாக்கியை வெளியிலெடுத்து, மார்ட்டினைச் சுட்டுவிடுவதாகப் பயமுறுத்தினர்.

அந்த மாணவரின் அறையை அலங்கோலப்படுத்திய கூட்டத்தில் தாம் இல்லவே இல்லை என்று மார்ட்டின் நிதானமாகக் கூறினர். அதற்குள் மற்ற மாணவர்கள் அவ்விருவரையும் சூழ்ந்து கொண்டார்கள். வட கரோ

ஷி மாணவரைத் துப்பாக்கியைப் பைக்குள் திருப்பிப் போடும்படியும் செய்தனர்.

ஆனல், விஷயம் இத்துடன் தீர்ந்து விடவில்லை. அது, மாணவர்கள் சபையினருக்கும், கல்லூரி அதிகாரிகளுக்கும் தெரிவிக்கப்பட்டது. அவர்மீது குற்றச்சாட்டை வற்புறுத்த மார்ட்டின் விரும்பவில்லை. முடிவில் வெள்ளையரான மாணவரே, தாம் செய்தது தவறென்று ஒப்புக்கொண்டு, பகிரங்கமாக மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். பிற்காலத்தில் அவரும் மார்ட்டினும் நெருங்கிய நண்பர்களாயினர்.

கிரோசரில், மார்ட்டின், ஏசுநாதரின் போதனைகளையும், எல்லா மதங்களின் மற்றப் பெருந்தலைவர்கள் எழுதியுள்ளவற்றையும் மும்முரமாகப் படித்தார். அஹிம்சா தர்ம முறையினல், தம் மக்களைப் பிரிட்டிஷ்காரரின் கொடுமையினின்றும் விடுதலையடையச் செய்த சாந்த சீலரான இந்தியப் பெருந்தலைவர் மகாத்மா மோஹனதாஸ் கரம்சந்து காந்தியின் வாழ்க்கை வரலாற்றையும், போதனைகளையும் பற்றித் தெரிந்துகொண்டார்.

தோரோவைப் போன்றே, காந்தியடிகளும் தாம் நியாயமற்றது என்று கருதிய சட்டங்களை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தார். ஆனல், தோரோவை மீறிப் போனர் காந்தியடிகள். அநீதியாகவும் கொடுமையானதாகவும் காணப்படும் சட்டங்களை மீறவேண்டும்; தாங்கள் கைது செய்யப்படும்படி விட்டுவிடவேண்டும்; போலீஸ்காரரின் தடியடிப் பிரயோகத்தை—ஓடிவிடாமலும், திருப்பி அடிக்காமலும்—ஏற்றுக்கொள்ள வேண்டும்—இவ்வாறு அவர் தம்மைப் பின்பற்றியவர்களுக்குப் போதித்தார். அவர் கொடுமை இழைப்பவர்கள்பால் அன்புடன் நடந்து கொள்ளச் சொன்னர். வெறுக்கும்படிச் சொல்லவில்லை.

நீகிரோக்களைப் பாதி அளவு சுதந்திரமுள்ளவர்களாக இருக்கும்படிச் செய்து வந்த அநீதியான சட்டங்கள் விஷயத்தில் தக்கபடி நடந்துகொள்வதற்குத் தாம் நெடுங்காலமாகத் தேடிக் கொண்டிருந்த முறை கிடைத்துவிட்டதை, மார்ட்டின் உணர்ந்தார்.

ஏசுநாதர், தோரோ, மகாத்மா காந்தி இவர்களின் போதனைகளையும், கொள்கைகளையும் ஏன் ஒன்றுசேர்த்து உபயோகிக்கக்கூடாது என்று மார்ட்டின் தம்மைத் தாமே கேட்டுக்கொண்டார் ''உங்கள் விரோதிகளையும் நேசியுங்கள்'' என்று ஏசுநாதர் கூறியிருக்கவில்லையா? தோரோவும், காந்தியும் அநீதியான சட்டங்களை எதிர்த்துப் போராடவில்லையா? ஒரு முழுத் தேசமும் கொடுமைக்காளாகி வந்தது; அந்தக் கொடுமையை ஒழிக்க அன்பே உதவிசெய்தது என்பதைக் காந்தியடிகள் முன்னரே காண்பித்திருக்கவில்லையா?

அத்தகைய முறையினுல் என்னென்ன சாதிக்கப்பட முடியும் என்று நினைத்துப் பார்க்கவும், மார்ட்டினது மனம் சுழன்றது. அந்த முறையைச் செயற்படுத்த முடியும் என்பதைக் கண்டார். அது செயற்படுவது திண்ணம் என்றும் தேர்ந்தார்.

ஆனுல், அதை எப்படி மக்கள் மனத்தில் பதியச் செய்வது? எங்கே? எப்போது?

இந்தப் புதிய கொள்கையை நீகிரோக்களின் மனத்தில் பதியச் செய்வது எளிதான காரியமன்று என்பது அவருக்குத் தெரிந்தேயிருந்தது.

சரியான தருணம் ஏற்படுவதைத் தாம் பொறுமையுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கவேண்டுமென்று தீர்மானித்தார்.

9. கனவு விளக்கம்

கிரோசரில், மூன்று ஆண்டுக் காலம் மிக விரைவிலேயே ஓடிப்போய் விட்டது. மார்ட்டின் ஒவ்வொரு வருடமும், பெரும் பகுதிக்காலம் வட பிராந்தியத்திலேயே வசித்து வந்தார். இது அவருக்குத் தம் தரப்பில் இருந்த வெள்ளையர்களைப் பற்றித் தெரிந்து கொள்ள ஒரு வாய்ப்பு அளித்தது. அவ்வாறே, அங்கும் கறுப்பர் பால் இருந்த வெறுப்பைக் கண்டுகொள்ளவும் உதவியது. அங்கே, "வெள்ளையர்களுக்கு மாத்திரம்" என்று கூறிய அறிக்கைப் பலகை கிடையாது. ஆயினும், நீகிரோக்களுக்கும் உணவளிக்கப்படவேண்டும் என்ற சட்டங்கள் இருந்துங்கூடச் சில இடங்களில் அவர்கள் அனுமதிக்கப்படாததை அவர் நேரில் கண்டார்.

மார்ட்டின் தமது இருபத்திரண்டாம் வயதில் கிரோசரில் பட்டதாரியானார். அவர் தமது வகுப்பில் முதல் மாணவராக விளங்கி, பிரிவுபசாரப் பிரசங்கம் நிகழ்த்தினார். அவருக்கு வேறு கௌரவங்களும் கிடைத்தன. அவற்றுள் ஒன்று, கிரோசர் சர்வகலாசாலை நிதியிலிருந்து 1200 டாலர் ரொக்கமாக அளிக்கப் பட்ட உபகாரப் பணம். தாம் தெரிந்தெடுக்கும் கலாசாலையில் மேலும் இரண்டு வருடங்கள் படிப்பதற்கே அந்த உதவித்தொகை. அதைக் கொண்டு கல்வித் துறையில் மிக உயர்ந்த அந்தஸ்தை—அதாவது டாக்டர் பட்டத்தை—மார்ட்டின் பெற வசதி வாய்த்தது.

மார்ட்டின் போஸ்டன் பல்கலைக் கழகத்தைத் தேர்ந்தெடுத்தார். அங்கே நகரத்தில் ஓர் அறையை வாடகைக்கு எடுத்துக் கொண்டார். பல்கலைக் கழகப் பட்டத்தைப் பெற்றதற்காக அவரது பெற்றோர் பச்சை நிறமுள்ள ஷெவ்ரோலெட் வண்டியைப் பரிசளித்தனர்.

அவர் அந்த வண்டியில் தினமும் பல்கலைக் கழகத்திற்குச் சென்று வருவார்.

போஸ்டனில், கோரெட்டா ஸ்காட் என்ற அழகான பெண்ணை மார்ட்டின் சந்தித்தார். அவள், நியூ இங்கிலாந்து சங்கீதப் பள்ளிக்கூடத்தில் குரல் பயிற்சியைப் பற்றிய பாடம் படித்துக்கொண்டிருந்தாள். அவளும் மார்ட்டினைப் போலவே தென் பிராந்தியத்தைச் சேர்ந்தவள்; இனவெறுப்பின் கொடுமையை அறிந்தவள். அவர்களிருவரும் படிப்பை முடிக்க இன்னும் ஒரு வருட காலம் பாக்கியிருந்தது. ஆயினும், முதல் நாள் பழகியதுமே, திருமணம் செய்து கொள்வதைப் பற்றிச் சூசகமாக மார்ட்டின் பேசத் தொடங்கி விட்டார்.

மாதங்கள் செல்லச் செல்ல, திருமணம் செய்து கொள்வதைப்பற்றி அவர் அதிகம் வற்புறுத்திப் பேசலானார். கோரெட்டாவுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அவள் ஒரு மேடைப் பாடகியாக விரும்பினாள். தன் தொழிலில் நன்றாக ஊன்றிய பிறகே மணம் செய்துகொள்ள வேண்டுமென்று எண்ணியிருந்தாள்.

ஆனால் மார்ட்டின், அவளை உடனே மணம் செய்து கொள்ளச் சம்மதிக்கும்படிச் செய்துவிட்டார். அவர்களிருவருக்கும் 1953-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18-ஆந் தேதியன்று திருமணம் நடைபெற்றது. மார்ட்டினது தந்தைதான் மணச் சடங்கை, கோரெட்டாவின் வீட்டுத் தோட்டத்தில் நடத்தி வைத்தார்.

புதிதாகத் திருமணமானவர்கள், கலாசாலையில் தங்கள் படிப்பை முடித்துக்கொண்ட சமயம், அவர்கள் ஒரு பெரிய விஷயத்தைப் பற்றி ஒரு முடிவுக்கு வர வேண்டியதாயிற்று. புதிய டாக்டர் கிங்குக்கு மூன்று

கல்லூரிகளிலிருந்து ஆசிரியர் பதவிக்கான அழைப்புக் கிடைத்தது. மற்றும் வடபிராந்தியத்தைச் சேர்ந்த இரண்டு கோயில்களுட்பட மூன்று கோயில்களிலிருந்தும் அவர் தங்கள் மதபோதகராக வரவேண்டுமென்று அழைப்பு வந்தது. மூன்ருவது கோயில், தெற்குப் பிராந்தியத்தில் அலபாமாவிலுள்ள மாண்ட்காமெரியில் அமைந்ததாகும்.

டாக்டர் கிங்கும் அவரது மனைவியும், தெற்குப் பிராந்தியத்திற்குப் போக விருப்பமில்லாமலிருந்தனர். அங்கே அவர்களிருவரும் இரண்டாந்தரப் பிரஜை களாகக் கஷ்டப்பட்டவர்கள் அல்லரோ? வடபிராந்தி யத்து வேலைகளுள் ஒன்றை ஏற்றுக்கொண்டால் தாங்கள் சுகமாக வாழ்க்கை நடத்த முடியும் என்பது அவர் களுக்குத் தெரியும்.

ஆயினும், நீகிரோக்கள் சரிவர நடத்தப்படா விட்டாலுங்கூடத் தெற்குப் பிராந்தியந்தான் அவர் களது சொந்த இடம். அவர்கள் வேரூன்றியிருந்ததும் அங்கேதான். குடும்பத்தினருடனும், நண்பர்களுடனும் திரும்பச் சேர்ந்திருக்க விரும்பினர்.

எனவே, அலபாமாவைச் சேர்ந்த மாண்ட்கா மெரியிலுள்ள டெக்ஸ்டர் அவென்யு பாப்டிஸ்ட் கோயிலின் மத போதகர் பதவியை மார்ட்டின் ஏற்ருர். அந்த வாலிபத் தம்பதிகள், தாங்களிருவரும் ஒன்று சேர்ந்து தங்கள் மக்களுக்கு நல்ல வருங்காலத்தை உருவாக்க உதவி செய்யமுடியும் என்று நம்பினர்.

10. பொறிபிடித்துக் கொள்கிறது

டெக்ஸ்டர் அவென்யு பாப்டிஸ்ட் சர்ச்சின் மத போதகர் பதவியை ஏற்க மார்ட்டின் தீர்மானித்ததை

அவர் தந்தை ஆட்சேபித்தார். எபெனெசர் கோயிலின் துணை மதபோதகர் பதவி ஏற்று அட்லாண்டாவிலேயே மார்ட்டின் தங்குவாரென்று அவர் எதிர்பார்த்திருந்தார். அது தவிர வேறு காரணங்களும் இருந்தன.

கிங்குக்கு ஒரு சம்பவம் நினைவிலிருந்தது. பல வருடங்களுக்கு முன்னர், அவரும், மதபோதகக் குழுவினரும், மாண்ட் காமெரிக்குச் சென்றிருந்த போது ஒரு டிராலி வண்டியில் ஏறிக் கொண்டார்கள். வெள்ளைக்காரக் கண்டக்டர், வண்டியின் முன்பக்கத்தில் தான் கட்டணத்தை வசூலித்தார். பிறகு, அவர் அவர்களைக் கீழே இறங்கிச் சென்று பின்புறத்தில் நீகிரோக்கள் ஏறும் வழியாக ஏறும்படி உத்தரவிட்டார். கிங் அப்படிச் செய்ய மறுத்துத் தாம் கொடுத்த பணத்தைத் திருப்பத்தர வேண்டுமென்று கேட்டார். அவர் தமது கோரிக்கையை வற்புறுத்தியதால் காரசாரமான விவாதம் ஏற்பட்டது. இறுதியில், அவருடைய நண்பர்கள், அவரை வண்டியினின்று இறங்கச் செய்தார்கள்.

இருபத்தைந்து வருடங்களுக்குப் பிறகு அவர் மகன், மாண்ட்காமெரிக்கு வந்தபோதும் நிலைமையில் அதிக மாறுதல் ஏற்பட்டிருக்கவில்லை. டிராலி வண்டிகளின் இடத்தில் பஸ்கள் இருந்தன. ஆனால், நீகிரோக்கள் இன்னமும் பின்பக்கத்தில்தான் உட்காரவேண்டியிருந்தது.

டாக்டர் கிங் இத்தகைய அநீதிகளைக் கண்டித்துத் தமது ஞாயிற்றுக்கிழமைப் பிரசங்கங்களில் பேசினார். அவர் மற்ற மதபோதகர்களிடமும், நீகிரோ கழகத் தலைவர்களிடமும் காந்தியடிகளின் சட்ட மறுப்பு இயக்கத்தைப் பற்றிப் பேசவும் தொடங்கி விட்டார்.

''அத்தகைய திட்டத்தை மாண்ட் காமெரியில் ஏன் பின்பற்றக் கூடாது?'' என்று அவர் நினைத்தார். ''நீகிரோக்கள் தங்கள் கண்டனத்தைத் தெரிவிப்பதற்கு அடையாளமாக, பஸ்களில் பிரயாணஞ் செய்வதை நிறுத்திவிட்டால் என்ன நடக்கும்?'' என்று அவர் தம்முடைய நண்பர்களைக் கேட்டார். ''அத்தகைய திட்டம் என்ருவது ஒருநாள் பலனளிக்கலாம்'' என்று அவர்களும் நினைத்தார்கள்.

மாண்ட் காமெரிக்கு,டாக்டர் கிங் வந்து ஒரு வருட காலத்திற்கு மேலாகி விட்டது. தாங்களே தங்களுக்கு உதவி செய்து கொள்வதற்காக 'ஏதாவது செய்ய வேண்டும்' என்பதைப் பற்றி நீகிரோக்கள் இன்னும் தங்களுக்குள் பேசிக்கொண்டுதா னிருந்தார்கள். பிறகு ஒருநாள் ரோசா பார்க்ஸ் என்ற நீகிரேர்த் தையற்கார மாது 'ஏதோ' செய்தாள். வேலை முடிந்த பிறகு அவள், மாண்ட் காமெரிக் கடை வீதியில் ஒரு பஸ்ஸில் ஏறினுள்; தன் கட்டணத்தைக் கொடுத்து விட்டு வெள்ளையர்களுக்கு ஒதுக்கி வைக்கப்பட்ட இடம் என்று எழுதியிருந்ததற்குக் கீழே கிடந்த ஆசனங்களுள் முதலிலிருந்ததில் உட்கார்ந்து கொண்டாள். வேறு மூன்று நீகிரோக்களும் அந்த வெள்ளையர் பகுதியில் அவளருகில் அமர்ந்தனர்.

பஸ்ஸில் வெள்ளைக்காரப் பிரயாணிகள் நிரம்பத் தொடங்கவே, நீகிரோக்கள் எழுந்து கொண்டு அவர்களுக்கு இடம் விடவேண்டுமென்று வண்டி ஒட்டுபவர் உத்தரவிட்டார். மற்ற மூன்று நீகிரோக்களும் உடனேயே எழுந்து நின்று இடம் விட்டனர். ரோசா பார்க்ஸ் மட்டும் தன் இடத்திலேயே தொடர்ந்து அமர்ந்திருந்தாள்.

அவள் எழுந்து நிற்க வேண்டுமென்று வண்டி ஓட்டுபவர் மீண்டும் உத்தரவிட்டார். அவள் அசைய வில்லை. அதன்பேரில், ஒரு போலீஸ்காரரைக் கூப்பிட் டார்கள். அவர் வந்து கைது செய்து சிறைக்கு அழைத்துச் சென்றார். அது நடந்தது 1955ஆம் வருடம் டிசம்பர் மாதம் 1 ஆந் தேதியன்று.

ரோசா பார்க்ஸ் கைது செய்யப்பட்டதைப் பற்றி முதன் முதல் கேள்விப்பட்டவர்களுள் புல்மன் வண்டி போர்ட்டரான ஈ. டி. நிக்ஸன் ஒருவர். அவர் ஒரு சமயம், நீகிரோக்களின் மிகப் பழைய பிரஜா உரிமைச் சங்கமான 'கறுப்பு மனிதர்கள் முன்னேற்றத்திற்கான தேசீய சங்க'த்தின் கிளைத் தலைவராக இருந்தவர். ரோசா பார்க்ஸ் அவரது காரிய தரிசியாக இருந்தவள். அவள் கைது செய்யப்பட்ட செய்தி அவருக்கு அறிவிக் கப்பட்டதும், அவர் உடனே அவள் விடுதலையாவதற் கான ஜாமீன் பத்திரத்தில் கையெழுத்திடச் சென்றார்.

ரோசா பார்க்ஸ் கைதானது, நிக்ஸரின் மனத்தை மிகவும் கலக்கியது. அச்செயல் நீகிரோச் சமூகத்துக்கு இழைக்கப்பட்ட பெரிய அநீதியென அவர் நினைத் தார். மறுநாள் அதிகாலையில் டாக்டர் கிங்கை அவர் அழைத்து, ரோசா பார்க்ஸ் கைதானதைக் கண்டிக்கும் முகமாக, இனி பஸ்களை நீகிரோக்கள் பகிஷ்காரம் செய்ய வேண்டும் என்று சொன்னார். பஸ் பகிஷ்காரத்துக்கு உரிய தருணம் வந்துவிட்டது என்பதை டாக்டர் கிங்கும் உணர்ந்தார்.

அன்று இரவு, டாக்டர் கிங்கின் மாதா கோயிலில் நீகிரோத் தலைவர்களின் கூட்டமொன்று நடந்தது. அதில் கலந்து கொண்ட மதபோதகர்கள், பஸ்களில் பிரயாணஞ் செய்ய மறுப்பதன் முக்கியத்துவத்தைப்

பற்றி, ஞாயிற்றுக்கிழமையன்று பிரார்த்தனைக் கூட்டத்தினருக்கு எடுத்துச் சொல்ல ஒப்புக் கொண்டனர்.

பஸ்களைப் பகிஷ்கரிக்கப் போவதைப்பற்றி அறிவிக்கும் ஏழாயிரம் துண்டுப் பிரசுரங்களை அச்சிட்டு வழங்கவும் நீகிரோக் கழகம் திட்டமிட்டது.

வெள்ளையர் கழகமும், பகிஷ்காரத்தைப் பற்றி விரைவிலேயே அறிந்தது. ஒரு நீகிரோப் பணிப் பெண்ணிடமும் ஒரு துண்டுப் பிரசுரம் கொடுக்கப்பட்டிருந்தது. அவளுக்குப் படிக்கத் தெரியாதாகையால், அதைப் படித்துச் சொல்லும்படி தன் எசமானியை அவள் கேட்டுக் கொண்டாள். தான் படித்ததை அந்த வெள்ளைக்காரியினால் நம்பவே முடியவில்லை. 'அவர்களுக்கு என்ன துணிச்சல்!' என்று பதறினாள். உடனே ஒரு செய்திப் பத்திரிகையைக் கூப்பிட்டு, செய்தியைத் தெரிவித்தாள்.

சனிக்கிழமையன்று காலை, பகிஷ்கரிப்புத் திட்டச் செய்தி அதன் முதல் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அதைக் கண்டு டாக்டர் கிங்கும், அவருடைய தோழர்களும் மகிழ்ச்சியுற்றார்கள். ஏனென்றால், ஒரு வெள்ளைக்காரப் பத்திரிகையே, தங்கள் துண்டுப் பிரசுரத்திற்குத் தாங்கள் திட்டமிட்டதை விட அதிகமான விளம்பரம் கொடுத்திருந்ததைக் கண்டார்கள். துண்டுப் பிரசுரம் வார்த்தைக்கு வார்த்தை அப்படியே அச்சிடப் பட்டிருந்தது.

5ஆம் தேதி திங்கட் கிழமையன்று வேலை செய்வதற்கோ, நகரத்திற்கோ, பள்ளிக்கூடத்திற்கோ செல்வதற்குப் பஸ்ஸில் போகாதீர்கள். வேலைக்குப் போக வேண்டியிருந்தால் வண்டியில் செல்லுங்கள்; அல்லது ஒரு வண்டியில் சேர்ந்து செல்லுங்கள்:

அல்லது நடந்து செல்லுங்கள். மேற்கொண்டு செய்ய வேண்டியதைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு ஓட்டல் ஸ்டிரீட் பாப்டிஸ்ட் கோயிலில் திங்களன்று மாலை 7-00 மணிக்கு நடைபெறும் பொதுக் கூட்டத்திற்கு வாருங்கள்.

கடைசியில் திங்கட்கிழமை காலை வந்தபோது மார்ட்டினும் அவரது மனைவியும், பகிஷ்காரம் எத்தனைத் தூரம் வெற்றி யென்று பார்ப்பதற்காகக் காலை ஐந்தரை மணிக்கே எழுந்துவிட்டனர். அவர்கள் வீட்டு வாசல் வழியே சென்ற பஸ்ஸில்தான், மற்ற வழிகளில் சென்ற பஸ்களைவிட அதிகமான நீகிரோப் பிரயாணிகள் செல்வது வழக்கம். வீடுகளில் வேலை செய்பவர்கள் விடியற்காலையில் அதில் நிறைந்திருப்பார்கள்.

அவர்கள், முன் பக்கத்துச் சன்னல் வழியாகக் கவனித்துக் கொண்டிருந்தபோது, முதல் பஸ் மெதுவாகச் செல்வதைக் கண்டனர். அது காலியாய் இருந்தது! பதினைந்து நிமிடங்களுக்குப் பிறகு இரண்டாவது பஸ் வந்தது. அதுவும் காலிதான். மூன்ருவது பஸ்ஸில் இரண்டே இரண்டு வெள்ளைக்காரப் பிரயாணிகள் மட்டுமே இருந்தனர்.

டாக்டர் கிங் அவசரமாக உடை அணிந்தவராய் வீட்டைவிட்டு விரைந்து வெளிவந்து தம் வண்டியில் ஏறிக் கொண்டார். அவர் ஒரு மணி நேரத்திற்கு அதிகமாகவே ஒவ்வொரு பஸ்ஸையும் கவனித்துப் பார்த்தபடி ஊரில் சுற்றி வந்தார். அவர் எட்டு நீகிரோக்கள் மட்டுமே பிரயாணம் செய்வதைக் கணக்கிட்டார். சாதாரணமாக ஒரு நாளில் பஸ்கள், சுமார் 17,500 பிரயாணிகளை அவர்கள் வேலை செய்யுமிடங்களுக்கு ஏற்றிச் சென்று, பிறகு அந்த இடங்களிலிருந்து திரும்ப ஏற்றி வருவது வழக்கம்.

11. சுதந்திரத்திற்காக நடத்தல்

நகரத்தின் 'ஒதுக்கி வைக்கும் சட்டம்' வெள்ளையர்களுக்கிருந்த உரிமைகளை நீகிரோக்களுக்கு அளிக்கவில்லை. அந்தச் சட்டத்திற்குக் கீழ்ப்படிந்து நடக்காததற்காகரோசா பார்க்சுக்குப் பத்து டாலர்கள் அபராதம் விதிக்கப்பட்டது. கோர்ட்டுச் செலவும் அவள் கொடுக்க வேண்டியதாயிற்று. இதன் விளைவாக நியாயமற்ற முறையில் ஒதுக்கி வைத்த சட்டங்களை எதிர்த்து வழக்காடுவதற்குத் தெளிவானதொரு பரிசோதனை வழக்கு, முதல் முறையாகக் கிடைத்து விட்டது.

அன்று பிற்பகல்,பகிஷ்கார இயக்கத் தலைவர்களின் கூட்டமொன்று நடைபெற்றது. அதில் புதிதாக அமைக்கப்பட்ட மாண்ட் காமரி அபிவிருத்திச் சங்கத்தின் தலைவராக டாக்டர் கிங் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பகிஷ்காரம் சம்பந்தமான கொள்கையை வரையறுத்துப் போராட்டத் திட்டங்களை வகுக்கும் பொறுப்பு இந்தச் சங்கத்தைச் சேர்ந்தது.

அன்று மாலை நடக்கவிருந்த பொதுக் கூட்டத்திற்குப் போவதற்கு முன்,டாக்டர் கிங் தம் வீட்டிற்குச் சென்று சற்று நேரம் தங்கினர். அப்போது தம்மீது திடீரென்று சுமத்தப்பட்டிருந்த புதிய பொறுப்பு தமக்கு மிக்க கவலையளித்ததையும் மனைவியிடம் தெரிவித்தார்; அவளுடனும், இரண்டு வாரங்களுக்கு முன்பே பிறந்திருந்த பெண் குழந்தை யோலந்தாவுடனும் சேர்ந்து பொழுது போக்குவதற்கு இனித் தமக்குப் போதிய நேரம் கிடைக்காதென்பதைச் சொல்லிவிட்டு, ''இதிலெல்லாம் இடுக்கண் நேரக்கூடிய சந்தர்ப்பம் இருக்கிறதென்பதையும் நான் உன்னிடம் மறைப்பதற்கில்லை'' என்று நிதானமான குரலில் கூறி முடித்தார்.

மார்ட்டின் கூறியதை எல்லாம் கோரெட்டா அமைதியாகக் கேட்டு வந்தாள். ''தாங்கள் என்ன செய்தாலும், அதற்கு என் ஆதரவு உண்டு என்பது உங்களுக்குத் தெரியும்'' என்று நம்பிக்கையூட்டும் குரலில் கூறினாள். பிறகு, ''இடுக்கண் நேரும்போது அதைப் பற்றி யோசித்துக் கொள்ளலாம்'' என்று கூறிப் புன்னகையும் புரிந்தாள்.

அன்று இரவு, பொதுக்கூட்டத்தின்போது ஹோல்ட் ஸ்டிர்ட் மாதா கோயிலில் மக்கள் நிறைந்து வழிந்தனர். ஏறக்குறைய மூவாயிரம் பேர், உள்ளே செல்ல முடியவில்லை. கோயிலுக்குள் பேசுவதை வெளியில் உள்ளவர்களும் கேட்பதற்காக, வெளியே ஒலி பெருக்கிகள் வைக்கப்பட்டன.

அந்த மாபெரும் கூட்டத்தினர், வழக்கத்தைவிட அதிகமான உற்சாகத்துடனும், பொங்கி வழிந்த பாரமார்த்திக உணர்ச்சியுடனும், குரலெழுப்பித் தொடக்கப் பிரார்த்தனைக் கீதத்தைப் பாடினர். ''கிறித்தவ வீரர்களே! முன்னேறிச் செல்லுங்கள்!'' என்ற வாசகம் பேரொலியாய் எழுந்தது. டாக்டர் கிங் பேசுவதற்காக எழுந்தபோது கூட்டத்தினர் மௌனமாய் இருந்தனர். டெலிவிஷன் காமிராக்கள் இயங்கத் தொடங்கின. பஸ் பகிஷ்காரம், ஒரு பெரிய 'செய்தி'யாகி யிருந்ததே காரணம்.

''அன்புதான் நம்மை நெறிப்படுத்தும் கொள்கையாயிருக்க வேண்டும்'' என்று டாக்டர் கிங் தமது தெளிவான, தீர்க்கமான குரலில் அழுத்தந் திருத்தமாகக் கூறினார். 'உங்கள் எதிரிகளை நேசியுங்கள்; உங்களைச் சபிப்பவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைக் குரோதத்துடன் நடத்துபவர்களுக்காகப் பிரார்த்தனை புரியுங்

கள்...' என்றெல்லாம் நூற்ருண்டுகளாக எதிரொலித்துக் கொண்டிருக்கும் ஏசுநாதரின் உபதேச மொழிகளை நாம் மறுபடியும் காது கொடுத்துக் கேட்க வேண்டும்.

"நீங்கள் தைரியமாக ஆட்சேபத்தைத் தெரிவிக்க வேண்டும். அதே நேரத்தில் கண்ணியத்தையும் அன்பையும் கைவிடலாகாது. அவ்விதம் நீங்கள் நடந்து கொண்டால் வருங்காலத்தில் வரலாற்றை வரையும் ஆசிரியர்கள், சற்று யோசித்துப் பார்த்துவிட்டு, 'ஒரு காலத்தில், உயர்ந்த கறுப்பு மக்கள் வசித்தார்கள். அவர்களுடைய நாகரிகத்தின் நரம்புகளில் ஒரு புதுக் கருத்தையும், கௌரவத்தையும் புகுத்திஞர்கள்' என்று கூறுவார்கள். இதுதான் நம்மை இன்று எதிர்ப்பட்டுள்ள சவாலும், மிகப் பெரும் பொறுப்புமாகும்.'

பகிஷ்காரம் ஆரம்பித்த முதல் சில தினங்களில் அதன் வேகம் ஏறிக் கொண்டே போயிற்று. அது நீகிரோ சமூகத்தினிடையே புதிய பெருமிதத்தையும், கௌரவ உணர்ச்சியையும், ஒன்று சேர்ந்து உழைக்கும் மனப்பான்மையையும் தோற்றுவித்தது. நீகிரோக்கள், உற்சாகத்துடன் நடந்து சென்ருர்கள். மழையையோ, தொலைவையோ அவர்கள் பொருட்படுத்தவில்லை. கிழவர்களும், கிழவிகளும், சிறிய குழந்தைகளுங்கூட நடந்தார்கள். சிலர், தெருக்களில் கோவேறு கழுதைகளின் மீதேறிச் சென்ருர்கள்; அல்லது குதிரை வண்டிகளில் போஞர்கள். நீகிரோக்கள் ஓட்டிய வாடகை வண்டிகள் இருநூற்றுப்பத்து இருந்தன; மற்றவர்கள் இவற்றுள் ஏதாவது ஒன்றில் சென்ருர்கள். அந்த வண்டிகளின் சொந்தக்காரர்கள் பிரயாணிகளிடம் பஸ் விகிதக் கட்டணம் பெற்றுக் கொள்ளச் சம்மதித்தனர். தனிப்பட்டவர்களின் வண்டிகளில் ஏற்றிச் செல்வதற்கான ஏற்பாடுகளும் அன்ருடம் அதிகரித்து

வந்தன. அவர்களில் யாரும் பஸ்ஸில் பிரயாணம் செய்யவேயில்லை.

தங்களுடைய நிபந்தனைகள் ஏற்றுக் கொள்ளப்படா விட்டால், நீகிரோக்கள் பஸ்களில் பிரயாணம் செய்யப் போவதில்லை என்பது பஸ் கம்பெனியின் சொந்தக்காரர் களுக்கும், வெள்ளைக்கார சமூகத்தினருக்கும் விரைவி லேயே தெரிய வந்தது. நீகிரோக்கள் விரும்பியவை இந்த மூன்றே விஷயங்கள் தாம். அவை: வண்டி ஓட்டு பவர்கள் மரியாதையாக நடந்து கொள்ள வேண்டும்; முதலில் ஏறியவர்களுக்கு முதலிடம் என்ற அடிப்படை யில் ஆசனமளிக்கப்பட வேண்டும்; நீகிரோக்கள் பஸ் வண்டி ஓட்டுபவர்களாக நியமிக்கப்பட வேண்டும்.

பஸ் கம்பெனியும், நகர அதிகாரிகளும் நீகிரோக் களின் நிபந்தனைகளுக்குச் சம்மதிக்கவில்லை; ஆகையால் பகிஷ்காரம் தொடர்ந்து நடைபெற்றது. பிறகு நகர அதிகாரிகள், பகிஷ்காரம் செய்தவர்கள் விஷயத்தில் முரட்டுத்தனமாக நடந்து கொள்ள ஆரம்பித்தனர். பிரயாணிகளை ஏற்றிச் சென்ற தனிப்பட்டவர்களின் வண்டிகளை ஓட்டியவர்களை நிறுத்தி, அவர்களது லைஸென்ஸையும் காண்பிக்கச் சொன்னார்கள். மிகவும் அற்பமான சாக்கை வைத்துக் கொண்டு அவர்களைக் கோர்ட்டுக்கு வரும்படிச் செய்தனர். வண்டியிலேற்றிக் கொள்ளப்படுவதற்காகக் காத்துக் கொண்டிருந்த பிரயாணிகளை 'இலவசச் சவாரிப் பிச்சை கேட்கும் பாட்டை சாரிகள்' என்ற முறையில் கைது செய்யப் போவதாகப் பயமுறுத்தினர். ஆனால் பகிஷ்காரத்தில் ஈடுபட்டவர்களுள் பெரும்பாலோர் உறுதியுடனேயே இருந்தனர். பிரயாணிகளை ஏற்றிச் சென்ற சொந்த வண்டிக்காரர்களில் சிலரே விலகிக் கொண்டனர். ஏனென்றால், அவர்கள் தங்கள் லைஸென்ஸ்களும்,

இன்ஷ்யூரென்ஸ் பாலிஸிகளும் ரத்து செய்யப்பட்டு விடக் கூடுமென்று அஞ்சினர். போலீஸ்காரரின் வசவு களிடை அஹிம்சா தர்மத்துடன் நடந்து கொள்ளத் தங்களால் முடியாமற் போய்விடுமென்று அஞ்சியவர் களாய் மற்றும் சிலர் விலகிக் கொண்டனர்.

பிறகு ஒருநாள் டாக்டர் கிங்கையே ஒரு பொய்க் குற்றச் சாட்டின் பேரில் கைது செய்தனர். ஆனுல் அவர் சிறையில் அதிக நேரம் இருக்கவில்லை. அவர் கைது செய்யப்பட்ட தகவல் நீகிரோச் சமூகம் முழுதும் விரைவில் பரவிவிட்டது. உடனே ஒவ்வொருவரும் அவருக்கு உதவி செய்ய என்ன செய்யலாம் என்று தெரிந்து கொள்வதற்காகச் சிறையை நோக்கிச் சென்றனர்.

விரைவிலேயே சிறைக்கு வெளியில் அனுதாபிகளின் கூட்டம் மிகப் பெரியதாகிவிட்டது. அதைக் கண்டு சிறை அதிகாரி கலவர மடைந்தார். அவர் டாக்டர் கிங்கைத் தமது பொறுப்பிலேயே விடுதலை செய்து, தாமே அவரைச் சிறைக்கு வெளியே கொண்டு வந்து விட்டுவிட்டுப் போனுர்.

அதையடுத்து, பகிஷ்காரத்தை நீகிரோக்கள் கை விட்டு விடும்படிச் செய்வதற்காக மேலும் கடுமையான முறைகள் கையாளப்பட்டன. ஒரு நாள் இரவு, டாக்டர் கிங் ஒரு பொதுமக்கள் கூட்டத்தில் இருந்தபோது, அவர் வீட்டின் முகப்பு மீது ஒரு குண்டு வீசப்பட்டது. அது வெடிப்பதற்குச் சிறிது நேரம் முன்னர், கோரெட்டா தன் பெண் குழந்தையை எடுத்துக் கொண்டு, வீட்டின் பின் புறமாக ஓடினுள். கிங்கின் வீட்டின் முன் பக்கத்துச் சன்னல்கள் பெரும்பாலும் உடைந்து விட்டன. அவர்கள் அமரும் அறையில் இருந்தவை அனைத்தும் சிதறுண்டன. ஆயினும்

கோரெட்டாவும் குழந்தையும் பத்திரமாயிருந்தனர். முகப்புப் பகுதியில் ஏதோ கனமான ஒன்று விழுந்த சத்தம் கோரெட்டா காதில் விழுந்தது அதிருஷ்ட வசமேயாகும்.

குண்டு வீசப்பட்டதைப் பற்றிய செய்தி டாக்டர் கிங்குக்கு எட்டி, அவர் தமது வீட்டிற்கு வந்து சேர்வதற்குள், அங்கே கோபமுற்றிருந்த நீகிரோக்களின் கூட்டம் கூடிவிட்டது. போலீஸ்காரர்களால் அவர்களை அடக்கி வைக்க முடியவில்லை. நீகிரோக்களுக்குள் பலர் ஆயுதம் தரித்து வந்திருந்தார்கள். அவர்கள் அஹிம்சா தர்மத்தைத் தொடர்ந்து கடைப்பிடிக்கத் தயாராயில்லை.

டாக்டர் கிங் அவர்களைப் பார்த்து, ''உங்களிடம் ஆயுதங்களிருந்தால் அவற்றை வீட்டுக்கு எடுத்துக் கொண்டு போங்கள்! உங்களிடம் அவை இல்லாவிட்டால் அவற்றைப் பெற முயற்சி செய்யாதீர்கள். நாம் இந்தப் பிரச்னையைப் பலாத்காரத்தினால் தீர்த்துவிட முடியாது... 'வாள் கொண்டு வாழ்பவன், வாளினாலேயே நாசமுறுவான்' என்று ஏசுநாதர் கூறியதை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்......நமது வெள்ளைக்காரச் சகோதரர்களின் 'வெறுப்பை' 'அன்பு' கொண்டே தான் சமாளிக்க வேண்டும் என்று அமைதியாகக் கூறினார்.

குண்டு வீச்சினாலோ, துன்புறுத்துவதினாலோ, தந்திரங்களைக் கையாளுவதனாலோ பகிஷ்காரத்தை நிறுத்த முடியவில்லை. மூன்று மாதங்களுக்குப் பிறகு, மாண்ட் காமெரி ஜுரிகள் கூட்டம் கூடி, பகிஷ்காரம் செய்வது சட்ட விரோதமானது என்று முடிவு கூறியது. பிறகு அவர்கள் பகிஷ்காரத்தில் ஈடுபட்டிருந்தவர்களில் நூறு பேரையும், அவர்களுடைய தலைவர்களையும் கைது

செய்யத் தொடங்கினர். அவர்கள் எல்லாரும் உற்சாகத்துடன் சரணடைந்து, சிறைக்குச் சென்றனர்.

டென்னஸியிலுள்ள நாஷ்வில் என்ற இடத்திற்குப் பிரசங்கம் செய்வதற்காக டாக்டர் கிங் சென்றிருந்தார். அப்போது, தம்மைக் கைது செய்ய உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருந்ததை அவர் கேள்விப்பட்டார். உடனே மாண்ட் காமெரிக்கு விரைந்து திரும்பினர்; மற்றவர் களைப் போன்றே தாமும் சரணடைந்தார்.

ஏராளமான பேர் கைது செய்யப்பட்ட தகவல் நாட்டுப் பத்திரிகைகள் அனைத்தையும் எட்டிவிட்டது. எல்லா இடங்களிலிருந்தும், பத்திரிகை நிருபர்களும், டெலிவிஷன் படம் பிடிப்பவர்களும் மாண்ட்காமெரிக்குக் கூட்டம் கூட்டமாக வந்தனர். மார்ச்சு மாதம் 19-ஆந் தேதியன்று விசாரணை தொடங்கியபோது உலகத்துப் பத்திரிகைகளெல்லாம் அவ்வழக்கைப்பற்றியசெய்திகளை வெளியிட விரும்பித் தங்கள் பிரதிநிதிகளை அனுப்பி யிருந்தன. அவர்களுள் பிரான்ஸிலிருந்தும் இங்கிலாந் திலிருந்தும் வந்த நிருபர்கள் இருந்தனர். விடுதலை பெற்றுவிட்ட இந்தியாவிலிருந்தும் வந்திருந்தனர். இந்திய தேசத்தின் தலைவரான காந்தியடிகள் தாமே மார்ட்டின் லூதர் கிங்குக்கு வழி காட்டி!

இராச்சியத்தின் பகிஷ்காரத் தடைச் சட்டத்தை டாக்டர் கிங் மீறியதாக, நான்கு நாள் விசாரணைக்குப் பிறகு தீர்ப்பளிக்கப்பட்டது. அவர் 500 டாலர் அபராதம் செலுத்த வேண்டும் என்றும், தவறினால் 386 நாட்கள் உள்ளூர்ச்சிறையில் கடுங்காவல் அனுபவிக்க வேண்டும் என்றும் நீதிபதி தீர்ப்பு வழங்கினர். உடனேயே அப்பீல் செய்வதற்கான நோட்டீஸ் தாக்கல் செய்யப்பட்டது; டாக்டர் கிங்கும் மற்றவர்களும் ஜாமீன் பத்திரங்களின்மீது விடுதலை செய்யப்பட்டனர்.

இரண்டு மாதங்களுக்குப் பிறகு, மே மாதம் 11-ஆந் தேதியன்று, பெடரல் நீதிமன்றத்தில் மூன்று நீதிபதிகள் முன், அப்பீல் வழக்கு விசாரணைக்கு வந்தது. அவர்கள் முடிவுக்கு வர மூன்று வாரங்கள் பிடித்தன. ஆயினும் எத்தனை நாட்கள் வேண்டுமானாலும் காத்துக் கொண்டிருக்கத் தகுந்த முடிவு அது. "மாண்ட்காமெரியில், பஸ்களில் தனிப்படுத்தி வைப்பதை அனுமதித்த சட்டங்களை அமல் செய்வதற்கில்லை; ஏனென்றால் அவை அரசியலமைப்புக்கு விரோதமானவை" என்று அந் நீதிபதிகள் தீர்ப்புக் கூறினார்கள். எனினும், இன்னும் முழு வெற்றியும் கிடைத்துவிடவில்லை.

மாண்ட்காமெரி நகரத்தின் சார்பாக அமர்த்தப் பட்டிருந்த வழக்கறிஞர்கள் அமெரிக்க ஐக்கிய நாட்டின் சுப்ரீம் கோர்ட்டிற்கு அப்பீல் செய்து கொண்டனர்; அதுவே தேசத்தின் மிக உயர்ந்த நீதிமன்றம். மறுபடியும் மாண்ட்காமெரி நகரத்திற்குத் தோல்வியே ஏற்பட்டது.

அலபாமா பஸ்களில் இடம் ஒதுக்கிய சட்டங்கள் அரசியலமைப்புக்குப் புறம்பானவை என்று 1956-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13-ஆந் தேதியன்று, சுப்ரீம் கோர்ட்டும் தீர்ப்பு அளித்தது.

மார்ட்டின் லூதர்கிங்கைத் தம் தலைவராகக் கொண்ட மாண்ட்காமெரியின் 50,000 நீகிரோக்கள் தங்கள் சுதந்திரத்திற்காக 381 நாட்கள் நடந்து சென்ற பிறகு அநியாயத்துக்கு எதிராக வெற்றி கண்டனர். அதற்கு முன்னர் அமெரிக்க நீகிரோக்கள் ஒருநாளும் ஒருமைப்பட்டிராத விதத்தில் ஒன்றுபட்டிருந்தார்கள் அவர்கள் தங்களுக்கு ஒரு புதிய கௌரவத்தைத் தேடிக் கொண்டதன்றி, தங்கள் வெற்றியின் பயனாக உலகத்தின் மதிப்பையும் பெற்றார்கள்.

12. நாங்கள் வெற்றி பெறுவோம்

இந்தக் காலமுதல் டாக்டர் கிங், மேன்மேலும் முன்னேறிச் சென்றுகொண்டிருந்தாரே தவிர திரும்பு முகம் என்பதே கிடையாது. புத்துணர்ச்சி பெற்ற மக்களுக்குத் தாம் திடீரெனத் தலைவராகி விட்டதை அவர் கண்டார். தெற்குப் பிராந்திய முழுவதிலும், ஆட்சேபத்தைத் தெரிவிக்கத் திட்டமிடப்பட்டது. தென்பிராந்திய கிறிஸ்தவத் தலைமைச் சங்கம் என்று ஒரு புதிய அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது. டாக்டர் கிங் அதன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சுதந்திரப் போராட்டத்தில் மற்றக் கோஷ்டியினரும் சேர்ந்து கொண்டனர். வட பிராந்தியக் கல்லூரிகளின் வெள்ளைக்கார மாணவர்களே, தெற்குப் பிராந்தியக் கல்லூரிகளின் நீகிரோ மாணவர்களுடன் போராட்டத்தில் கலந்து கொண்டனர். அவர்கள் ஒரு கோஷ்டியினராகச் சேர்ந்துகொண்டு, நீகிரோக்களுக்கு உணவளிக்க மறுத்த ஓட்டல்களிலும், சாமான்கள் விற்க மறுத்த கடைகளிலும் உட்கார்ந்து சத்தியாக்கிரகம் செய்தனர். அவர்கள் பயமுறுத்தப்பட்டார்கள்; பல சமயங்களில் அடிக்கவும் பட்டார்கள். ஆனால், அவர்கள் அதற்காக நின்றுவிடவில்லை. அஹிம்சா தர்ம உணர்ச்சியை இழந்துவிடவுமில்லை.

பிறகு **சுதந்திரப் பிரயாணங்கள்** ஆரம்பமாயின. நாடு முழுவதிலுமிருந்து வந்த வெள்ளையர்களும், நீகிரோக்களும் தெற்குப் பிராந்திய பஸ்களில் ஏறி, வெள்ளையர் பகுதியில் ஒன்றுசேர்ந்து உட்கார்ந்தனர். அவர்கள் பஸ் நிலையத்தைச் சேர்ந்த சிற்றுண்டிச்சாலைகளுக்கும், நெடுஞ்சாலைச் சிற்றுண்டி விடுதிகளுக்கும் சென்று 'பரீட்சை' செய்யலாயினர். பொது மக்கள்

வசதிக்கான அந்த இடங்களில் தங்களோடு நீகிரோக்களுக்கும் உணவு பெற உரிமையுண்டு என்பதை அவர்கள் வற்புறுத்தினர். அதன் விளைவாக அவர்களில் நூற்றுக் கணக்கானவர்கள் வண்டிகளிலேற்றப்பட்டுச் சிறைச் சாலைகளுக்கு அனுப்பப்பட்டனர். சிறைச்சாலைகளில் அவர்கள்உண்ணுவிரதமிருந்து, சுதந்திர கீதங்களைப் பாடினர்கள்.

''நாங்கள் வெற்றி பெறுவோம்!'' என்பது சுதந்திரப் போராட்டக்காரர்களின் கீதமாக அமைந்தது. மறியல் நடந்த பஸ் நிலையங்களிலும், சுதந்திர அணிகளிலும் அதைப் பாடினர்கள். தெற்கே, கிராமாந்திரங்களின் தனிமை நிறைந்த வயல்களில் நடந்த கூட்டங்களில் மக்கள் தங்கள் கைகளைக் கோத்துக்கொண்டு, தீவட்டி வெளிச்சத்தில் அதைப் பாடுவார்கள். சிறைச் சாலைக்கு அழைத்துச்செல்லப்பட்ட போதும் அதைப் பாடுவார்கள்:—

''நாங்கள் அஞ்சவில்லை அஞ்சவில்லை
நாங்கள் இன்று அஞ்சவேயில்லை
ஏ! என் இருதயத்துள்ளே நம்புகிறேன்
ஒரு காலத்தில் வெற்றி பெறுவோமென்றே''

சுதந்திர இயக்கம் எங்கெங்கே உச்ச நிலையை அடைந்ததோ அங்கெல்லாம், மக்களுக்குத் தைரியம் கூறவும், பாரமார்த்திக உணர்ச்சி ஊட்டவும் டாக்டர் கிங் செல்வார். 'அர்பன் லீக்', 'கறுப்பு மக்களின் முன்னேற்றத்திற்கான தேசியச் சங்கம்' போன்ற பழைய போராட்டக் குழுவினரும், சுதந்திர இயக்கத்திற்குத் தமது ஆதரவையளித்தனர். 'இன சமத்துவ காங்கிரஸ்', 'மாணவர் அஹிம்சாதர்ம இணக்கக் கமிட்டி' போன்று புதிதாகத் தோன்றிய கோஷ்டியினரும் அவர்களோடு சேர்ந்து கொண்டனர்.

எல்லா மதப்பிரிவுகளையும் சேர்ந்த குருமார்கள் இயக்கத்தில் சேர்ந்தனர். 'சுதந்திரப் பிரயாணம்' செய்ததற்காக எபிஸ் கோபோலியக் கோயில்களைச் சேர்ந்த வெள்ளைப் பாதிரிமாரும் சிறையிலிடப்பட்டனர். தெற்கத்திய சிறைகளில் யூதமதக் குருமார் உண்ணுவிரத மிருந்துகொண்டும், பிரார்த்தனை புரிந்து கொண்டு மிருந்தனர். ஒரு கத்தோலிக பிஷப், தமது மாவட்டத்தி லிருந்த வெள்ளைக்காரப் பள்ளிக்கூடங்களில் நீகிரோக்கள் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டுமென்று வற்புறுத் தினர்.

பல்லாயிரக்கணக்கில் மக்கள் குழுமிய பெருங் கூட்டங்களிலும், வயல்களில் நடந்த சிறிய கூட்டங் களிலும் டாக்டர் கிங் பேசினர். கிங்கை அவரது குடும் பத்தினர் அபூர்வமாகவே பார்த்து வந்தார்கள். ஆனல், அவர் மனைவி கோரெட்டா, உறுதியுடனேயே இருந்தாள்.

தங்கள் இரண்டாவது குழந்தை மார்ட்டின் லூதர் கிங் (மூன்ருவது)க்கு ஒரு வயதுதாளுகி இருக்கும். அப்போது நியூயார்க் நகரில் சித்த சுவாதீனமற்ற ஒரு நீகிரோ மாது, காகிதம் அறுக்க உபயோகிக்கும் கத்தி யால் டாக்டர் கிங்கைக் குத்தி விட்டாள். அதனுல் பல தினங்கள்வரை அவரது உடல் நிலை கவலைக்கிடமா யிருந்து வந்தது.

அவர்களின் மூன்ருவது குழந்தையான டெக்ஸ்டொ ஸ்காட்டை, கோரெட்டா கருத்தரித்திருந்தபோது டாக்டர் கிங் அட்லாண்டாச் சிறையொன்றில் இருந் தார். ஆட்சேப அணி நடத்திச் சென்றதற்காகக் கைது செய்யப்பட்டு அவ்வாறு அவர் தண்டனையடைந் திருந்தார்.

கடைசிக் குழந்தையான பர்னிஸ் ஆல்பர்ட்டை, கோரெட்டா பிரசவித்த சமயம் டாக்டர் கிங் அலபாமா விலுள்ள பர்மிங்ஹாமில் ஒருவார காலம் ஆர்ப்பாட்டங் களை நடத்தி முடித்தார். 2,500 நீகிரோக்களடங்கிய கூட்டத்தைப் போலீஸ்காரர்களின் வரிசைகளுக் கிடையே அழைத்துக் கொண்டு நகரத்தின் கடைவீதிப் பகுதிக்குப் போனார். சிற்றுண்டி விடுதிகளிலும், வீதி களிலும் அவர்கள் கைது செய்யப்பட்டனர். ஆயினும் நீகிரோக்கள் நின்றுவிடவில்லை. தாங்கள் ஞாயிறன்று தரிக்கும் சிறந்த உடைகளை உடுத்திக் கொண்டும், 'நாங்கள் வெற்றி பெறுவோம்' என்று பாடிக் கொண்டும் வரிசை வரிசையாக அவர்கள் வந்து கொண்டே இருந்தனர்.

தீயணைக்க உபயோகிக்கப்படும் தண்ணீர் பீச்சும் குழாய்கள் அவர்கள்மீது திறந்து விடப்பட்டன. தண் ணீரின் வேகத்தினால் பலர் தரையோடு தரையாக வீழ்த் தப்பட்டனர்.

மற்றவர்கள் அவர்களுக்குப் பதிலாக வந்தார்கள். மொத்தத்தில் அந்த வாரம் பர்மிங்ஹாமில் 3,300 நீகிரோக்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் வண்டி களில் சிறைகளுக்கு அனுப்பப்பட்டபோதும் பாடிக் கொண்டே இருந்தனர். அவர்களுள் டாக்டர் கிங்கும் இருந்தார்.

கோரெட்டா மிகவும் கவலைப்பட்டாள். டாக்டர் கிங் சிறைப்பட்டிருந்தபோதெல்லாம் அவளுக்குத் தகவல் சொல்லியனுப்புவது வழக்கம். ஆனால், இம்முறை அவர் தனியே சிறைவைக்கப்பட்டிருந்தார். தன் கணவரின் நிலையைத் தெரிந்துகொள்ளத் துடித்த கோரெட்டா இறுதியில் வேறு வழியின்றி ஜனாதிபதி கென்னடிக்கு டெலிபோன் செய்தாள். ஆனால், அவருடன் தொடர்பு

கொள்ள முடியவில்லை. தன் கணவர் கொடுமைக் காரராயிருக்கக் கூடுமோ அல்லது அவருக்கு எதிர் பாராத மரணம் ஏற்பட்டிருக்கக் கூடுமோ என்ற பயம் அவளுக்கு. மறுநாள் மாலை, கோரெட்டாவை யாரோ டெலிபோனில் கூப்பிட்டார்கள். அவள் டெலிபோனை எடுத்துக் கேட்டபோது, “தயை செய்து தங்கள் குழந்தையினிடமிருந்து டெலிபோனை எடுத்துக் கொண்டு விடுங்கள்” என்று ஆபரேட்டர் சுருக்கமாகச் சொன்னார்.

இரண்டு வயதான டெக்ஸ்டர், கீழ்த்தளத்திலிருந்த தொடர்பு டெலிபோனை எடுத்துப் பேசிக்கொண்டிருந் தான். தான் அரசாங்க அலுவலில் குறுக்கிட்டிருந்தது அவனுக்குத் தெரியாது. கோரெட்டாவுடன் ஜனாதிபதி கென்னடி பேசுவதற்குத்தான் ஆபரேட்டர் டெலிபோன் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டிருந்தார். அவளுடைய கணவர் பத்திரமென்றும், சமஷ்டி விசாரணைக் குழுவினர் சகாயத்துக்கு அங்கே இருந்ததையும் ஜனாதிபதி தெரி வித்தார்.

கிங் குடும்பத்தினர், தங்கள் குழந்தைகளை வழக்க மான முறையில் வளர்த்துவர டாக்டர் கிங்கின் அலுவல் களின் போக்கு இடங்கொடுக்கவில்லை. பெரிய குழந்தை களான யோலந்தாவும், மார்ட்டினும் (மூன்றுவது) தங்கள் தந்தை ஏன் சிறைக்குப் போன வண்ணம் இருக் கிறுரென்று கேட்கத் தொடங்கினுர்கள். குற்றம் செய்ப வர்கள் தாம் சிறையில் அடைக்கப்படுவார்களென்பது அவர்களுக்குத் தெரியும். ‘மக்களுக்கு உதவி புரிவதற் காக’த்தான் அவர்கள் தந்தை சிறைக்குச் செல்கிறு ரென்று கோரெட்டா அவர்களுக்கு உறுதி கூறி வந்தாள். எனினும், மற்றக் குழந்தைகள் அதைப்பற்றி அவர்களைக் கிண்டல் செய்துகொண்டுதான் இருந்தனர்.

சனி, ஞாயிறுகளில் தம் குடும்பத்தினரோடு தங்கத் தம்மால் முடிந்தவரை டாக்டர் கிங் முயன்றுதான் வந்தார். விடுமுறை நாட்களில், கூடிய மட்டிலும் வீட்டிலிருக்கவே பார்ப்பார். ஆனால், சுதந்திர இயக்கமோ அவரது அவகாசத்தை வரவர அதிக அளவில் எடுத்துக்கொண்டே வந்தது. ஒருவருடத்தில் மட்டிலும் அவர் 275,000 மைல்கள் பிரயாணம் செய்து, 350 பிரசங்கங்கள் நிகழ்த்தினார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

சுதந்திரப் பிரயாணங்கள், உட்கார்ந்துகொள்ளும் சத்தியாக்கிரகங்கள், ஆட்சேப அணிகள் ஆகியவை மும்முரமாக நடந்தேறிக்கொண்டிருந்தன. மாணவர்கள், ஜார்ஜியாவின் செம்மண் புழுதிச் சாலைகளிலும், மிஸ்ஸிஸிப்பி சதுப்பு நிலப் பிரதேசங்களிலும் சுற்றி வந்து, நீகிரோக்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்யவும், வாக்களிக்கச் செய்யவும் தைரியமூட்டி வந்தனர்.

சுதந்திரப் போராட்டம் தீவிரமடைந்து வந்ததை எதிர்த்து ஜார்ஜியாவில் நான்கு நீகிரோ மாதா கோயில்கள் தீக்கிரையாக்கப்பட்டன. வில்லியம்மூர் என்ற வெள்ளைக்காரத் தபால்காரர், ஒரு சுதந்திர அணிக்காரராகச் சாலைகளில் தனியே சென்று கொண்டிருந்தபோது கொல்லப்பட்டார். மிஸ்ஸிஸிப்பியில், மெட்ஜெர் எவெர்ஸ் என்ற ஒரு நீகிரோத் தலைவர், நள்ளிரவில் தமது வீட்டின் முகப்புப் பகுதியிலேயே சுட்டுக் கொல்லப்பட்டார். அவரைப் போன்று மற்றும் பலரும் தியாகிகளாயினர்.

அது துன்பமும், பயங்கரமும் நிறைந்ததொரு காலம்; உண்மையும், வெற்றியும் கூடிய காலமும் கூட.

13. ‘கனாக் கண்டேன்’

1963-ஆம் ஆண்டு, ஆகஸ்டு மாதம் 28ஆந் தேதி வாஷிங்டனில் மகத்தானதொரு மக்களுரிமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இரண்டரை இலட்சம் மக்களுக்கு மேல் அதில் கலந்து கொண்டனர். அத்தனைப் பெரிய மக்கட் கூட்டத்தை அதற்குமுன் வாஷிங்டன் கண்டதே கிடையாது.

இளையோரும் முதியோரும், நீகிரோக்களும் வெள்ளையர்களும், யூதரும் யூதரல்லாதாரும், ஆடவரும் பெண்டிரும், மாணவர்களும் ஆசிரியர்களும், பங்கீட்டு முறை விவசாயிகளும், மதகுருமார், நடிகர்கள், பாடகர்கள், ஊழியர்கள், இராஜதந்திரிகள் இப்படிப் பல திறத்தினர் வாஷிங்டன் ஞாபகச் சின்னத்தின் சரிவில் கூடினார்கள். அவர்கள் தோளோடு தோள் இடித்துக் கொண்டு, லிங்கன் ஞாபகச் சின்னத்தை நோக்கி அணியாகச் சென்றார்கள்.

எண்ணற்ற பஸ்களில் அவர்கள் வாஷிங்டனுக்கு வந்து குவிந்தனர். நூற்றுக்கணக்கான இரயில் நிலைய அறைகளை அவர்கள் நிறைத்திருந்தார்கள். விமானங்களில் இடமே கிடைக்கவில்லை. வாஷிங்டனுக்கு வடக்கேயிருந்தும், தெற்கேயிருந்தும், கிழக்கேயிருந்தும், மேற்கேயிருந்தும் வரும் சாலைகளில் அவர்கள் வந்த மோட்டார் வண்டிகள் அங்குலம் அங்குலமாகவே நகர்ந்து செல்ல வேண்டியிருந்தது.

கடலுக்கப்பாலுள்ள தேசங்களிலிருந்தும் கூடப் பலர் வந்தார்கள். புதிதாகத் தோன்றியுள்ள ஆப்பிரிக்க தேசத்துப் பிரதிநிதிகளும், ஐரோப்பியத் தலைநகர்களிலுள்ள பத்திரிகைகளின் பிரதிநிதிகளும் வந்தார்கள்.

அந்தப் பெருநாளுக்குப் பல வாரங்கள் முன்னரே, ஓஹையோவைச் சேர்ந்த டேட்டனிலிருந்து எண்பத்திரண்டு வயதான முதியவர் ஒருவர், பேரணியில் கலந்து கொள்வதற்காகத் தமது வெள்ளி சைக்கிளில் ஏறிப் புறப்பட்டார். மற்றொரு மக்களுரிமை இயக்கத் தொண்டரோ, சிக்காகோவிலிருந்து வாஷிங்டனுக்குச் சக்கரமுள்ள பலகையிலேயே சறுக்கி வந்தார்.

நீகிரோக்களைப் போலவே இராணுவப் போலீஸ் படையும், முழு அளவில் திரண்டு வந்திருந்தது. ஏனெனில், அத்தகைய பெரிய கூட்டத்தில் பலாத்காரம் தலைகாட்டக்கூடும் என்று அதிகாரிகளும், வியாபாரிகளும் பயந்தனர். ஆனால், வன்முறைச் செயல் எதுவுமே நிகழவில்லை—அக்கூட்டத்தினர், மார்ட்டின் லூதர் கிங்கின் போதனைகளை மிக நன்றாக அறிந்திருந்த காரணத்தால்.

சிந்தனை செய்யும் நிலையிலிருக்கும் ஆப்ரஹாம் லிங்கனின் சிலைக்குமுன், அவர்கள் எதிரில், கிங் நின்றார். அந்தப் பெருஞ்சிலை அவரைக் குள்ளமானவராகக் காட்டியது. தம்முன்னிருந்த மக்கள் வெள்ளத்தை நோக்கி அவர் பேசினார்:—

"ஜார்ஜியாவின் செங்குன்றுகளின் மீது முன்னை நாள் அடிமைகளின் மக்களும், முன்னை நாள் அடிமைச் சொந்தக்காரர்களின் மக்களும் சகோதரப்பான்மையுடன் ஒன்றாக உட்கார்ந்துகொண்டிருக்க முடியும் என்று கனவு காண்கிறேன். பழைய நீகிரோ கீதத்தின், 'இறுதியில் சுதந்திரம், இறுதியில் சுதந்திரம், இறுதியில் சுதந்திரம் பெற்றுவிட்டோமென்று ஆண்டவனை வணங்குவோமாக!' என்ற வார்த்தைகளை ஆண்டவனின் எல்லாக் குழந்தைகளும் சேர்ந்து பாடக்கூடிய


அந்த நாள் விரைவிலேயே ஏற்படச் செய்ய நம்மால் முடியும்.''

வாஷிங்டனில் பேரணி சென்றது, மக்களுரிமை இயக்கத்திற்குப் புதிய முக்கியத்துவத்தை யளித்தது. நீகிரோக்களுக்குச் சமவுரிமை அளிக்கும் ஒரு மசோதா தயாரிப்பதற்கு உதவும்படி டாக்டர் கிங்கும், மற்ற நீகிரோத் தலைவர்களும் கேட்டுக்கொள்ளப்பட்டார்கள். 'டைம்' பத்திரிகை, டாக்டர் கிங்கை 'இந்த ஆண்டின் முக்கிய மனிதர்' என்று தெரிந்தெடுத்து, அவர் படத்தைத் தன் அட்டையில் பிரசுரித்தது. அவருக்குப் பல கௌரவப் பட்டங்கள் வழங்கப்பட்டன; அவற்றுள் ஒன்று, ஏல் பல்கலைக் கழகம் அளித்த 'சட்ட டாக்டர்' என்பதாகும்.

பேரணியைப் பார்த்து, அதன் அடிப்படையான பலத்தை ஊகித்துக்கொண்ட அதிகாரிகள், ஜனாதிபதி கென்னடி ஆலோசனை கூறிய மக்களுரிமை மசோதா விஷயத்தில் சிரத்தையெடுத்துக் கொள்ளத் தொடங்கினர்.

ஆயினும், ஆத்திரம் இன்னும் அடங்கிவிடவில்லை. மக்களுரிமை இயக்கக் கூட்டங்களுக்காக உபயோகப் படுத்தப்பட்ட ஒரு நீகிரோ மாதாகோயிலின் மீது, செப்டம்பர் மாதம் 15ஆம் நாள், ஞாயிற்றுக் கிழமையன்று குண்டு வீசப்பட்டது. அதன் விளைவாக மத சம்பந்தமான பாடங்களை ஒப்புவித்துக் கொண்டிருந்த நான்கு சிறுமிகள் கொல்லப்பட்டனர். அன்று பிற்பகலில் இருபது வயதுக்குட்பட்ட இரண்டு நீகிரோச் சிறுவர்கள் மறைவான இடத்திலிருந்து சுட்டு வீழ்த்தப் பட்டனர்.

நிரபராதிகளான அக் குழந்தைகள் கொல்லப் பட்டதைக் கண்டு நாடெங்கும் உள்ள நல்ல மக்கள்



வாஷிங்டன் சதுக்கத்தில் சொற்பொழிவு ஆற்றுகிறார் மார்ட்டின் லூதர் கிங்

பேரதிர்ச்சி யுற்றனர். ஓர் உறுதியான மக்களுரிமை மசோதா வேண்டுமென்று எல்லோரும் கோரினர். அத்தகைய மசோதா ஒன்று விரைவிலேயே சட்டமாக்கப்படா விட்டால், நீகிரோக்கள் பொறுமை இழந்து விடக்கூடு மென்ற அச்சமேற்பட்டிருந்தது.

1963ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22ஆம் நாளன்று தாம் கொலை செய்யப்படுவதற்கு முன்னுல், ஜனுதிபதி கென்னடி காங்கிரஸில் மக்களுரிமை மசோதா வொன்றைச் சமர்ப்பித்தார். மக்கள் பிரதிநிதி சபை, அம் மசோதாவை நிறைவேற்றியது. ஆனுல் செனேட்டில் பலமாத காலம், அது, தடைப்பட்டுக் கிடந்தது. இறுதியில் அது செனேட் அங்கத்தினர்களால் நிறைவேற்றப்பட்டு, 1964ஆம் ஆண்டு ஜுலை மாதம் 2ஆம் நாளன்று ஜனுதிபதி ஜான்ஸனுல் கையெழுத்திடப் பட்டது.

இவ்வாறு மக்களுரிமை மசோதா சட்டமாக்கப் பட்டுவிட்டதன் பயனுகச் சுதந்திரப் பாதையில் அமெரிக்க நீகிரோக்கள் அடியெடுத்து வைக்க முடிந்தது.

தம் மக்களின் புதிய நிலைமையைப் பற்றித் தமது பிரசங்க மொன்றின் முடிவில் மார்ட்டின் லூதர் கிங் இவ்வாறு எடுத்துரைத்தார்:—

"ஒரு வயயோதிக நீகிரோ அடிமைப் பிரசங்கி கூறியதை எடுத்துச் சொல்லி, உங்களுக்கு நல்வரவு கூறப்போகிறேன். அவர் சொன்னுர்: "நாம் எப்படி இருக்க வேண்டுமோ அப்படி இல்லை; எப்படி இருக்க விரும்புகிறேமோ அப்படி இல்லை. நாம் எப்படி இருக்கப் போகிறேமோ அப்படியுமில்லை. ஆனுல் நாம் எப்படி இருந்தோமோ அப்படி இல்லை. அதற்காக ஆண்டவனுக்கு வந்தனம் செலுத்துவோம்."

14. பரிசு பெற்றுகி விட்டது

1964ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 14ஆம் நாளன்று மார்ட்டின் லூதர் கிங் சமாதானத்திற்காக உழைத்த உலகப் பெரியார்களுள் ஒருவரானுர். நோபல் சமாதானப் பரிசு பெறுவதற்குரியவராக அந்த வாலிப நீகிரோத் தலைவர் தேர்ந்தெடுக்கப் பட்டதைப் பற்றிய அறிக்கை அன்றைய தினம் வெளியாயிற்று.

முதன் முதலாக 1901ஆம் ஆண்டில் அந்தப் பரிசு அளிக்கப்பட்டது. பரிசு கொடுப்பதற்கான நிதியை அளித்த ஆல்பிரெட் பர்ன் ஹார்ட் நோபலைக் கௌரவிப் பதற்காக அதற்கு அவரது பெயரிடப்பட்டது. அவர் தான் வெடி மருந்தைக் கண்டுபிடித்த ஸ்வீடன் நாட்டு இரசாயன அறிஞர்

அவற்றைப் பெறத் தகுதியானவர்கள் கிடைத்தால் ஒவ்வோர் ஆண்டும் ஐந்து நோபல் பரிசுகள் அளிக்கப் படும். அந்த ஐந்துள் சமாதானப் பரிசு ஒன்றுகும். அதைத் தவிர, வேறு மூன்று நோபல் பரிசுகளும் அளிக்கப் படுகின்றன; இரசாயனம், வைத்தியம், பௌதிகம் ஆகிய மூன்று துறைகளிலும் தலைசிறந்தவர் களுக்கு ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்று. நாலாவது பரிசு, உண்மையான இலட்சியப் போக்குள்ள இலக்கிய நூலின் ஆசிரியருக்கு அளிக்கப்படுகிறது.

தமது முப்பத்தைந்தாவது வயதில் டாக்டர் கிங் அந்தப் பரிசைப் பெற்றுர். அதைப் பெற்றவர்களுள் மிகவும் இளையவர் அவர்தான். அவ்வாறு பெற்ற இரண்டாவது அமெரிக்க நீகிரோவும் அவரே. முதலில் பரிசு பெற்றவர் டாக்டர் ரால்ப்ஜே புஞ்ச் ஆவார். அவர் ஐக்கிய தேசச் சங்கத்தின் உதவிக் காரியதரிசி

என்ற முறையில் நற்பணி புரிந்ததற்காகச் சமாதானப் பரிசு பெற்ருர்.

பரிசுடன் 54,000 டாலர்கள் ரொக்கப் பரிசும் அளிக்கப்படுகிறது. டாக்டர் கிங் இந்தத் தொகையை மக்களுரிமை இயக்கத்திற்கு நன்கொடையாக அளித்தார். நோபல் பதக்கமும், பட்டமும், நோபல் சமாதானப் பரிசுக்கமிட்டியின் தலைவரான குன்னர் ஜஹன் அவர்களால், நார்வேயின் தலைநகரான ஆஸ்போவில், 1964ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10ஆம் நாளன்று டாக்டர் கிங்குக்கு வழங்கப்பட்டன. இதற்கான கொண்டாட்டம் 1896இல் இறந்த டாக்டர் நோபலின் மறைவு தினத்தன்று நடைபெற்றது.

டாக்டர் கிங், பிரத்தியேகமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒரு விமானத்தில் ஆஸ்போவுக்கு வந்தார். அவருடன் அவர் மனைவி, தந்தை, தாயார், சகோதரர், சகோதரிகள், நெடுங்காலமாக அவருடன் மக்களுரிமைக்காகப் போராடிய தலைவர்கள் பலரும் வந்திருந்தனர். அவர்கள் ஆஸ்போ சர்வகலாசாலையின் பெரிய மண்டபத்தில் நின்றபோது, நீண்டகாலப் போராட்டத்தின் நினைவு அவர்களுடைய முகங்களில் நிழலாடியது நன்கு தெரிந்தது. அட்லாண்டாவிலிருந்து வந்த ஓர் எளிய பாப்டிஸ்ட் மதகுருவைப் பாராட்டுவதற்காக நார்வே தேசத்து மன்னரான ஐந்தாவது ஓவாப் உட்பட, புகழ்பெற்ற உலகப் பெரியார் பலர் எழுந்து நின்று கரகோஷஞ்செய்ததை, அவர்கள் பெருமையுடன் கண்டு களித்தனர்.

டாக்டர் கிங்கை அறிமுகப்படுத்தி வைத்த பிரசங்கத்தில், டாக்டர் ஜயின் சொன்ஞர்:—

''...கலங்கா நெஞ்சை யுடைய சமாதான வீரர்......ஒரு போராட்டத்தைப் பலாத்கார

மின்றி நடத்த முடியும் என்று மேற்கத்திய உலகில் நிரூபித்துக் காட்டிய முதல் மனிதர் டாக்டர் கிங்......

''அவர் தமது கொள்கைகளுக்காகத் துன்பங்களுக்குள்ளானுர்; பல முறை சிறைப்பட்டிருக்கிருர்; அவர் வீடு, குண்டு வீச்சுக்களுக்குள்ளாகி யிருக்கிறது; அவரும் அவரது குடும்பத்தினரும் கொல்லப்பட்டுவிடக் கூடுமென்று பயமுறுத்தப் பட்டனர். ஆயினும், அவர் நிலை தவறிவிடவில்லை.''

பரிசை ஏற்றுக்கொண்டு டாக்டர் கிங் பேசியபோது, அவரது கணீரென்ற குரல் அந்தப் பெரிய மண்டபத்தில் நிறைந்திருந்தது. அவர் சொன்னுர்:—

''அமெரிக்க ஐக்கிய நாட்டின் இருநூற்றிருபது இலட்சம் நீகிரோக்கள் நெடுங்கால இன அநீதியை ஒழிப்பதற்கான போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் சமயத்தில், நான் நோபல் சமாதானப் பரிசை ஏற்றுக் கொள்கிறேன் துன்பங்களையும், ஆபத்துக்களையும் பெருந் தன்மையுடன் உதாசீனம் செய்துகொண்டு, சுதந்திரமான ஆட்சியையும், நீதியுள்ள நிர்வாகத்தையும் நிலை நாட்டும் உறுதியுடன் முன்னேறிச் செல்லும் மக்களுரிமை இயக்கத்தின் சார்பாக இதை ஏற்றுக்கொள்கிறேன்.

''நான் ஒரு தர்மகர்த்தா என்ற முறையில்தான் வந்திருக்கிறேன். ஏனெனில், இந்தப் பரிசு என்னைச் சொந்த முறையில் கௌரவிப்பது மட்டுமன்று என்பதை நான் நன்குணர்கிறேன். சுதந்திரப் பிரயாணம் சென்ற ஜெட் விமானம், விமானத்தளத்திலுள்ள மக்களின் உழைப்பு, தியாகம் இவற்றினுலன்றி மேலே கிளம்பியிருக்க முடியாது. நீங்கள் இந்த மக்களைத்தான்

கௌரவிக்கிறீர்கள். இந்த மக்களுள் பெரும்பான்மையோரின் பெயர்கள் பத்திரிகைகளின் தலைப்புக்களாக அமையா; 'யார் எவர்' என்ற வாழ்க்கைக் குறிப்புப் புத்தகங்களிலும் இரா; ஆயினும் பல வருடங்கள் ஓடிச் சென்ற பிறகு, உண்மையின் பேரொளி நாம் வாழும் இந்த அற்புதமான சகாப்தத்தின் மீது விழும். அப்போது, 'நாம் ஒரு மேலான நாட்டில், மேலான மக்களாக, மிகவும் மேலான நாகரிகத்தைக் கொண்டவர்களாக இருப்பதற்கு ஆண்டவனது இந்த அடக்கம் மிக்க மக்கள் நியாயத்தின் சார்பாகக் கஷ்டங்களை மன முவந்து ஏற்றதுதான் காரணம்' என்பதை அக்கால ஆடவரும் பெண்டிரும் அறிவது உறுதி; அந்த வருங் காலக் குழந்தைகளுக்கும் இவ்வாறு கற்பிக்கப்படுவது திண்ணம்.''

15. நெருக்கடி நிலைமை

லூதர்கிங் பரிசு பெற்றுவிட்டது. அப்பரிசு அவருக்கு வழங்கப்பட்டது குறித்து அகில உலகமும் அளவற்ற மகிழ்ச்சி கொண்டது. பரிசுக்கு உரியவராக அவரைத் தேர்ந்தெடுத்தவர்களை உலகப் பெருமக்கள் ஒருமனதாகப் புகழ்ந்தனர்; பரிசு பெற்ற கிங்கைப் பாராட்டினர். கிங்குக்கு முன்னும் பலர் அப்பரிசைப் பெற்றுள்ளனர். அப்பரிசளிப்புக்கெல்லாம் உலகத்தின் கவனத்தை அவ்வளவாகக் கவரவில்லை. ஆனல் கிங்குக்கு வழங்கப்பட்ட பரிசு, உலகெங்குமுள்ள பலதிறப்பட்ட மக்கள் அனைவருடைய கருத்தையும் கவனத்தையும் கவர்ந்தது. காரணம், மிகக் குறுகிய காலத்தில் அவர் ஆற்றிய சமாதானப் பணி உலக மக்களின் கவனத்தை அவ்வளவு தூரம் கவர்ந்திருந்ததே. அவருடைய இலட்சியமும், அதனை அடைய அவர் கையாண்ட

முறையும், அம்முறையில் அவர் ஆற்றிய பணியும் உலக மக்களை அவர் ஆக்கத்தில் அக்கறை கொள்ளச் செய்திருந்தன.

பரிசும், பாராட்டும் பெற்றதோடு கிங்கின் பணி முடிந்து விடவில்லை. அவர் இலட்சியம் பரிசு பெறுவதும் அதனால் புகழ்மாலை சூடுவதும் அல்ல. உலக சமாதானத்திற்கு முதற்படியாக அமெரிக்க மக்களிடையே உள்ள நிற வேற்றுமையைக் களைவதே அவருடைய தொண்டின் இலட்சியமாகும். அந்த இலட்சியத்தை அடைய அவர் மேற்கொண்ட முயற்சிக்குக் கிடைத்த உலகப் பாராட்டின் அடையாளமே அப்பரிசு. அஃது அவரை அத்துறையில் ஊக்குவிக்கும் அளவுக்கே உதவுவதாகும். எனவே அவர் அதனோடு அமைந்து விடவில்லை.

நிற வேற்றுமை என்பது உலகெங்கும் பரவலாகக் காணப்படும் ஒரு சமூகக் கறை. அமெரிக்க மக்களிடையே அது நீண்ட காலமாக வேரூன்றி நிலை பெற்றிருந்தது. இது போன்ற சமூகக் குறைபாடுகளை நினைத்தவுடனே நீக்கிவிட முடியாது; அரசியல் சட்டங்களைக் கொண்டு அப்பொழுதே அகற்றிவிட முடியாது. அரசியல் சட்டங்கள் அவற்றை அகற்றும் முயற்சிக்கு ஆக்கம் தரும் அளவே பயன்படும். மக்களின் மனமாற்றத்தின் மூலமாகவே அவற்றைக் களைய முடியும். இருசாரார் மனத்திலும் மாறுதல் ஏற்படவேண்டும். அதனைச் சிறுகச் சிறுகத்தான் ஏற்படுத்த முடியும். சாத்துவிக முறையில் அதனைச் சிறிது சிறிதாகவே சாதிக்க வேண்டும்.

எனவே, லூதர் கிங் அப்பொழுது அவருடைய இலட்சியத்தை எட்டிவிடவில்லை; அதனை அடைவதற்குரிய பாதையில் ஓரளவு தூரமே முன்னேறியிருந்தார்.

அக்குறுகிய காலத்தில் அவர் அத்துறையில் அடைந்திருந்த முன்னேற்றம் மிகவும் அதிகமே. ஆனாலும் இலட்சியத்தை எட்டிப் பிடிக்க அவர் இன்னும் நெடுந்தூரம் முன்னேற வேண்டியிருந்தது. அவர் பெற்ற பரிசு, உலக மக்கள் அவர் போக்கை ஆதரிக்கிறார்கள் என்பதையும், அவர்களுடைய நல்லெண்ணம் அவர் பக்கம் இருக்கிறது என்பதையும் அவருக்கு உணர்த்தியது. அதனால் ஊக்கமும் உறுதியும் பெற்று, அவர் முன்னிலும் தீவிரமாகத் தம் பணியில் ஈடுபட்டார்.

இலட்சியத்தை நெருங்கும் நிலையில் முன்னிலும் கடுமையான இடைஞ்சல்களும் இடுக்கண்களும் எதிர்ப்படுவது இயல்பு. இலட்சியம் அருகில் உள்ளது என்பதற்கான அறிகுறிகள் காணப்பட்ட உடனே, அவருடைய மக்களில் பலர் பொறுமையிழந்து ஆத்திரப் படலாயினர். சிலர் குறுக்கு வழியாகிய பலாத்காரத்தைப் பின்பற்றத் துடித்தனர். இலட்சிய யாத்திரையில் சோர்வுற்ற சிலரிடம் உணர்ச்சி வேகம் குறையத் தொடங்கியது. எதிர்ப்புறத்திலும் பலவிடங்களில் சிறிது சிறிதாகச் சிதறியிருந்த எதிர்ப்புணர்ச்சி சில இடங்களில் திரண்டு வெறியாக மாறி வந்தது.

லூதர்கிங் இவை அனைத்தையும் சாமர்த்தியமாகச் சமாளிக்க வேண்டியிருந்தது. அவர் ஆத்திரப்படும் தம் மக்களைச் சாந்தப்படுத்தவும், அவர்களைப் பலாத்காரத்திற்குப் பலியாகாமல் பாதுகாக்கவும், அவர்களுடைய உரிமை உணர்ச்சியை ஒடுங்கவிடாமல் வளர்த்து உரம்பெறச் செய்யவும் இடைவிடாமல் முயன்றார்; வெள்ளையரின் எதிர்ப்பைத் தணியச் செய்து, அவர்கள் உள்ளத்தில் நல்லெண்ணத்தையும் நல்லுணர்ச்சியையும் தூண்ட அல்லும் பகலும் அயராது பாடுபட்டார்;

ஒய்வு ஒழிவு இன்றி நாடு முழுதும் சுற்றுப் பயணம் செய்தார்; ஊர் ஊராகச் சென்று கூட்டங்கள் கூட்டி ஆறுதல் கூறி அறிவுரை வழங்கினர்; ஊர்வலங்கள் நடத்தித் தம் மக்களின் உணர்ச்சி வேகத்தை நாட்டு மக்கள் உணரச் செய்தார்.

இருபக்கங்களிலும் நிலைமை நெருக்கடியாகி வந்தது. ஆத்திரத்திற்கு ஆளான சில நீகிரோக்கள் சாத்துவிக முறையில் நம்பிக்கை இழந்தனர். அவர்கள் 'சாத்துவிகத்தால் எதனையும் சாதிக்க முடியாது. பலாத்காரமே நம் நல்வாழ்வுக்கு வழிவகுக்கும்' என்று பிரசாரம் செய்யத் தொடங்கினர். நிறவெறி கொண்ட வெள்ளையர்கள் சிலரிடையே கிங்குக்கு எதிராகச் சதி உருவாகி வந்தது. அவர்களிடமிருந்து கிங்குக்கு அச்சுறுத்தல் செய்திகள் வந்து கொண்டிருந்தன. நிலைமை விரைவாக முற்றிக்கொண்டு வந்தது.

லூதர்கிங் அவற்றால் சிறிதும் உறுதி குலையவில்லை. அவர் கலங்காமல் தம் கடமையை முன்னிலும் தீவிரமாகச் செய்து வந்தார். ஆனல் அவரிடம் நல்லெண்ணமுள்ள பலரும் அவருக்காகக் கவலைப் படலாயினர். கிங்கின் ஆதரவாளர்கள் அவருக்கு எச்சமயத்தில், என்ன நேருமோ என்று அஞ்சினர். இந்நிலையில் டிக்மெரிடித் என்பவர், கிங்கின் துணைவியாரைப் பேட்டி கண்டு பேசினர்.

டிக்மெரிடித்: உங்கள் கணவர் அமெரிக்காவில் எல்லாருடைய அன்பையும்கவர்ந்தவராக இருப்பதோடு, மிகவும் வெறுக்கப்பட்டவராகவும் இருக்கிறர். இந் நிலையில் அவர் இதையெல்லாம் ஆரம்பிக்காமல் இருந்திருந்தால் நல்லது என்று நீங்கள் நினைத்த தில்லையா? நான் பலரைப் பேட்டி கண்ட போது இதைப் பற்றிக் கேட்டிருக்கிறேன். டாக்டர் கிங்

இந்த ஆண்டில் தம்முடைய உயிரைக் காப்பாற்றிக் கொள்ளத் தயாராக இருக்க வேண்டும் என்று அவர்கள் சொன்னார்கள். கென்னடி உயிரைப் போலவே இவர் உயிரையும் சுட்டுக் கொன்று மாய்த்துவிட முடியும். இதைப் பற்றி நீங்கள் கவலைப்படுவதில்லையா?

திருமதி கிங் : ஆம், எனக்கும் கவலைதான். அதைப் பற்றி நிரம்ப எண்ணமிட்டதுண்டு. உண்மையில், வேறு எவரையும்விட, இதைப் பற்றி முதன்முதலாக யோசிக்கப் புகுந்தவள் நான்தான்.

1956-ல் எங்கள் வீட்டின்மீது குண்டு போட்டார்கள். உடனே, பிரச்சினைமீது ஆழ்ந்த சிந்தனை செலுத்த வேண்டியிருந்தது. போராட்டத்தை நீடிப்பதால் எங்கள் உயிருக்கு அபாயம் என்பதை உணர்ந்தோம். இது, பெரும் ஆத்ம சோதனையில் கொண்டுபோய் விட்டது. நாங்கள் செய்வது நியாயம் என்பதை உணர்ந்தோம். ஓர் இலட்சியத்திற்காகப் பாடுபடுவதென்றால், அதன் தவிர்க்க முடியாத விளைவுகளுக்கெல்லாம் தயாராக இருக்கவேண்டும் என்ற உறுதி பிறந்தது.

டிக்மெரிடித்: ஆனால் உங்களுக்கு இருப்பது ஓர் உயிர்தானே?

திருமதி கிங்: ஆம், இருப்பது ஒரே உயிர்தான். அந்த ஒரே உயிரையும் மாபெரும் இலட்சியத்திற்காக அர்ப்பணித்தால், உலகை ஓர் அளவு உயர்த்தினோம் என்ற திருப்தியுடன் உயிரை விடுவோம்.

டிக்மெரிடித்: நீங்கள் இறப்பதால் கிடைக்கும் நன்மை என்ன?

திருமதி கிங்: ஒவ்வொருவனும் தான் எந்தக் குறிக்கோளுக்காக வாழ்கிறான் என்பதை எப்போதும்

முடிவு செய்து கொள்ள வேண்டும். ஒருவன் இதை உணர்ந்தால் வாழ்வு செழிப்புறும். 'நீங்கள் எவ்விதம் வாழ வேண்டும் என்பதை உணரும் வரை நீங்கள் நீங்களாக இருக்க முடியாது.' இதுதான் என் கணவர் கருத்து. நாம் ஒருவருக்கொருவர் தொண்டு புரிய வேண்டும். ஆண்டவன் நம்மைக் காப்பான். ஒன்றும் நேராது என்பதற்கில்லை. இந்த இலட்சியத்திற்காக என் கணவர் உயிரைப் பலிதானம் செய்ய வேண்டும் என்பது ஆண்டவன் சித்தமாக இருக்கலாம்.

டிக்மெரிடித்: உங்கள் கணவரைக் கொன்றுபோடுவார்கள் என்ற உண்மையை ஏற்கிறீர்களா?

திருமதி கிங்: என்ன நேர்ந்தாலும் சரி. எதற்கும் தயாராக இருக்க வேண்டும் என்று முயன்று வருகிறேன். ஒருவருடைய செல்வாக்கு அவருடைய மரணத்துடன் நின்றுவிடாது.

இப்பேட்டி நிகழ்ச்சியிலிருந்து அப்பொழுது அமெரிக்காவில் எத்தகைய நெருக்கடியான நிலை உருவாகி வந்தது என்பதை அறியலாம். சாத்துவிகப் போர்த் தளபதியாகிய லூதர்கிங்கை அப்பொழுது அபாயம் சுற்றி வளைத்து நெருங்கிக் கொண்டிருந்தது என்பதையும், அவரைச் சார்ந்தவர்களுடைய மன நிலையையும் இவ்வுரையாடல் நமக்கு உள்ளபடியே காட்டுகின்றது.

அமெரிக்க மக்களில் கிங்கின் போக்கை ஏற்றுக் கொள்ளாதவர்களுங்கூட அவரிடம் அன்பும் நல்லெண்ணமும் உடையவர்களாக இருந்தனர். ஆதலால் அவர் அபாயத்திற்கு உள்ளாவதை அவர்கள் விரும்பவில்லை. அவருக்கு எதிராகத் தோன்றி, வேகமாக அவரை அணுகிக் கொண்டிருந்த அபாயத்தை

அறிந்து கொள்வதில் ஆர்வமும், அதிலிருந்து அவர் தப்ப வேண்டும் என்பதில் அக்கறையும் காட்டினர். ஆனால் அவர்கள் கிங்கை அணுகி, நேரில், அவரை நெருங்கி வரும் இடுக்கண்ணை எடுத்துரைக்கவும், அதிலிருந்து தப்ப அவர் போக்கை மாற்றிக் கொள்ளும் படி கேட்டுக் கொள்ளவும் துணியவில்லை. இதுதான் சத்தியாக்கிரகிக்கு உள்ள தனிப் பெருமை. எனவே அவர்கள் கிங்கைச் சார்ந்தவர்களை அணுகி, தம் அச்சத்தையும் ஆவலையும் தெரிவித்துக் கொண்டனர்.

கிங்கைச் சார்ந்தவர்களுக்கும் அவ்வச்சமும் ஆவலும் இருந்தன. கிங் தீவிர சத்தியாக்கிரகி. அவர் அச்சத்தைக் கடந்தவர்; ஆசையை விட்டவர். ஆகவே உயிருக்கு அபாயம் என்பதனால் கொள்கையைக் கைவிடும்படியோ, போக்கை மாற்றிக்கொள்ளும் படியோ அவரைச் செய்ய முடியாது. அவரைச் சார்ந்த வர்களுக்கு இது தெரியும். நிலைமைக்கு ஏற்பத் தங்களைப் பக்குவப்படுத்திக் கொள்வதைத் தவிர அவர்கட்கு வேறு வழியில்லை. ஆகவே எந்த நிலைமையையும் அமைதியாக ஏற்றுத் தாங்கிக்கொள்ளத் தங்கள் உள்ளத்தையும் உணர்ச்சியையும் அவர்கள் பழக்கப் படுத்திக் கொள்ளலானார்கள்.

சத்தியாக்கிர்கியாக இருப்பதைவிட, அவரைச் சார்ந்தவர்களாக இருப்பது துன்பமானது. சத்தியாக் கிரகி தம்மை முற்றிலும் அந்நிலைக்குப் பண்படுத்திக் கொண்டு விடுகிறார். அவருக்குத் தம் உயிரினிடம் ஆசையோ, அதற்கு அபாயம் நேருமே என்ற அச்சமோ சிறிதும் உண்டாவதில்லை. சார்ந்தவர்களிடத் தில் பற்றுக்கும், அவர்கள் வருந்துவார்களே என்ற இரக்கத்திற்கும் அவர் இடம் கொடுப்பதில்லை. அவர் மற்றவரோடு உண்டு உறங்கி உறவாடி வாழ்ந்து

வந்தாராயினும், அவர்களுக்குரிய ஆசா பாசங்கள் தம்மை அணுக விடுவதில்லை. ஆனால் அவரைச் சார்ந்திருப்பவர்கள் நிலை, வேறு. அவர்கள் ஆசை, அச்சங்களிலிருந்து அறவே விடுபட்டவரல்லர். பாசமும் பரிவும் அவர்களை விடுவதில்லை. ஆகவே நெருக்கடி நேரும் பொழுது அவர்கள் நிலை வருந்தத் தக்க தாகின்றது. கிங்கின் மனைவியாரும், மக்களும், அவரைச் சார்ந்த பிறரும் அவ்வாறே வருந்தும் நிலையில் இருந்தனர். தங்களால் செய்யக்கூடியது ஒன்றும் இல்லாமையால் அவர்கள் எது நேர்ந்தாலும் ஏற்றுக்கொள்ளத் தயாராயினர்.

16. உயிர்த் தியாகம்

தமக்கு எதிராக வெறுப்பும் விரோதமும் ஒரு சிலரிடையே தோன்றி வளர்ந்து வருவது லூதர் கிங்குக்குத் தெரியாததன்று. தம் உயிருக்கு அபாயம் நேரக்கூடும் என்பதை, மற்றவர்களைவிட அவர் நன்றாக அறிந்தே இருந்தார். சத்தியாக்கிரகி எப்பொழுதும் உயிர்த் தியாகத்திற்குச் சித்தமாக இருக்க வேண்டும் என்பதை அவர் உணர்ந்திருந்தார். அதனால் அவர் அதனைப் பொருட்படுத்தவில்லை. அன்றியும், அஹிம்சைப் போரை நடத்துவோர் ஆபத்தான நிலையில்தான் துணிவோடு நின்று உறுதியாகச் செயலாற்ற வேண்டும். ஆகவே லூதர் கிங், சிறிதும் கலங்காமல் திட்டமிட்ட படி தம் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தி வந்தார்.

எங்கெங்கு எதிர்ப்புத் தலை தூக்குகிறதோ அங்கங்குச் சென்று, தம் இலட்சியத்தின் நியாயத்தையும், இயக்கத்தின் வலிமையையும், அதனை நடத்தும் தம் ஆத்ம பலத்தையும் காட்டி, அவ்வெதிர்ப்பு, தானே

தணிந்து அடங்கும்படிச் செய்ய வேண்டும் என்பது லூதர்கிங்கின் திட்டம். அதன்படி அவர் சென்ற ஆண்டு மார்ச்சு மாத இறுதியில் டென்னஸ்ஸி மாநிலத்தில் உள்ள மெம்பிஸ் நகருக்குச் சென்றார். அங்கு அவர் ஒரு விடுதியில் தங்கி, அந்நகரிலும் அதன் சுற்று வட்டத்திலும் நீகிரோக் குடியுரிமை இயக்கத்தின் சார்பில் கிளர்ச்சிகள் நடத்துவதற்கான ஏற்பாடுகளைக் கவனித்து வந்தார்.

மார்ச்சு மாதம் 28 ஆம் நாளான வியாழக்கிழமை யன்று அந்நகரில் நீகிரோக்களின் ஊர்வலம் ஒன்றைத் தலைமை தாங்கி நடத்தி வைத்தார். ஊர்வலத்தில் மூண்ட கலகத்தை அடக்கப் போலீசார் துப்பாக்கி கொண்டு சுட்டனர். அதன் விளைவாக நீகிரோ இளைஞன் ஒருவன் உயிரிழந்தான். அதனால் கொதிப்படைந்த நீகிரோக்களைச் சமாதானப் படுத்தவும், எதிரிகளின் வெறிச் செயல்களை அஹிம்சை முறையில் கண்டித்து அடங்கச் செய்யவும் முயன்று வந்தார். அதற்காக அவர் ஏப்ரல் மாதம் 8ஆம் நாளன்று சாத்துவிகக் கிளர்ச்சியொன்றை நடத்தக் கருதியிருந்தார்.

அப்பொழுது அந்நகரம் சிறிது அமைதியிழந்த நிலையில் இருந்தது. என்றாலும் லூதர் கிங், தாம் கருதியபடி கண்டனக் கிளர்ச்சியை நடத்த முடிவு செய்தார். அது பற்றித் தம் துணைவர்களோடு ஆலோசனை கலப்பதிலும், அதற்கான வழி முறைகளை வகுப்பதிலும், ஆயத்தம் செய்வதிலும் ஈடுபட்டிருந்தார்.

அதற்கு முன்னேற்பாடாக ஏப்ரல் 3-ஆம் நாள் மெம்பிஸில் நீகிரோக்களின் பொதுக்கூட்டம் ஒன்று

நடந்தது. அக்கூட்டத்தில் லூதர் கிங் பேசினார். அப்பேச்சில் பின்வருமாறு கூறினார் : "எனக்கு நெடுநாள் வாழவேண்டும் என்னும் ஆசை இல்லை. ஒரு மலையின் உச்சியிலே ஏறி மறுபுறத்தில் கனவை நனவாக்கும் வருங்கால உலகைக் காணும் வாய்ப்பைக் கருணை கூர்ந்து கடவுள் எனக்கு அளித்திருக்கிறார். அமெரிக்க நீகிரோக்கள் அந்த உலகில் வசிக்கும் பொன்னான நாட்களைக் கண்ணாரக் காண நான் உயிரோடு இல்லாமல் போகலாம். ஆனால் அது நடக்கும் என்பது மட்டும் திண்ணம்."

இக்கூற்று, அவர் தமக்குப் பின்னால் நடக்கப் போவதை முன்னால் அறிந்து கூறியதாக இருக்க முடியாது. இது மறுநாளே உண்மையாகப் போவதை அவர் எதிர்பார்த்திருக்கவும் முடியாது. ஆனால் ஏதோ ஒரு சக்தி அவர் உள்மனத்தில் புகுந்து இவ்வுரையை அவர் வாயிலிருந்து வெளிப்படும்படிச் செய்திருக்க வேண்டும்.

பொதுக்கூட்டம் நடந்த மறுநாள், அதாவது ஏப்ரல் மாதம் 4-ஆம் நாள் வியாழக்கிழமை இரவு கிங்கைப் பார்ப்பதற்காகப் பாதிரிமார் இருவர் அவர் தங்கியிருந்த விடுதியின் வாயிலில் காத்திருந்தனர். விடுதியின் இரண்டாவது மாடியில் உள்ள அறையொன்றில் கிங் தங்கியிருந்தார். அவர் அப்பொழுது தம் அறையின் முன்புறத்திலுள்ள 'பால்கனி'யில் நின்று கொண்டிருந்தார். நின்றிருந்தவர் எதற்காகவோ குனிந்தார். அச்சமயத்தில் திடீரெனத் துப்பாக்கி வெடிக்கும் சத்தம் கேட்டது. துப்பாக்கிக்குண்டு, குனிந்த லூதர்கிங்கின் முகத்தில் தாக்கியது. அவர் அப்படியே

பால்கனியில் சாய்ந்தார். குண்டுபட்ட காயத்திலிருந்து இரத்தம் பீறிட்டு வந்தது.

உடனே கிங்கின் உதவியாளர்கள் பால்கனிக்கு விரைந்தனர். ஒருவர் ஈரத் துணியைக் கொண்டு அவர் இரத்தப் பெருக்கைத் தடுத்து நிறுத்த முயன்றார். இன்னொருவர் அவர் முகத்தருகில் குனிந்து நின்று, "நான் பேசுவது கேட்கிறதா? நான் பேசுவது கேட்கிறதா?" என்று கேட்டார். கிங்கினிடமிருந்து பதில் இல்லை. அவர் வாய் மூடியிருந்தது. கண்கள் மட்டும் திறந்திருந்தன.

அதற்குள் கிங்கின் தோழர்களும் ஆதரவாளர்களும் விரைந்து வந்து விடுதியில் கூடினர். நாற்புறங்களி லிருந்தும் மக்கள் திரள் திரளாக வந்து விடுதி வாயிலில் குவிந்தனர். சில நிமிடங்களுக்குள் செய்தியறிந்து போலீஸ்படை விடுதிக்கு விரைந்தது. போலீஸார் விடுதியை வளைத்துக்கொண்டு யாரையும் வரவிடாமல் தடுத்து நிறுத்தினர். உடனே கிங் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். டாக்டர்கள் விரைந்துவந்து கிங்குக்கு அவசர சிகிச்சை அளிக்க முற்பட்டனர்; இரத்தப் போக்கை நிறுத்திப் பிராணவாயுவைச் செலுத்தினர். அவர்கள் கிங்கின் உயிரைக் காக்க அரும்பாடுபட்டனர். ஆனால் அவர்கள் முயற்சி வீணாயிற்று. கிங்கின் உயிர் மீளவில்லை. அன்பரின் புனித ஆன்மா ஆண்டவன் அடிகளில் அடைக்கலம் புகுந்து அடங்கிவிட்டது.

சிறிது நேரத்திற்குள் கிங் சுட்டுக் கொல்லப்பட்ட செய்தி மெம்பிஸ் நகரின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் எட்டிவிட்டது. அன்று இரவே அமெரிக்கா நாடு

முழுவதும் அச்செய்தி பரவிவிட்டது. எதிர்பாராத அச்செய்தியைக் கேட்டு அனைவரும் முதலில் அதிர்ச்சியடைந்தனர். ஆனால் சிறிது நேரத்திற்கெல்லாம் அந்நாட்டில் உள்ள பெரிய நகரங்களிலெல்லாம் ஆர்ப்பாட்டங்கள் ஆரம்பித்துவிட்டன. பல இடங்களில் கலகங்கள் மூண்டன. சூறையாடல், தீ வைத்தல் போன்ற வன்முறைச் செயல்களில்,ஆத்திரமடைந்த நீகிரோக்கள் ஈடுபட்டனர். கிங்கின் தோழர்கள் தங்கள் அருமைத் தலைவரின் அஹிம்சைக் கொள்கையைப் பின்பற்றி ஆத்திரமடையாமல் அமைதி காக்குமாறு நீகிரோ மக்களை வேண்டிக்கொண்டனர்.

கிங் கொல்லப்பட்ட ஒருமணி நேரத்திற்குள் அமெரிக்க ஜனாதிபதி ஜான்ஸன் தொலைக்காட்சியில் சிறப்புப் பேட்டி அளித்தார். அவர் அப்பேட்டியில் அமெரிக்க மக்களுக்குப் பின்வருமாறு கூறினார் :-

“டாக்டர் கிங்கின் உயிரைக் குடித்த கண்மூடித்தனமான இந்தப் பலாத்காரத்தை எல்லா அமெரிக்க மக்களும் உதறித் தள்ள வேண்டும். டாக்டர் கிங் மிருகத்தனமாகக் கொல்லப்பட்டதைக் கண்டு அமெரிக்கா அதிர்ச்சியும், துக்கமும் அடைந்திருக்கிறது. அஹிம்சையே அவர் வாழ்க்கை நெறியாக இருந்தது.

அமெரிக்காவினிடம் அவருக்கு மிகுந்த அன்பு உண்டு. இந்த நாட்டிற்கு அவர் செய்த சேவைகளையெலலாம் ஞாபகப் படுத்திக்கொண்டு அவருடைய குடும்பத்தினர் ஆறுதல் பெறவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன். இந்தப் பெரிய தலைவரின் மரணத்தைக் கேட்டு நல்லெண்ணமுள்ள ஒவ்வோர் அமெரிக்கரும் துக்கப்படுவார் என்று நான் அறிவேன்.

"சட்ட விரோதமான காரியங்களினுலோ, பிளவு களினுலோ நாம் எதையும் சாதிக்க முடியாது. நாம் ஒருமித்து நின்று வேலே செய்தால்தான் எல்லாருக்கும் சமவுரிமை என்ற இலட்சியத்தில் வெற்றி பெறமுடியும். எல்லா அமெரிக்கர்களுமே இன்று இரவு ஆத்ம சோதனையில் ஈடுபடுவார்கள் என்று நம்புகிறேன்."

இத்தொலைக் காட்சிப் பேட்டியை அடுத்து, அதிபர் ஜான்ஸன், பிரகடனம் ஒன்றை வெளியிட்டார். அதில் ஏப்ரல் மாதம் 7-ஆம் நாளாகிய ஞாயிற்றுக்கிழமையை டாக்டர் மார்ட்டின் லூதர் கிங்கின் மறைவிற்குத் துக்கம் காக்கும் நாளாக அறிவித்தார். அப்பிரகடனம் பின்வருமாறு :

இம்சையை ஒழிக்க உபதேசித்தும் உழைத்தும் வந்த மார்ட்டின் லூதர்கிங் அதற்கே பலியாகி விட்டார்.

ஆனுல் அவர் எந்த இலட்சியத்திற்காகப் போராடி வந்தாரோ அது வீழ்ந்து விடவில்லை. நீதியும், சகோதரத்துவமும் வேண்டுமென்று முழங்கிவந்த குரல் பறிக்கப்பட்டுவிட்டது -ஆனுல் அவர் அற்புதமாக வெளிப்படுத்திவந்த சுதந்திர வேட்கை நின்று நிலவுகிறது.

இம்சை வெற்றியடையாது தடுக்கவும்—மார்ட்டின் லூதர்கிங் வாழ்க்கையிலும் பணிகளிலும் சிறப்பூட்டி வந்த சகோதரத்துவக் கனவு நனவாகவும் எல்லா இனங்களேயும், சமயங்களேயும், இடங்களேயும் சேர்ந்த மக்கள் எல்லாரும் இந்த வேளேயில் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்.

எனவே, அமெரிக்க நாட்டு ஜனாதிபதியான நான், லிண்டன். பி. ஜான்ஸன், அமெரிக்கா முழுவதிலும் ஏப்ரல் ஏழாம் நாளைத் துக்க நாளாகக் கடைப் பிடிக்குமாறு அமெரிக்கர்கள் அனைவரையும் அழைக்கிறேன். நமது ஆலயங்களிலும், இல்லங்களிலும், நம் நம் இதயங்களிலும் நம் நாட்டின் பிரிவினையையும், அதன் விளைவுகள் அனைத்தையும் எதிர்த்து நிற்போம் என்று இறைவன் முன்னிலையில் நாம் உறுதி எடுத்துக் கொள்ளுவோமாக.''

கொலை நடந்த மறுநாள், லூதர் கிங்கின் சடலம் விமானத்தில் ஜார்ஜியாவிலுள்ள அட்லாண்டாவுக்குக் கொண்டு வரப்பட்டது. கொலையுண்ட கணவரைக் காண மெம்பிஸ் சென்ற கிங்கின் துணைவியாரான கோரெட்டா அம்மையாரும் அவர் சடலத்துடன் அவ்விமானத்திலேயே திரும்பி வந்தார். கிங்கின் சடலத்தைக் காணவும், அவருக்கு இறுதி வணக்கம் செலுத்தவும் அட்லாண்டாவில் பல்லாயிரக் கணக்கான மக்கள் கூடிக் காத்திருந்தனர். அட்லாண்டா நகரில் உள்ள ஒரு கல்லூரியின் தேவாலயத்தில் கிங்கின் சடலம் கொண்டு வந்து வைக்கப்பட்டது. ஆயிரக் கணக்கான மக்கள் வரிசையாகச் சென்று தங்கள் உள்ளம் கவர்ந்த உத்தமத் தலைவர் உடலைத் தரிசித்து அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர். அவர்கள், பொங்கி யெழுந்த துக்கத்தை அடக்க மாட்டாமல் புலம்பிக் கண்ணீர் பெருக்கினர்.

ஏப்ரல் மாதம் 9 ஆம் நாளன்று எபெனெஸர் பாப்டிஸ்டு திருச்சபையில் அடக்கதினப் பிரார்த்தனை நடந்தது. மதகுருவாக இருந்தபோது லூதர் கிங்கும், அவர் தந்தையாரும் பல பிரார்த்தனைகள் நிகழ்த்திய திருக் கோயில் அது. கட்டுக்கடங்காத மக்கள் கூட்டத்தால் தொடக்கத்தில் சிறிது குழப்பமாயிருந்தது. காலம்

சென்ற அதிபர் கென்னடியின் மனைவியாரான ஜாக்குலின் கென்னடியும் உள்ளே புகமுடியாமல் திணறினர். பிறகு வெண்கவசம் தரித்த போலீஸ் படையினர் மிகவும் சிரமப்பட்டு அவரை அக்கோயிலுக் குள் கொண்டு சேர்த்தனர்.

மன்னர் என்னும் பொருளுள்ள கிங்குக்கு மன்னருக் கும் கிடைக்காத அடக்கம் கிடைத்தது. ஜனாதிபதி ஜான்ஸன் சார்பில், துணை ஜனாதிபதியான ஹம்ப்ரீயும், காலஞ் சென்ற அதிபர் கென்னடியின் சகோதரரான ராபர்ட் கென்னடியும், கவர்னர்களான ரோம்னி, ராக் பெல்லர் ஆகியோரும், சுப்ரீம் கோர்ட்டு நீதிபதியும், பெரு நகரங்களின் மேயர்களும் பிரார்த்தனையில் கலந்து கொண்டனர். கிறித்தவ சமய முறைப்படி கிங்கின் உடல் அடக்கம் செய்யப்பட்டது.

மக்களினம் அமைதி காணவேண்டும் என்பதற்காக அல்லும் பகலும் அமைதியின்றி அலைந்த அன்புருவ மாகிய கிங்கின் ஆன்மா ஆண்டவனின் அருள் நிழலில் அமைதி கண்டது. ஒடுங்காத உறுதியோடு அச்சுறுத் தலுக்கும், வெறியாட்டத்திற்கும், அடக்கு முறைக்கும் அடங்காமல், அஹிம்சை ஆயுதம் தாங்கி, சாத்துவிக முறைபற்றிப் போராடி வந்த புனிதமான அவர் பொன் னுடல் சமாதியில் புகுந்து அடங்கி விட்டது.

லூதர் கிங் தனி வாழ்விலும், பொது வாழ்விலும் காந்தியடிகளையே முற்றிலும் பின்பற்றினர்; கடவுளிடத் தில் கலங்காத பக்தியும், பிரார்த்தனையில் உறுதியான நம்பிக்கையும் கொண்டிருந்தார்; உள்ளத்தில் உண் மையும் உயிர்களிடத்தில் அன்பும் கொண்டு ஒழுகினர். அவர், காந்தியடிகளின் அஹிம்சைத் தத்துவத்தை முழு நம்பிக்கையோடு ஏற்றுக் கொண்டார். எதிரி மனம்

மாறி நியாயத்தைத் தானுகவே முன் வந்து ஒப்புக் கொள்ளச் செய்யும் காந்தியடிகளின் அறப்போர் முறையையே தாமும் கையாண்டார்; சோதனைகளுக்கு ஈடு கொடுத்தார். வாழ்விலும் தாழ்விலும் வெற்றியிலும் தோல்வியிலும் அடிகளின் அடிச்சுவட்டிலேயே அடி வைத்து நடந்து கொண்டார். அவர், முடிவில் மரணத்திலும் அவர் வழியை விட்டு விலகாமல், அவரைப் போலவே அமைதிப் பணியில் ஈடுபட்டிருக்கும் போது, அறிவிழந்த ஒரு வெறியனின் துப்பாக்கிக் குண்டுக்கு இரையானுர். அன்பர் ஆபிரகாம்லிங்கனுக்கும், அறிஞர் கென்னடிக்கும் அமைத்துத் தந்த அந்த வழியையே அவருடைய அருமைத் தாய் நாடு அவருக்கும் திறந்து வைத்தது. அவ்வழியே சென்ற அறப்போர் வீரர் லூதர் கிங்கும் அவர்கள் வரிசையில் ஒருவராக இடம் பெற்று விட்டார்.

அனைத்துலக மக்களும் தம்முள் எவ்வித வேறுபாடுமின்றி, சம உரிமையோடு ஒரு சமூகமாக வாழவேண்டும் என்னும் உயர்ந்த கொள்கையை உலகத்திற்கு உணர்த்தி வருவது நம் நாடு. அதனையே தம் வாழ்வின் இலட்சிமாகக் கொண்டு உழைத்து உலகிற்கு உணர்ச்சியூட்டி வழி காட்டினுர் நம் காந்தியடிகள். அடிகள் காட்டிய வழியில் அதே இலட்சியத்திற்காகப் பாடுபட்ட லூதர் கிங்கிடம் நமக்கு அன்பும் அனுதாபமும் உண்டு. ஆகவே அவர் கொல்லப்பட்ட செய்தி நம் நாட்டுத் தலைவர்களையும் மக்களையும் அதிர்ச்சியடையச் செய்தது. அவர் மறைவை நம் நாட்டு மக்களும் தம் சொந்த இழப்பாகவே கருதினர்.

நம் பாரதப் பிரதம மந்திரியாகிய இந்திரா காந்தி அவர்கள், லூதர்கிங் சுடப்பட்ட செய்திஅறிந்து அதிர்ச்சி

யடைந்தார். அவர், "உலகப் பெரியார்களில் ஒருவர் வன்முறைக்குப் பலியாகி விட்டார். டாக்டர் லூதர் மார்ட்டின் சுட்டுக் கொல்லப்பட்டது, ஒளியைத்தேடி மனித வர்க்கம் செய்யும் முயற்சிக்கு இடையூறுகும்" என்று கூறித் தம் வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டார்.

நம் தமிழக முதல் அமைச்சர் திரு. சி. என் அண்ணுதுரை கிங்கின் கொலே குறித்து ஓர் அறிக்கை வெளியிட்டார். அதில் அவர் பின்வருமாறு குறிப்பிட்டார்:

"இன சமத்துவத்தின் காவலன், சமாதானத்தூதன் மனித மாண்பு காப்பாளனுன டாக்டர் மார்டடின் லூதர்கிங் வெறியனுல் சுட்டுக் கொல்லப்பட்ட திடுக்கிடும் செய்தியைக் கேட்டதும் உண்டான அதிர்ச்சியை, மன வேதனையை வெளியிட முயலும்போது வார்த்தைகள் வரவில்லே.

"மனித சகோதரத்துவத்தை இலட்சியமாகக் கொண்ட எல்லாரும் அவரிடம் பெருமதிப்பு வைத்திருந்தனர். இன வெறிக்கு எதிராக டாக்டர் கிங் நடத்தி வந்த புனிதப் போரை உலகம் முழுதும் பாராட்டியது. அவர்,இன ஆணவத்தையும், காட்டு மிராண்டிக் தனத்தையும் வெற்றி கிடைக்கும் என்ற திட நம்பிக்கையோடு எதிர்த்தார். அவரை ஒரு வெள்ளே வெறியன் கொன்றதை உலகம் முழுதும் கண்டிக்கும்.

"டாக்டர் கிங், தியாக சீலனுக மரணம் எய்திஞர். உண்மை! ஆனுல் நிறத்தின் பேரால் தலேவிரித்தாடிய மிருகச் செயலே என்னவென்பது? இதை எப்போது, எப்படி ஒழிப்பது? இத்தகைய இன வெறிக்கு இன்னும் எத்தனேப்பேர் பலியாவது? மற்றுமொரு மிருகச் செய

லுக்கு இதை உதாரணமாகக் கொள்வதற்கில்லை. நீதி, நேர்மையை ஒழிக்கப் புகுந்துள்ளவர்கள் மீது எழுப்பிய அறைகூவல் இது; மனித குல நலனுக்கு உகந்தது. இத்தகைய காட்டுமிராண்டிச் செயலை ஆட்சேபித்து உலக முழுதும் எழவேண்டிய தருணம் வந்து விட்டது. தியாக சீலனை வணங்குவோம், அதோடு, அவருக்கு உயிருக்குயிரான இலட்சியத்திற்கு நம்மை அர்ப்பணித்துக் கொள்வோம். ஜாதி, மதம், இனம் அல்லது நிறம் எதையும் பாராட்டாத மனித சமத்துவத்தை நிலை நாட்ட வேண்டும்.''

நமது நாடாளும் மன்றத்தில் மறைந்த கிங்குக்கு அஞ்சலி செலுத்தி அனுதாபம் தெரிவிக்கப் பட்டது. எல்லாக் கட்சித் தலைவர்களும் அனுதாபத்தில் கலந்து கொண்டனர். அங்கத்தினர் தம் தம் இடங்களில் எழுந்து நின்று மரியாதை செலுத்தினர்.

நம் நாட்டுச் செய்தித்தாள்கள் அனைத்தும் முதல் பக்கத்தில் கிங்கின் உருவப் படத்தோடு அவர் கொல்லப் பட்ட செய்தியை விரிவாக வெளியிட்டன. முக்கியமான செய்தித்தாள்கள் அவர் வாழ்க்கை வரலாற்றையும், சேவையையும் விளக்கித் 'தலையங்கம்' எழுதிச் சிறப்பித்தன.

17. சொல்லும் செயலும்

புனிதர் லூதர் கிங் அஹிம்சையை அறக் கொள்கையாக, ஆன்ம இலட்சியமாகக் கொண்டவர். காந்தியடிகளைப் போலவே அவர் அதனைத் தம் வாழ்க்கை முறையாக ஆக்கிக்கொண்டு அதனோடு இரண்டறக் கலந்து வாழ்ந்தார். அவருக்கு அது வெறுங் கருவியாக மட்டும் இல்லை; அதனால் அடையப்படும் பயனாகவும் அமைந்தது.

எனவே அவர் அதனைக் கண்மூடித்தனமாகக் கையாள வில்லை; நுணுகி ஆராய்ந்து அதன் நுட்பங்களைக் கண்டறிந்து தெளிவு பெற்ருர். பிறரால் அறிய முடியாத, பிறருக்கு விளங்காத அதன் அறிய தத்துவங்கள் அவருக்குத் தெளிவாகத் தெரிந்தன.

டாக்டர் கிங் 1963ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 6ஆம் நாள் ஹாவர்டு பல்கலைக் கழகத்தில் 'காந்தி நினைவுப் பேருரை' நிகழ்த்தினுர். அஃது அஹிம்சைத் தத்துவம் பற்றிய அரிய ஆய்வுரையாக அமைந்தது. அதன் சுருக்கம் வருமாறு:

''நம் நாட்டில் இன உறவுகளில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது என்பதை மறுப்பதற்கில்லை. விடுதலைச் சக்திகளும் ஆதிக்கச் சக்திகளும் மோதுவதனுல் விளைந்துள்ள நெருக்கடி இது.

பொதுப் பள்ளிக்கூடங்களில் இன ஒதுக்கல், சட்ட விரோதம் என நாட்டின் உயர்நீதி மன்றமான 'சுப்ரீம் கோர்ட்டு' தீர்ப்பளித்து விட்டது. இந்தத் தீர்ப்புக்குக் காட்டப்பெறும் எதிர்ப்பே இந்த நெருக்கடியை முக்கியமாக எடுத்துக் காட்டுகிறது. சில சமயங்களில் இந்த எதிர்ப்பு, அச்சமூட்டும் வகையில் மிகக் கடுமையாகி விடுகிறது. ஆனுல் பழைய இன ஒதுக்கல் கொள்கை செல்லாக் காசாகிவிட்டது. இப்பொழுது அமெரிக்கச் சமுதாயம் இன ஒதுக்கல் ஒழிப்பு, இன இணைப்பு, மக்களுடன் மக்கள் உறவாடல் முதலிய கொள்கைகளையே ஆதரித்து நிற்கிறது.

மூன்று வழிகள்: அடக்கி ஒடுக்கப் பெற்றுள்ள மக்கள் அடக்கு முறையை எதிர்த்து நிற்க மூன்று வழிகள் உள்ளன. ஒரு வழி அடங்கிக்கிடப்பது; அடக்கு முறை

களுக்கு ஆளாகியிருப்பதுதான் தலைவிதி என்றும், அப்படியே அடக்குமுறைக்கு அடங்கி ஒடுங்கிக் கிடப்பது தான் வெல்லும் வழி என்றும் நினைப்பவர்கள் இருக்கிறார்கள். வேறு சிலர் இருக்கிறார்கள்—அப்படியே சரணடைந்து விடுபவர்கள். இருந்துவரும் அடக்கு முறை நிலைக்கு அவர்கள் பழகிக்கொண்டு விட்டவர்கள். 'இந்த நிலையிலேயே வாழ்ந்துவிட்டுப் போவோமே, பழைய நிலையை மாற்றிப் புதிய நிலையைத் தோற்று விப்பதில் ஏற்படக்கூடிய துன்பங்களை அனுபவிப்பானேன்' என்று நினைப்பவர்கள் அவர்கள்.

இது அடிபணிந்து போகும் முறை—ஆனால் இஃது அல்ல வழி. சில சமயங்களில் இதுவே எளிய வழியாகத் தோன்றக்கூடும். ஆனால் இது கோழையின் வழி. ஏனெனில் தீங்கான ஒரு முறையை ஏற்று அதற்கு அடி பணிந்து கிடக்கும் ஒருவர் அந்தச் சமயத்தில் அந்தத் தீயமுறைக்கு ஆதரவுகொடுத்து அதில் பங்கு கொள்பவராகிறார். எனவே, அநீதியான அந்த முறை நீடித்து நிலைத்து இருப்பதற்கு அவரும் பொறுப்பேற்க வேண்டியவராகிறார்.

அடக்கு முறைக்குள்ளான மக்கள் அடக்குமுறையை எதிர்த்து நிற்க இரண்டாவது வழி ஒன்று உள்ளது. அது வன்செயலில் இறங்கி, வன்மம் மேலோங்கி நிற்க, அடக்குமுறையை எதிர்த்து நிற்பதாகும்.

நமக்கு இந்த முறை நன்றாகத் தெரிந்ததுதான். வன்செயல் ஒருக்காலும் பயனளிக்கவில்லை என்று கூற நான் இங்கு வரவில்லை. வரலாற்றைப் படிப்பவர்கள் உடனே கண்டு கொள்வது என்ன? நாடுகள் தம் சுதந் திரத்தை வன்செயலின் மூலமே அடைந்திருக்கின்றன

என்பதுதான்; ஐயமில்லை. ஆனல் அதற்குத் தற்காலிக வெற்றிதான் கொணர முடியுமே தவிர, நிரந்தர அமைதியைக் கொணர அதனுல் முடியாது. அது மட்டுமா? பலப்பல சமுதாயப் பிரச்சினைகளைக் கிளப்பி விட்டுத்தான் வன்செயல் நிற்கும். காலப்போக்கில் பார்க்கையில், இன நீதிக்கு வன்செயலில் இறங்குவது, நடைமுறையில் சாத்தியமானதன்று; அது நெறியற்றது மாகும் என்பது தெளிவாகும். பல காரணங்களை முன்னிட்டு அது நடைமுறைக்கு ஒவ்வாதது. மிகச் சிறந்த காரணங்களில் ஒன்று, நமது பகைவர்களில் பலர் நாம் வன்செயல் புரட்சியொன்றில் இறங்குவதை மிகவும் விரும்புவர் என்பதுதான். ஏனெனில் அவர்கள் இதைச் சாக்காக வைத்துக் குற்றமற்ற மக்களைக் கலகம் செய்யத் தூண்டுகின்றனர் என்று காரணம் சொல்லி, கொன்று குவிப்பவர்.

வன்செயல் நடை முறையில் சாத்தியமன்று என்பதற்கு இன்ஞெரு காரணம், பழிக்குப் பழி என்ற பழைய கோட்பாடு, எல்லாரையுமே பழி வாங்கிவிடுவதில் வந்து முடியும். இந்த முறை தவறு. இது நெறியற்றது மாகும். ஏன் நெறியற்றது என்ருல், எல்லாருடைய அழிவுக்கும் அது காரணமாகிறது. ஏன் தவருனது என்ருல், எதிரிகளிடம் மனமாற்றம் உண்டு பண்ணுவதற்கு மாருக எதிரிகளை ஒழித்துக் கட்டுகிறது.

அஹிம்சை: எனவே நமது பர்மிங்ஹாமிலும், இன்னும் சில ஊர்களிலும் துயர நிகழ்ச்சிகளைக் கண்டும்கூட, அஹிம்சைதான் நம்முடைய சிறந்த ஆயுதம் என்பதில் நான் இன்னும் திட நம்பிக்கை கொண்டிருக்கிறேன். சுதந்திரமும் நீதியும்பெற நீகிரோ நடத்தும் போராட்டத்திற்கு வலிமை மிக்கதோர் ஆயுதமாக இருப்பது

அஹிம்சைதான். போராட்டத்தில் வன்செயலைப் பயன் படுத்தும் ஆசைக்கு நாம் பலியாகி விடுவோமாகில், இனிப் பிறக்கப்போகும் சந்ததிகளுக்குக் கிடைக்கும் பரிசு, கடுமையான மனக்கசப்பு; நெடுங்காலம் நீடித் திருக்கும் மனக் கசப்புத்தான்.

இன்னொரு வழி இருக்கிறது. அதுதான் மூன்றாவது வழி; அஹிம்சை முறையைக் கையாண்டு எதிர்க்கும் வழி. நெருக்கடி மிக்கதான மாறுதல் நிகழும் இக் காலத்தில் இந்த முறைதான் நமக்கு வழி காட்டும் என்று நான் கருதுகிறேன். நாம் பழைய ஒழுங்கிலிருந்து புது ஒழுங்குக்கு மாறி வருகிறோம். எனவே ஒரு புது யுகம் பிறப்பதிலே காணப்பெறும் தவிர்க்க முடியாத பிரசவ வேதனையும், தவிர்க்க முடியாத விறைப்பு நிலையும் நமக்கு இப்பொழுது இருக்கின்றன.

ஆனால் இப்புதிய யுகத்தின் தத்துவங்களையும், இலட்சியங்களையும், கோட்பாடுகளையும் அடையக்கூடிய முறை அஹிம்சை முறைதான் என்று நான் நம்புகிறேன்.

இந்தத் தத்துவத்தையும் இதன் அடிப்படையான பொருளையும் நாம் இப்பொழுது சற்று ஆராய்வோம். அஹிம்சையைப்பற்றி நிறையப் பேசியிருக்கிறோம். அதனால்தான் இந்த முறைக்கு ஓர் ஆதாரத் தத்துவம் இருக்கிறது என்பதை நாம் உணரத் தவறிவிடுகிறோம். முதன் முதலாக, அஹிம்சைத் தத்துவமே அடித்துச் சொல்வது என்னவென்றால், நாம் பயன்படுத்தும் வழிகள், நாம் அடைய நாடும் இலட்சியங்களைப் போலவே தூய்மையாக இருக்கவேண்டும் என்பதாகும். வழிகளும் இலட்சியங்களும் இசைவாக இருக்க வேண்டும். வழிகளும் இலட்சியங்களும் பிரிக்க முடியாதவை. வழிகள், உருவாகும் குறிக்கோளைப் பிரதி

பலிக்கின்றன; வரலாற்றின் நெடுங்காலப் போக்கிலே, அழிவுகரமான வழிகளால் ஆக்கமான இலட்சியங்களைக் கொணர முடியாது. நெறியற்ற வழிகள் நெறியான இலட்சியங்களைத் தோற்றுவிக்க முடியா. எனவே வழி களும் இலட்சியங்களும் இசைவாக இருத்தல் வேண்டு மென்று வலியுறுத்துகிறது அஹிம்சை; நெறியான வழிகள் மூலம் உண்மையான இலட்சியங்களை அடைய, இடையருத கடினமான முறைதான் அஹிம்சை என்பது.

அஹிம்சையைப்பற்றி நான் தெளிவாகக் கூற விரும்பும் இரண்டாவது விஷயம் இதுதான். எதிரிக்குத் தீங்கு செய்யவேண்டும் என்ற நோக்கமே ஒருவருக்கு இருக்கலாகாது என்று அடித்துக் கூறுகிறது அஹிம்சை. இந்தியத் தத்துவத்திலும் இக் குறிக்கோளை ''அஹிம்சை''—தீங்கு செய்யாமை—என்று அவர்கள் கூறுகின்றனர்.

அஹிம்சை கட்டுப்பாட்டுக்கும் அஹிம்சை கோட் பாட்டுக்குமிடையே இருக்கிறது இது. இரண்டு அம் சங்கள் இதற்கு உண்டு.

முதலாவதாக: அடி உதைகளைத் தவிர்க்கிறோம். இது உறுதி. அஹிம்சை முறைப்படியான கிளர்ச்சி ஒன்றில் பங்குபெறத் தயாராக வரும் ஒவ்வொரு வருக்கும் நாம் சொல்வது என்னவென்றால், நீங்கள் அடிபட்டால் பதிலடி கொடுக்கக்கூடாது என்பதாகும். பதிலடி கொடுக்காமல், அடிகளை ஏற்கக்கூடிய நிலைக்கு நீங்கள் உயரவேண்டும். எனவே தீங்கு செய்யாமல் இருத்தல் என்பதற்குப் பொருள் அடி உதை கொடுக்க நீங்கள் மறுக்கிறீர்கள் என்பதாகும். ஆனால் அத்துடன் நீங்கள் நிற்பதில்லை. உங்கள் பகைவனை வெறுக்க மறுக்கும்

நிலையைக் குறித்தும் நீங்கள் இடைவிடாமல் முன்னேறு கிறீர்கள். உங்கள் பகைவனை நேசிக்கும் நிலைக்கே நீங்கள் வந்து விடுவீர்கள்.

இந்த விஷயத்தில்தான் பல பேருக்குக் குழப்பம் ஏற்படுகிறது. என்னிடம் அவர்கள் அடிக்கடி கேட்கின் றனர். 'பகைவனை நேசியுங்கள் என்று நீங்கள் கூறு வதன் பொருள்தான் என்னவோ?' என்று. ஒரு நாள் நான் உரை நிகழ்த்திவிட்டு வந்த பின்னர் ஒருவர் என்னிடம் சொன்னார்: 'அஹிம்சைத் தந்திரத்தை நான் கையாளலாம்; அதுதான் சிறந்த தந்திரம், சிறந்த முறை' என்று நீங்கள் கூறுவது சரியன்றே நான் நினைக்கிறேன். ஆனால் இந்த 'நேச' விஷயம் பற்றி நீங்கள் பேசத் தொடங்கும் போதுதான் உங்களை எனக்குப் புரியவில்லை.'

சரி இந்த 'நேச' விஷயம் இருக்கிறதே அதுதான் அஹிம்சையின் மையமானது; தீங்கு செய்யாமையின் மிகச் சிறந்த நிலைதான் நேசம் என்பது. இந்த இடத்தில் நேசம் என்பதைப் பலர் தவருகப் புரிந்துகொண்டிருக் கின்றனர் என்றே நான் நினைக்கிறேன். 'நேசம்' என்பது பற்றிப் பேசுகையில், உணர்ச்சிவயமான, அன்புவயமான நேசத்தைப் பற்றிப் பேசுகிறதாக அவர்கள் நினைக்கி ருர்கள். இது முட்டாள் தனமானது என்று கூற நானே முதலில் முன் வருவேன். அடக்கி ஒடுக்கப் பெற்ற மக்கள் தம் பகைவர்களை உள் அன்புடன் நேசிக்க வேண்டும் என்று வலியுறுத்துவது முட்டாள் தனமாகும். அவ்வாறு நேசிப்பது கடினம்; அநேகமாக அசாத்தியமாகும்.

எனவே அந்த நேசம் என்பதை விளக்க நான் முயலுகையில், நான் கிரேக்க மொழியின் உதவியை

நாடுகிறேன். அந்த மொழியிலே 'அகபி' என்ற ஒரு சொல் இருக்கிறது.

சரி, இதைக் கவனிப்போம். 'அகபி' காதல் உணர்ச்சிக்கோ அதுபோன்ற அன்புக்கோ அப்பாற் பட்டது. நட்பு என்பதற்கும் அப்பாற்பட்டது. எல்லா மக்களிடையேயும் நல்லுணர்வு, ஆக்கமான உறவு, நல்லெண்ணம் இவை எல்லாம் தான் அகபி என்பதற்குப் பொருள். கைம்மாறு கருதாத, அளவு கடந்து பெருகும் அன்புதான் அகபி. இறைவனின் அன்பு இது என்றும், அது மனிதர்களின் உள்ளங்களிலே சுரக்கிறது என்றும் சமய வல்லுனர்கள் கூறுகின்றனர். இந்த முறையிலே நேசிக்கும் நிலைக்கு மனிதன் உயர்ந்து விடுவானே யாகில் அவன் எல்லாரையும் நேசிப்பான். அவன் பார்க்கும் ஒவ்வொருவரும் அவனுக்குப் பிடித்திருக்கிறார் என்பதன்று இதற்குக் காரணம். ஒவ்வொருவருடைய வழியும் உள்ளத்திற்குப் பிடித்திருக்கிறது என்பதன்று காரணம். அவன் ஒவ்வொருவரையும் நேசிப்பதற்குக் காரணம் இறைவன் அவனை நேசிக்கிறார் என்பதாகும். தீயகாரியம் செய்யும் ஒரு நபரைக்கூட நேசிக்கும் நிலைக்கு அவன் உயர்ந்துவிடுகிறான். அவன் வெறுப்ப தெல்லாம் அந்த நபரின் தீய காரியங்களை மட்டுமே யாகும்.

இலட்சியம் : எப்பொழுதும் அடைய வேண்டிய இலட்சியம் ஒன்று இருக்கத்தான் செய்யும். இதனைச் செய்வதற்குச் சாத்தியமான இடத்திலே போராட்ட முறை ஒன்றை வைத்துக் கொள்வதும் அழகாகவே இருக்கும். ஏனெனில் வெறுப்பு எவ்வளவு ஆபத்தானது என்பதை நாம் உணரத் தொடங்கி விட்டோம். வெறுக்கப்படுபவருக்கு வெறுப்பு எவ்வளவு கெடுதலோ அவ்வளவு வெறுப்பவருக்கும் கெடுதல்.

எனவே அஹிம்சையைக் கடைப்பிடிப்பவர் தம் எதிரியிடம் சொல்வது இதுதான்: துன்பத்தை விளைவிக்க உங்களுக்கு இருக்கும் ஆற்றலுக்கு, துன்பத்தைத் தாங்குவதற்கு எங்களிடம் இருக்கும் ஆற்றலை ஈடு கொடுப்போம். உங்களுடைய மிருக பலத்தை எங்களுடைய ஆன்மீக பலம் கொண்டு எதிர்ப்போம். நீங்கள் எங்களுக்கு என்னதான் செய்தாலும் சரி, அப்போதும் உங்களை நாங்கள் நேசிக்கவே செய்வோம். ஆனால் எங்களுடைய மனச்சாட்சிக்குக் கட்டுப்பட்டு உங்களுடைய அநியாயமான சட்டங்களுக்கு நாங்கள் கீழ்ப் படியமுடியாது. எனவே எங்களைச் சிறையில் தள்ளுங்கள். சிறைக்குச் செல்லும் போதும் உங்களை நேசிப்போம். ஆனால் உங்களுக்கு ஒன்று கூற விரும்புகிறோம். துன்பத்தைத் தாங்கிக் கொள்ள எங்களுக்கு இருக்கும் ஆற்றலைக் கொண்டே உங்களைச் சோர்வடையச் செய்வோம். என்றைக்காவது ஒரு நாள் எங்களுடைய சுதந்திரத்தை நாங்கள் அடைந்தே தீருவோம். உங்கள் உள்ளத்தையும் உங்கள் மனச்சாட்சியையும் நாங்கள் கவர்ந்து உங்கள் மீதும் வெற்றி கொள்வோம். எனவே எங்கள் வெற்றி இரட்டை வெற்றியாக இருக்கும்.

அஹிம்சையின் மிக ஆழ்ந்த கருத்து இதுதான், இதுதான் எதிரியைச் சோர்வடையச் செய்கிறது; அவனிடம் நெறி இல்லை என்பதை அம்பலபடுத்துகிறது; அவனை அதைரியம் அடையச் செய்கிறது; அவனுடைய மனச்சாட்சியைக் குடைந்தெடுக்கிறது; நிலைமையைச் சமாளிக்கத் தெரியாமல் அவனை விழிக்கச் செய்கிறது.

அவன் உங்களைச் சிறைக்குள் தள்ளவில்லை என்றால் அது அற்புதம்தான். ஆனால் சிறைக்குள் தள்ளி விட்டானானால், அவமானச் சின்னமான சிறைக்

கூடத்தை மனித மாண்பும், சுதந்திரமும் குடி கொள்ளும் கோயிலாக மாற்றி விடுவீர்கள். அவன் உங்களைக் கொல்ல முயன்றாலும்கூட, உயிர்த் தியாகம் செய்வதற்குத் தகுதியான விஷயங்கள், என்றென்றும் நிலைத்திருக்கும் அருமையான விஷயங்கள் இருக்கின்றன என்ற நம்பிக்கை, உங்கள் உள்ளத்திலே சுடர் விடும். தனது உயிருக்கும் மேலான, உயிர்த் தியாகம் செய்யக் கூடிய ஒரு இலட்சியத்தை மனிதன் கண்டுகொள்ள வில்லையானால், அவன் வாழ்வதிலும் வாழாமை நன்று.''

டாக்டர் கிங் ஐந்தாண்டுகட்கு முன் பேசியது இது. இப்பேச்சில் அவர் அஹிம்சை என்பது, உயிரினும் மேலான, உயிர்த்தியாகம் செய்வதற்கு ஏற்ற ஒரு தத்துவம்—இலட்சியம் என்று சொன்னார். அவர் இதனைப் பிறருக்குச் செய்யும் உபதேசமாகச் சொல்ல வில்லை; ஐந்தாண்டுகட்குப் பின்னர் இதனைத் தம் வாழ்க்கையிலேயே செயற்படுத்திக் காட்டினார்; தாம் கடைப்பிடித்த அஹிம்சைத் தத்துவத்திற்காக, இலட்சியத்திற்காகத் தம் உயிரையே தியாகம் செய்தார்.

டாக்டர் கிங் மறைந்து விட்டார். ஆனால் அவர் சொல்லும் செயலும் என்றும் மறைய மாட்டா. அவர் சொல், வருங்காலச் சந்ததிகட்கு நிலையான உபதேச மொழியாக நின்று, உங்கள் உள்ளங்களில் உண்மை யொளி யூட்டும். அவர் செயல், உங்களுக்கு வழிகாட்டி, வாழ்வளிக்கும்.

கட்டுரைப் பயிற்சி

கீழ்க்காணும் பொருள்கள் பற்றி இரண்டு பக்கங்கட்கு மிகாமல் கட்டுரைகள் வரைக:

1. உலக அமைதிக்கு உழைத்த உத்தமர்கள்
2. லூதர் கிங்கின் பிறப்பும் இளமையும்
3. பள்ளிக்கூட நாட்கள்
4. குற்றத்திற்கு வருந்தும் குணம்
5. அடிமைத் துன்பமும் உரிமைக் கனவும்
6. இலட்சிய யாத்திரைக்குத் தயாராதல்
7. போர்க்கொடி உயர்த்தல்
8. மக்களுரிமை இயக்கம்
9. சமாதானப் பரிசு
10. எதிர்ப்பும் கொதிப்பும்
11. உத்தமரின் உயிர்த்தியாகம்
12. அஹிம்சைத் தத்துவ விளக்கம்